பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 வள்ளுவர் ஆண்டு 2049 மாசி 16 புதன்கிழமை 28.02.2018 கதிர் 115

காலைக்கதிர் Kalaikkathir
விளம்பர சேகரிப்பாளர் பணிக்கு ஆள்கள் தேவை.
மேலதிக விவரங்களுக்கு தொடர்பு கொள்ள
021 222 2600, 077 311 9298, 075 313 2876

## சர்வதேச நீதிப்பொறிமுறை முன் இலங்கையை நிறுத்து ஐ.நாவே!

### வடமாகாண சபையில் ஏகோபித்த தீர்மானம்

யாழ்ப்பாணம், பெப்ரவரி 28

போர்க்குற்றங்களுக்குப் பொறுப்புக் கூறுவதற்காக இலங்கையைப் பன்னாட்டு நீதிப் பொறிமுறை முன்நிறுத்தவேண்டும் என ஐ.நா. மனித உரிமைகள் சபையிடம் வலியுறுத்தும் தீர்மானம் வடக்கு மாகாண சபையில் நேற்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

பக்கம் 18

## குகதாஸின் கன்னி உரை ஜெனீவா செல்கின்றது!

### முதல்வரின் கோரிக்கையை அடுத்து

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், பெப்.28

வடக்கு மாகாண சபை உறுப்பினர் குகதாஸின் கன்னி உரையை ஐ.நா. மனித உரிமை ஆணையாளருக்கு அனுப்பி வைக்குமாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்கினேஸ்வரன் அவைத் தலைவரிடம் கோரியுள்ளார்.

வடக்கு மாகாண சபையின் 117 ஆவது அமர்வு நேற்றுக் கைதடியில் உள்ள பேரவைச் செயலகத்தில் நடைபெற்றது.

பக்கம் 03

## அம்பாறை நகரில் பெரும் பதற்றம்!

### பள்ளிவாசல், முஸ்லிம் கடைகள் உடைப்பு வாகனங்களும் எரிப்பு; குண்டர்கள் கைவரிசை



அம்பாறை நகரில் முஸ்லிம் கடைகளை உடைத்து, பள்ளிவாசலையும் நொருக்கிய இனவாதக் கும்பல் ஒன்று, வாகனங்களையும் தீக்கிரையாக்கிய சம்பவம் நேற்று முன்தினம் நள்ளிரவு நடந்துள்ளது.

(விரிவு 2ஆம் பக்கத்தில்)

## சமஷ்டியே வேண்டும்! வடக்கு சபையில் மு.கா.

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், பெப் 28

தமிழர்களின் இனப் பிரச்சினைக்குத் சமஷ்டித் தீர்வே காணப்படவேண்டுமென சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் வடக்கு மாகாண சபையின் புதிய உறுப்பினராகப் பதவியேற்றுள்ள அப்துல் நியாஸ் முகமட் நேற்றுத் தெரிவித்தார்.

மாகாண சபையின் நேற்றைய அமர்வில் கன்னியுரை நிகழ்த்தும்போதே அவர்

பக்கம் 18

## இராணுவம் புரிந்த கொடுமைகளுக்கு ஐ.நாவிடம் நீதி கோரத் தகுந்த தருணம்

### அதற்காகச் சகல தமிழ்த் தலைமைகளையும் ஒன்றுபட அழைக்கிறார் வடமாகாண சபை உறுப்பினர் குகதாஸ்



(எஸ்.நிதர்ஷன்)

இறுதிப் போரின் போது இலங்கை இராணுவம் போர்க் குற்றமீறல்களிலும், தாக்குதல்களிலும் ஈடுபட்டுத் தமிழ் மக்களைக் கொன்றது. இன்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகமும் சர்வதேசமும் எமக்குச் சார்பான நிலைப்பாட்டில் உள்ளமையால் இதற்காக நீதி கேட்ப

பக்கம் 18

## வட்டிக் கடன் திட்டங்களால் தமிழ் மக்களைச் சுரண்டாதீர்!

### நிதி நிறுவனங்களுக்கு எதிராக நேற்று யாழ்ப்பாணத்தில் மாபெரும் போராட்டம்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், பெப். 28

கொடிய வட்டிக் கடன்களை வழங்கித் தமிழ் மக்களின் பொருளாதாரத்தைச் சுரண்டும் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து யாழ். நகரில்

பக்கம் 03

## டெனீஸின் மனு ஒத்திவைப்பு

வடக்கு மாகாண சபை அமைச்சர் பதவியிலிருந்து தம்மை நீக்கிய முறைமை தவறு எனத் தெரிவித்து முன்னாள் மாகாண அமைச்சர் பா.டெனீஸ்வரன் தாக்கல் செய்த மனு மீதான விசாரணையை அடுத்த மாதம் 9ஆம்திகதி நடத்துவதற்கு கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்று தீர்மானித்துள்ளது.

கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நீதியரசர்கள் குழுதினி

பக்கம் 03

## மருத்துவ பீட மாணவன் சடலமாக மீட்பு



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், பெப். 28

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட இறுதி

பக்கம் 18

## தமிழ்க் கூட்டமைப்புதான் எதிர்க்கட்சியாக நீடிக்கும்!

### சுதந்திரக் கட்சி உறுதி

கொழும்பு, பெப்.28

தேசிய அரசில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி நீடிக்கின்றதாகத் தீர்மானம் எடுத்துள்ளோம். ஆகவே, எதிர்க்கட்சியாக நீடிக்கும் தகுதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குதான் உள்ளது. ஸ்ரீலங்கா பொதுஜனபெரமுன எதிர்க் கட்சித் தகுதியைப் பெற முடியாது.

– இவ்வாறு நேற்றுத்

பக்கம் 18

## உள்ளூராட்சிச் சபைகளின் கன்னியமர்வு ஒத்திவைப்பு

### மார்ச் 20 ஆம் திகதி வரை

கொழும்பு, பெப்.28

உள்ளூராட்சிச் சபைகளின் கன்னி அமர்வு எதிர் வரும் மார்ச் 20 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்

பக்கம் 03

## இது ரகசியம் அல்ல!

ஊடகவியலாளர்களைப் பொறுத்தவரை இன்னமும் தமிழர், சிங்களவர் என்றே அவர்களைக் கொழும்பு வேறுபடுத்திப் பார்க்கின்றது என்பது வெள்ளிடை மலையாகி வருகிறது.

யுத்த காலத்தில் பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்களில் பெரும்பாலானோர் தமிழர்கள். அதிக எண்ணிக்கையில் கொல்லப்பட்ட

பக்கம் 03

## வடமாகாண சபைக்கு நேற்று 2 புதியவர்கள்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், பெப்.28

வடக்கு மாகாண சபையின் புதிய உறுப்பினர்களாகப் பதவிப் பிரமாணம் செய்த சபாரத்தினம் குகதாஸ், அப்துல் நியாஸ் முகமட் ஆகிய இருவரும் முதன்முதலாகச் சபைக்கு நேற்று வந்தபோது முதலமைச்சர் உள்ளிட்ட அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்கள் கைலாகு கொடுத்து வரவேற்று வாழ்த்துக்களைத் தெரி

பக்கம் 03

## ரணிலின் தலைமைக்கு ஆப்பு வைக்கத் திட்டம்

### முக்கிய உறுப்பினர்கள் இரகசியக் கலந்துரையாடல்

கொழும்பு, பெப்.28

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத் துவத்தில் இருந்து நீக்க அந்தக் கட்சியின் சில முக்கிய உறுப்பினர்கள் இரகசியக் கலந்துரையாடலொன்றை நடத்தியுள்ள

பக்கம் 03

## இந்தியாவுக்கு இலங்கை அளித்துள்ள உறுதிமொழி

புதுடில்லி, பெப்.28

அம்பாந்தோட்டை மாகம்புர துறைமுகம் எந்தவொரு வெளிநாட்டுக் கடற்படைக்கும் வழங்கப் படாது என்று இந்தியாவுக்கு வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளது என்று இலங்கைக் கூட்டுப் படை

பக்கம் 18

# அம்பாறை நகரில் பெரும் பதற்றம்!

## பள்ளிவாசல், முஸ்லிம் கடைகள் மீது தாக்குதல்; வாகனங்களும் தீ வைத்து எரிப்பு










அம்பாறை, பெப். 28

அம்பாறை நகர்ப்பிரதேசத்தில் மர்மநபர்களால் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டு பதற்ற நிலை நேற்றுத் தோன்றியது.

நேற்றுமுன்தினம் நள்ளிரவை அண்மித்த நேரத்தில் நூற்றுக் கணக்கான குண்டர்கள் திடீரென்று ஒன்றிணைந்து அம்பாறை நகரத்தில் அமைந்துள்ள பள்ளிவாசல் மற்றும் வர்த்தக நிலையங்களைத் தாக்க முற்பட்டுள்ளனர்.

பயங்கர ஆயுதங்களுடன் மூர்க்கத்தனமாக செயற்பட்டமையால் அம்பாறை நகரம் நள்ளிரவு நேரத்திலும் கடும் பதற்ற நிலையை எதிர்கொண்டது.

இதனையடுத்து அங்கிருந்தவர்கள் அமைச்சர்ரிஷாத் பதியுதீன், பிரதியமைச்சர் அமீர் அலி ஆகியோருக்குத் தகவல் அளித்து பதற்றத்தைத் தணிக்க நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகோள் விடுத்தனர்.

இதற்கிடையே சம்பவம் தொடர்பாக கேள்வியுற்ற அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம்.நஸீர், மாவட்டத்துக்கான பிரதிப்பொலிஸ்மா அதிபரை உடனடியாகத் தொடர்பு கொண்டு அம்பாறை நகரில் இயல்பு நிலையை ஏற்படுத்துமாறு பணிப்புரை விடுத்துள்ளார்.

அதனையடுத்து பொலிஸார் மேற்கொண்ட துரித செயற்பாடு காரணமாக நகரில் இயல்பு நிலை திரும்பியது.

**வேடிக்கை பார்த்த பொலிஸார்**

அம்பாறையில் நேற்று முன்தினம் நள்ளிரவு ஏற்பட்ட இன வாதத் தாக்குதல் சம்பவத்தின்போது பொலிஸார் பாரபட்சமாக நடந்து கொண்டுள்ளனர். நகரில் பதற்ற நிலை ஆரம்பிக்கும் நேரம் வரை ரோந்து கடமையில் இருந்த பொலிஸார் கலவரக்காரர்கள் பஸ்களிலும் மோட்டார் சைக்கிள்களிலும் அணி வகுத்து வந்து வர்த்தக நிலையங்களைத் தாக்கத் தொடங்கியதும் தலைமறைவாகியுள்ளனர்.

அத்துடன், பள்ளிவாசல் தாக்குதலுக்குள்ளானபோது அந்த இடத்திலிருந்து பார்வைக்குத் தென்படும் தூரத்தில் பொலிஸ் நிலையம் அமைந்திருந்தபோதும், பொலிஸார் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனரே தவிர, தடுக்க முற்படவில்லை என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

நிலைமை கைமீறிப் போவதை உணர்ந்து அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம். நஸீர் இராணுவ கட்டளை அதிகாரியைத் தொடர்பு கொண்டு இராணுவத்தினரையும் களத்தில் இறக்க நடவடிக்கை எடுத்துள்ளார். அத்துடன், பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கும் கண்டிப்பான உத்தரவு விடுத்துள்ளார்.

அதன் பின்னரே பொலிஸார் களத்தில் இறங்கி பதற்றத்தைத் தணிக்க முயற்சித்துள்ளனர்.

அதற்குள் கலவரக்காரர்கள் முஸ்லிம்களுக்குச் சொந்தமான வர்த்தக நிலையங்களையும், வாகனங்களையும் தாக்கி தீயிட்டும், சேதப்படுத்தியும் இருந்தனர். அத்துடன், பள்ளிவாசலும் சேதப்படுத் தப்பட்டு அங்கு தங்கியிருந் தோரும் மிலேச்சத்தனமாக தாக்கப்பட்டுள்ளனர்.

**பல கோணங்களில் விசாரணை**

அம்பாறை நகரில் பள்ளி வாசல் மற்றும் சில கடைகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவங்களை அடுத்து பல கோணங்களில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

## இழப்பீடு வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்

### முஸ்லிம் கவுன்சில் கோரிக்கை

கொழும்பு, பெப்.28

அம்பாறையில் முஸ்லிம் பள்ளிவாசல் மற்றும் வர்த்தக நிலையங்களை இலக்குவைத்து மேற்கொள் எப்பட்ட தாக்குதலை ஸ்ரீலங்கா முஸ்லிம் கவுன்சில் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் முஸ்லிம் கவுன்சில் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்பாறை வன்முறையில் ஈடுபட்டவர்களை உடனடியாகக் கைது செய்யுமாறு பொலிஸாரிடமும், அரச அதிகாரிகளிடமும் முஸ்லிம் கவுன்சில் கோரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை, வன்முறையால் சேதமாக்கப்பட்ட பள்ளிவாசல், வர்த்தக நிலையங்கள் மற்றும் வாகனங்களுக்கு இழப்பீடு வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என முஸ்லிம் கவுன்சில் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## கோட்டா கைதைத் தடுக்கும் தடையுத்தரவு மேலும் நீடிப்பு



கொழும்பு, பெப்.28

பொதுச்சொத்துகள் கட்டளைச் சட்டத்தின் கீழ், பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக, நிதிக்குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நடவடிக்கை எடுப்பதற்கு விதிக்கப்பட்டிருந்த இடைக்காலத் தடையுத்தரவை எதிர்வரும் மார்ச் மாதம் 23ஆம் திகதிவரை நீடித்து மேன்முறை யீட்டு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

பொதுச் சொத்துகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் குற்றஞ்சுமத்தி தாக்கல் செய்யப்பட்டுள்ள சான்றிதழை (பொதுச் சொத்துகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் 25 ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட அரச நிதியைப் பயன்படுத்தியிருப்பதாக உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் அல்லது அதற்கு மேற்பட்ட பதவியிலுள்ளவரால் சான்றுப்படுத்திய சான்றிதழ்) வலிதற்றதாக்குமாறு கோரி, கோட்டாபய கடந்த நவம்பர் 24ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ரிட் மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனு, மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான பி.பத்மன் சூரசேன (மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர்), ஷிரான் குணரத்ன ஆகியோரடங்கிய குழாம் முன்னிலையில் நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டபோதே, மேற்கண்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டதுடன், மனு தொடர்பான மேலதிக விசாரணைகளுக்கான தினமாக மார்ச் 22ஆம் திகதி குறிக்கப்பட்டது.

இந்த மனுவின் பிரதிவாதிகளாக, பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் ஷானி அபேசேகர, நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவின் பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரவி வைத்தியலங்கார, அந்தப் பிரிவின் உதவி அத்தியட்சகர் கமல் பிலிஸ்கர மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

தான் இரட்டைப் பிரஜாவுரிமை கொண்டவர் என்றும் இலங்கை இராணுவத்தின் ஓய்வு பெற்ற அதிகாரி என்றும் மனுவில் குறிப்பிட்டுள்ள அவர், மேலே குறிப்பிடப்பட்ட சான்றிதழைப் பிரதிவாதிகள் தனக்கு எதிராக வெளியிடுவதற்குத் தடை விதிக்க வேண்டும் என்றும் கோரியுள்ளார்.

நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் தனக்கு எதிராக, போலியான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுவதாகவும் அவர் மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

மனுதாரர் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா தமது தொகுப்புரையைச் சமர்ப்பித்தார். சட்டமா அதிபர் திணைக்களத்தின் சார்பில் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் விராஜ் தயாரத்ன ஆஜராகியிருந்தார்.

மேலதிக தொகுப்புரைகளைச் சமர்ப்பிப்பதற்கு கால அவகாசம் கோரப்பட்டதையடுத்து, மேற்கண்ட திகதி அறிவிக்கப்பட்டதுடன், இடைக்காலத் தடையுத்தரவு நீடிக்கப்பட்டது.

கடந்த அமர்வில், தமது சேவைபெறுநர் மீது நடவடிக்கை எடுக்கப்படாமல் இருக்கவேண்டுமாயின், இடைக்காலத் தடையுத்தரவு நீடிக்கப்பட வேண்டும் என்று மனுதாரர் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா கோரியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# முதலமைச்சர் - தவராசா நேற்று சபையில் வாதப்பிரதிவாதம்!

(எஸ்.நிதர்ஷன்)

வடக்கு மாகாணத்தில் பொருளாதார மற்றும் அபிவிருத்தித் திட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளபோதும் அவ்வாறு எதுவும் முன்னெடுக்கப்படவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் தவராசா கூறுவதை ஏற்க முடியாது என வடக்கு முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

மாகாண சபையில் முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகள் தொடர்பில் முதலமைச்சருக்கும் எதிர்க்கட்சித் தலைவருக்குமிடையில் நேற்றைய சபை அமர்வில் வாதப்பிரதிவாதங்கள் நடைபெற்றன.

நேற்றைய அமர்வில், வடக்கு மாகாணப் பொருளாதார மற்றும் அபிவிருத்திக்கான ஒழுங்கமைக்கப்பட்ட உறுதியான திட்ட வரைவைத் தயாரித்தல் தொடர்பான அறிக்கையைச் சபை உறுப்பினர் ஆர்.ஜெயசேகரன் முதலமைச்சருக்குச் சமர்ப்பித்து அதனைச் சபை அமர்வில் பிரேரணையாகக் கொண்டுவருமாறு கோரியிருந்தார். ஆயினும் அவர் கோரிய பிரேரணை சபையில் கொண்டு வரப்படாமை தொடர்பாக அவைத் தலைவரிடம் கேள்வியெழுப்பினார்.

இதற்கு அவைத் தலைவர், இதற்கான நடவடிக்கைகளை முதலமைச்சர் மேற்கொண்டு வருவதால், இந்தப் பிரேரணை தேவையற்றது என்ற சாரப்படக் கருத்துக்களை முன்வைத்திருந்தார். இதன்போது எதிர்க்கட்சித்தலைவர், அந்தப் பிரேரணையில் விடயங்கள் உள்ளன என்றும், அதனை நிராகரிப்பதாக அவருக்குச் சொல்லவில்லை என்று அவர் கேட்பதில் நியாயம் உள்ளது தானே என்றும் கூறினார்.

இதன்போது முதலமைச்சர், இந்த விடயம் தொடர்பாகத்தான் சிலவற்றைக் கூற விரும்புவதாகக் குறிப்பிட்டு விளக்கம் அளித்தார். அந்த உறுப்பினரைத் தனக்கு நன்றாகத் தெரியும் என்றும், அவருடைய அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக முன்னெடுக்கப்படவேண்டிய அடுத்த கட்டச் செயற்பாடுகள் தொடர்பிலும் அவரிடம் தாம் தெரியப்படுத்தியுள்ளார் என்றும் குறிப்பிட்டார்.

ஆயினும் அவ்வாறான விடயங்களைச் செய்யாததாலேயே ஜெயசேகரம் இதனைப் பிரேரணையூடாக கொண்டு வர முற்பட்டிருக்கின்றார் என எதிர்க்கட்சித் தலைவர் தவராசா கூறினார்.

அவ்வாறு மாகாண சபை எதுவும் செய்யவில்லை என்று கூற முடியாது என்றும், பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள் ரீதியாகப் பல நடவடிக்கைகளை மாகாண சபை மேற்கொண்டுள்ளதாகவும் முதலமைச்சர் குறிப்பிட்டார்.

இவ்வாறு முதலமைச்சரும் எதிர்க்கட்சித் தலைவரும் மாறி மாறி கருத்துக்களை முன்வைத்தனர். இதன்போது குறுக்கிட்ட முன்னாள் அமைச்சர் குருகுலராசா, மாகாண சபை ஆரம்பிக்கப்பட்டு ஐந்து வருடங்கள் முடியப் போகின்றது. மாகாண சபையிடம் முழுமையான திட்டங்கள் இருக்கிறதா என்று கேள்வியெழுப்பினார்.

இதன்போது குறுக்கிட்ட சிவாஜிலிங்கம், கடந்த இரண்டரை வருடங்களாக அமைச்சராக இருந்தபோது குருகுலராசாவுக்கு தெரியாதது இப்போது அமைச்சராக இல்லாதபோது தெரிகிறதா என்று கேள்வியெழுப்பினார்.

இவ்வாறு மாறி மாறிக் கருத்துக்கள் முன்வைக்கப்பட்ட நிலையில், மாகாண சபையின் தனித்துவத்தை யாரும் சீர்குலைக்க இடமளிக்க முடியாதென்றும், இவை தொடர்பாகச் சகலரையும் இணைத்துக் கலந்துரையாடலொன்றை நடத்த எற்பாடு செய்வதாகவும் கூறி இந்த விடயத்தை முடிவுக்குக் கொண்டு வந்தார் அவைத் தலைவர் சிவஞானம். (ஐ-7)

## ஹவாய் ஆதீன முதல்வர் வருகை

யாழ்ப்பாணம் - கந்தர் மடத்தில் உள்ள ஸ்ரீ சிவகுருநாத குருபீடம் மகா தேவா சுவாமிகள் ஆச்சிரமத்துக்கு அமெரிக்காவில் உள்ள ஹவாய் ஆதீன ஸ்தாபகராகிய குருதேவ சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளின் சீடரும் தற்போதைய ஆதீன முதல்வருமாகிய சற்குரு போதிநாத வேலன் சுவாமிகள் இன்று மாலை 5 மணியளவில் குரு பீடத்துக்கு வருகை தந்து பக்த அடியார்களுக்கு ஆசி வழங்க வுள்ளார்.

அங்கு சிறப்புப் பூசை வழிபாடுகள் இடம்பெறுவதோடு இரவுப் போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

## டெனீஸின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விக்கிரமசிங்க, ஜனக் டி சில்வா ஆகியோர் முன்னிலையில் இவ்வழக்கு நேற்று எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இத்திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. (உ)

## வட்டிக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று முற்பகல் மாபெரும் கண்டனப் பேரணி இடம்பெற்றது.

யாழ்.மாவட்டக்கூட்டுறவாளர்களின் ஏற்பாட்டில் இந்தப் பேரணி முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்துக்கு முன்பாக ஆரம்பமான இந்தப் பேரணி யாழ். பிரதான வீதியூடாக யாழ். மாவட்டச் செயலகத்தைச் சென்றடைந்தது. அங்கு யாழ்.மாவட்ட செயலாளர், வடக்கு மாகாண ஆளுநர் ஆகியோருக்கு மனுக்கள் கையளிக்கப்பட்டன.

போரால் பெரிதும் பாதிக்கப்பட்ட வடக்கு மக்களுக்கு, கடன் திட்டங்களை வழங்கி, இந்த அரசு பெரும் மோசடியைச் செய்துவருகிறது. எனவே அனைத்துக் கடன் திட்டங்களும் நிறுத்தப்படவேண்டும்.

குறைந்த வட்டி வீதத்தில் கடன் திட்டங்களை வழங்குவதே பொருத்தமானதாகும். இன ரீதியாகப் பாகுபாடு பார்த்து முன்னெடுக்கப்படும் இந்த நடவடிக்கைகளை அரசு நிறுத்த வேண்டும். வடக்கு மக்களைக் காட்டி உலக நாடுகளிடம் பல நிதி உதவிகளைப் பெறும் அரசு, இங்கு அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுக்காது இவ்வாறான கடன் திட்டங்களை வழங்கி வருகிறது.

பெருமளவான நிதி நிறுவனங்கள், போருக்குப் பின்னர் வடக்குக்கு படையெடுத்து தமிழ் மக்களுக்குப் பெரும் மோசடித்தனமான வட்டியை அறவிடும் கடன்களை வழங்கி அவர்களுடைய பொருளாதாரத்தைத் திட்டமிட்ட வகையில் சுரண்டுகின்றன.

கிராமங்களுக்குச் செல்லும் நிதி நிறுவனங்களின் அலுவலர்கள், எமது மக்களுக்குக் கவர்ச்சிகரமான வார்த்தைகளைக் கூறி, சட்டவிரோதமான ஒப்பந்தங்களைச் செய்து கடன்களை வழங்குகின்றனர்.

எங்களுடைய மக்களிடம் உள்ள சிறிதளவு இருப்பையும் சுரண்டுகின்ற வகையில்தான் இந்த நிதி நிறுவனங்கள் செயற்பட்டுவருகின்றன என்று போராட்டத்தை ஏற்பாடு செய்தவர்கள் தெரிவித்தனர்.

இந்தப் பேரணியில் பெருமெண்ணிக்கையானவர்கள் கலந்துகொண்டு வட்டிக் கடன் திட்டங்களுக்கு எதிராகத் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். (ஐ-7)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடகவியலாளர்கள் தமிழர்கள். ஆனால் அவர்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பானவிசாரணைகளில் எந்த முன்னேற்றமும் இல்லை.

நிமலராஜனில் தொடங்கி, நடேசன், சுகிர்தராஜன், தராக்கி சிவராம், பு.சத்தியமூர்த்தி, செ.ரஜிவர்மன் என்று பாதிக்கப்பட்ட தமிழ் ஊடகவியலாளர்களின் பட்டியல் நீண்டது. ஆனால் இந்த வன்முறைகள் தொடர்பில் யார் மீதும் ஒழுங்காக நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

ஏனெனில் இந்த வன்முறைகளில் பாதிக்கப்பட்டவர்கள் எல்லோரும் கொழும்பின் கண்களில் 'பயங்கரவாதிகள்' தாம். பயங்கரவாதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தோர் தேசப் பற்றாளர்கள். எனவே அந்தத் 'தேசப் பற்றாளர்கள்' மீது - 'நாட்டைக் காத்த தேசக் காவலர்கள்' மீது - கொழும்பு நடவடிக்கை ஏதும் எடுக்காது.

ஆனால், பாதிக்கப்பட்டவர் சிங்கள ஊடகவியலாளர்கள் என்றால், அந்தக் குற்றம் வன்முறை. அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும். கீத் நொயர், பிரகீத் எக்னெலிகொட, லஸந்த விக்கிரமதுங்க என்று எல்லாச் சிங்கள ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்கள் குறித்தும் விசாரணைகள் துரிதமாக நடக்கின்றன. லஸந்த படுகொலை விசாரணையை மூடி மறைத்த சூத்திரதாரியாக, பொலிஸ் தரப்பில் உயர் பதவியிலிருந்து ஒருவர் மிக விரைவில் சிக்கவிருக்கின்றார் என்று தெரிகின்றது.

போர்க்காலத்தில் ஊடகவியலாளர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட குற்றங்களுக்கு நீதி செய்வதில் கூடத் தமிழர், சிங்களவர் என்று வெளிப்படையாக வேறுபாடு பார்த்துச் செயற்படும் நல்லாட்சி அரசு, பொறுப்புக் கூறல் விடயத்தில் நியாயமாக நடந்து, தமிழருக்கு நீதி செய்யும் என்று நம்பிக் காத்திருந்து, கால அவகாசம் வழங்கி, காபந்து பண்ணி நிற்கும் நம் தலைவர்களை என்ன செய்வது? கடவுளுக்குத்தான் வெளிச்சம்.

- மின்னல் -

## வடமாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வித்தனர்.

மாகாண சபை அமர்வு கைதடியிலுள்ள பேரவைச் செயலகத்தில் பேரவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானம் தலைமையில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இதன்போது சபைக்குப் புதிதாக இரண்டு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் எனவும், அவர்கள் சபைக்கு வருகை தருமாறும் அவைத் தலைவரால் அறிவிப்பு விடுக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து இரண்டு உறுப்பினர்களும் சபைக்கு வந்திருந்தபோது முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள், சக உறுப்பினர்கள் என அனைவரும் புதிய உறுப்பினர்களைக் கைலாகு கொடுத்து வரவேற்று வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டனர். இதன் பின்னர் புதிய உறுப்பினர்கள் தமது கன்னியுரைகளையும் சபையில் ஆற்றினர்.

மாகாண சபைக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் தெரிவான தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த இம்மானுவேல் ஆர்னோல்ட் தனது பதவியை இராஜினாமாச் செய்திருந்த நிலையிலையே கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ரெலோ அமைப்பைச் சேர்ந்த குகதாஸ் நியமிக்கப்பட்டார். அதேபோன்றே சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த றமீஸ் இராஜினாமா செய்து கொண்டதையடுத்து அவரின் இடத்துக்கு எஸ்.எம். ஏ.நியாஸ் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-7)

## குகதாஸின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்போது, மாகாண சபையின் புதிய உறுப்பினராகப் பதவியேற்றுக்கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் சபாரட்ணம் குகதாஸ் தனது கன்னியுரையை நிகழ்த்தினார்.

அந்த உரையில், இறுதிப் போரில் மக்கள் எதிர்கொண்ட பிரச்சினைகள், போர்க்குற்ற மீறல்கள், முகாம் வாழ்க்கை, இராணுவ அத்துமீறல்கள் என்பன தொடர்பில் அவர் விரிவாக விளக்கினார்.

அவரது உரையை அவதானமாகச் செவிமடுத்த முதலமைச்சர், உறுப்பினர் குகதாஸ், தனது கன்னி உரையில் பல விடயங்களைத் தெரிவித்துள்ளார். இறுதிப் போரின் ஒரு சாட்சியமாகத் தனது உரையை அவர் சபையில் நிகழ்த்தியுள்ளார். தான் நேரில் கண்டவற்றை அவர் விளக்கியுள்ளார். ஆகவே இந்த உரையின் பிரதியை ஐ.நா. மனித உரிமை ஆணையாளருக்கு அனுப்பநடவடிக்கை எடுக்க வேண்டும். அவரது உரை இந்த நேரத்தில் எமக்கு நன்மை அளிக்கும் என்று நம்புகின்றேன் என அவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானத் திடம் கோரினார்.

இதனை அடுத்து அவைத் தலைவர், உறுப்பினரின் உரையை அனுப்புவதில் எந்தத் தடையும் இல்லை. உரையின் பிரதி ஐ.நா. மனித உரிமை ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்படும் எனத் தெரிவித்தார். (ஐ -7)

## ரணிலின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னர் எனக் கட்சி வட்டாரங்களில் அறிய முடிகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் சில முக்கிய அமைச்சர்களும், பிரதியமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்தச் சந்திப்பில், பிரதமர் பதவியில் இருந்தும் கட்சித் தலைவர் பதவியில் இருந்தும் ரணில் விக்கிரமசிங்கவை நீக்கவிட்டு, உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மக்கள் வழங்கியுள்ள எச்சரிக்கையைக் கருத்தில் கொண்டு எதிர்கால ஐ.தே.கவின் வேலைத்திட்டங்களை முன்னெடுப்பது குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொள்ள அழைப்பு விடுக்கப்பட்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் அதில் பங்கேற்காமல் பிரதமருக்கு எதிராக முன்னெடுக்கப்படும் சதித் திட்டத்தை அம்பலமாக்கியுள்ளார்.

பிரதமருக்கு எதிராகச் செயற்படுபவர்களின் விவரங்களையும் அவர் பிரதமரிடம் தெரியப்படுத்தியுள்ளார் எனவும், இரகசியக் கூட்டத்தில் பேசப்பட்ட விடயங்களையும் பிரதமருக்கு வெளிப்படுத்தியுள்ளார் என்றும் அறிய முடிகிறது. (ஐ)

## உள்ளூராட்சிச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளது. தேர்தல்கள் ஆணைக் குழு கேட்டுக் கொண்டதற்கு அமையவே இந்த மாற்றம் செய்யப்பட்டது.

- இவ்வாறு மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள அமைச்சு அலுவலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நடந்து முடிந்த உள்ளூராட்சிச் சபைத் தேர்தலின் அடிப்படையில் புதிதாகத் தெரிவாகிய உறுப்பினர்கள் மற்றும் தெரிந்தனுப்பிய உறுப்பினர்களின் பதவிக்காலம் எதிர்வரும் 6ஆம் திகதி நடைமுறைக்கு வரும் என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு சுற்றறிக்கை வெளியிட்டிருந்தது.

அதனால் கட்சிகளால் தேர்ந்தனுப்பப்படும் உறுப்பினர்களின் விவரங்களைச் சமர்ப்பிக்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழு, கட்சிகளின் செயலாளர்களிடம் கேட்டிருந்தது.

எனினும், உறுப்பினர்களின் விவரங்கள் 340 உள்ளூராட்சிச் சபைகளுக்கும் கிடைக்கவில்லை எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அரசியல் கட்சிகள் மற்றும் குழுக்களிடமிருந்து உறுப்பினர்களின் விவரங்கள் கிடைத்து அவற்றை வர்த்தமானியில் வெளியிடுவதற்கு கால அவகாசம் தேவை எனத் தேர்தல்கள் ஆணைக்குழு நேற்றுச் செவ்வாய்க்கிழமை கேட்டுள்ளது.

இதனடிப்படையில் எதிர்வரும் மார்ச் 20ஆம் திகதிவரை உறுப்பினர்களின் பதவிக்கால ஆரம்பத்தை தள்ளிவைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது - என்றார். (ஐ)

டயானா பிளாஸ்ரிக் மீள்சுழற்சி

பிளாஸ்ரிக் உற்பத்தி, பிளாஸ்ரிக் திருத்த வேலை, பிளாஸ்ரிக் மீள் சுழற்சி என்பன சிறந்த முறையில் செய்து தரப்படும்.

108, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

T.P: 021 222 8680
077 592 5088

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## மஹிந்த அணி மீது நடவடிக்கையாம்?

நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ தரப்பு கொடுத்த அரசியல் அதிரடியில் குழம்பிப் போய் நிற்கின்றது போலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி.

அதன் தலைவர்கள் வெளியிடும் அறிக்கைகள், அறிவிப்புக்கள் அப்படியான சந்தேகங்களைத்தான் எமக்கும் தந்து நிற்கின்றன.

நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தல்களில் மொத்தம் 167 சபைகளில் ஆட்சியை தீர்மானிக்கும் சக்தியாக தங்களின் சுதந்திரக் கட்சி இருப்பதனால், இவ்விடயம் தொடர்பில் ஐ.தே. கட்சி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவற்றுடன் மட்டுமல்லாமல் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் கூட தமது கட்சி அணி சேரத் தயாரென்று அக்கட்சியின் பிரமுகரும் பொதுமக்கள் ஐக்கிய முன் னணியின் செயலாளருமான மஹிந்த அமரவீர கூறுகின்றார்.

ஆனால், சுதந்திரக் கட்சியின் செயலாளரான அமைச்சர் துமிந்த திஸாநாயக்கவோ அதற்கு மாறாகக் கருத்து வெளியிட்டு இருக்கிறார்.

கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் தமது சுதந்திரக் கட்சிக்கு எதிராகச் செயற்பட்டமை மட்டுமல்லாமல், அதற்கு எதிராகப் புதிய கட்சியாகிய ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனையையும் உருவாக்கி, அதில் இயங்கியமை குறித்து சு.க. உறுப்பினர்களிடம் விளக்கம் கோரப்படும், தவறிழைத்தோர் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றெல்லாம் துமிந்த திஸநாயக்கா கூறுகின்றார்.

ஒருதலைவர் உள்ளூராட்சிச்சபைகளில் ஆட்சி அமைப்பதற்காக பொதுஜன பெரமுனயுடன் சுதந்திரக் கட்சி அணி சேரலாம் என்கின்றார்.

மற்றத் தலைவரோ, அந்தத் தரப்பினரிடம் விளக்கம் கோரி, ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்கின்றார்.

மஹிந்த ராஜபக்ஷவும் நாற்பதுக்கும் மேற்பட்ட அவர் தரப்பு எம்.பிக்களும் கடந்த பொதுத் தேர்தலில் சு.க. சார்பில் போட்டியிட்டு வெற்றியீட்டிய பின்னர் - அக்கட்சி ஊடான நாடாளுமன்ற அங்கத்துவத்தை பேணியபடியேயே - சு.க.வுக்கு எதிராகப் புதுக்கட்சியை ஆரம்பித்து களத்தில் இறக்கி, வெற்றியும் பெற்றிருக்கின்றனர்.

முடியுமாயின் தங்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்து எங்களை சுதந்திரக் கட்சியை விட்டு விலக்கிப் பாருங்கள் என்று சவால் விட்டபடியேதான் தங்களது அரசியல் நடவடிக்கைகளை - பயணத்தை - அவர்கள் முன்னெடுத்து வருகின்றனர்.

அவர்களுக்கு எதிராக சு.க.ஒழுங்கு நடவடிக்கை எடுக்க முயன்றால், அவர்கள் சு.க. அல்லாத தனிக்குழுவாக நாடாளுமன்றில் இயங்கக் கூடிய வாய்ப்பும் -

அதனால், இப்போது எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வகிக்கும் சம்பந்தனிடம் இருந்து அது பறிபோய், மஹிந்த தரப்புக்கு அது வாய்த்து விடும் சந்தர்ப்பமும் -

உள்ளன என்பதை ஏற்கனவே இப்பத்தியில் பலதடவைகள் சுட்டிக்காட்டியுள்ளோம்.

ஆகவே, இந்த நாடாளுமன்றத்தின் பதவிக்காலம் முடிவடையும் வரை மஹிந்த தரப்பில் இணைந்து ஸ்ரீலங்கா பொதுஜனப் பெரமுனவை ஆரம்பித்து அதில் செயற்பட்டு வரும் சு.க.வினருக்கு எதிராக கட்சித் தலைமை எதுவும் செய்யமாட்டாது; செய்யமுடியாது என்று நம்பலாம்.

இன்று, நேற்றல்ல கடந்த ஆண்டு சுதந்திரக் கட்சியின் மே தினத்தை புறக்கணித்து, தனி மே தினப்பேரணியை ஏற்பாடு செய்து, வரலாற்றில் முன்னெப்போதுமே நடந்திராதவாறு முழு காலிமுகத் திடலைமையுமே ஜன சமுத்திரத்தினால் மஹிந்த தரப்பு நிறைத்துக் காட்டிய சமயத்தில் இருந்தே, அத்தரப்புக்கு எதிராக இந்த ஒழுங்கு நடவடிக்கை என்ற பூச்சாண்டி கதையை - மிரட்டலை - சுதந்திரக் கட்சி நிர்வாகம் வெளியிட்டே வருகின்றது.

சு.க.வும் அங்கம் வகிக்கும் தேசிய அரசின்- அல்லது நல்லாட்சி அரசின்- வரவு, செலவுத்திட்டத்தின் மீதான வாக்கெடுப்பின் போது சு.க. நிலைப்பாட்டுக்கு மாறாக, அத்திட்டத்திற்கு எதிராக, மஹிந்த தரப்பு எம்.பிக்கள் வாக்களித்தபோது கூட நடவடிக்கை ஏதும் எடுக்க முடியாமல் வாளாவிருந்த சு.க. தலைமை, அவ்வப்போது மஹிந்த தரப்பின் மீது ஒழுங்கு நடவடிக்கை என்று பாச்சா காட்டுவதும், அதைப் பொருட்படுத்தாமல், மஹிந்த அணி தன் கைவரிசையைக் காட்டுவதும் வழமை.

இப்போது மஹிந்த தரப்பினரை சு.க.விலிருந்து வெளியேற்றப் போகிறார் என சு.க. செயலாளர் துமிந்த திஸாநாயக்க கூறுகின்றமை கூட இப்போதைக்கு நடக்கப் போகின்ற காரியம் அல்ல என்பது உறுதி.

"அவர்களிடம் (மஹிந்த தரப்பினரிடம்) முதலில் விளக்கம் கோருவோம். அவர்கள் தரும் விளக்கத்தின் அடிப்படையில் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும். சுதந்திரக் கட்சியிலிருந்து அவர்கள் வெளியேற்றப்படுவர். அதன் வாயிலாக அவர்கள் எம்.பி. பதவிகளையும் இழக்க வேண்டி நேரும்." - என்று கட்சிச் செயலாளர் மேலும் விளக்கம் கூறுகின்றார்.

ஆனால், தம்மைக் கட்சியிலிருந்தும், அதன் மூலம் எம்.பி. பதவியிலிருந்தும் வெளியேற்ற எடுக்கப்படும் நடவடிக்கைக்கு எதிராக ஒருவர் நீதிமன்றத்துக்குச் செல்வாராயின், அந்த வழக்கு விசாரித்து முடிக்கப்படும் வரை அந்த வெளியேற்றத்துக்கு நீதிமன்றம் இடைக்காலத் தடை விதிக்கும். நீதிமன்றம் வழக்கை விசாரித்து முடிக்க முன்னர் இந்த நாடாளுமன்றத்தின் பதவிக்காலம் முடிந்துவிடும். ஆக, மஹிந்த அணியினரை ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்து, நாடாளுமன்றத்திலிருந்து வெளியேற்றும் முயற்சி வெற்றியளிக்கப்போவதில்லை என்பது வெளிப்படையான உண்மை.

# தொண்டராசிரியர்கள் நியமனம்; அகிலவிராஜூடன் பேசி முடிவு

## வடக்கு கல்வி அமைச்சர் அறிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்).

யாழ்ப்பாணம், பெப் 28

வடக்கு மாகாணத் தொண்டர் ஆசிரியர்களின் நியமனம் தொடர்பில் முதற்கட்டமாக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் சர்வவேஸ்வரன் மத்திய கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவாசத்துடன் பேச்சு நடத்துவதென்றும், அதன் பின்னராகவே அடுத்த கட்ட நடவடிக்கை எடுப்பது எனவும் மாகாண சபையில் தீர்மானிக்கப்பட்டது.

மாகாண சபையின் நேற்றைய அமர்வில், தொண்டர் ஆசிரியர் நியமனம் குறித்து முன்னாள் கல்வி அமைச்சரால் கவனவீர்ப்புப் பிரேரணை ஒன்று கொண்டு வரப்பட்டது. இந்தப் பிரேரணை சபையில் நீண்ட நேரம் விவாதிக்கப்பட்டன் பின்னரே இறுதியில் மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதன்போது சபையின் ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தத்தமது கருத்துக்களைச் சபையில் முன்வைத்திருந்த நிலையில் இது தொடர்பான விளக்கத்தை அமைச்சர் சர்வேஸ்வரன் வழங்கினார்.

அவர் இது குறித்துத் தெரிவிக்கையில்,

வடக்கிலுள்ள தொண்டர் ஆசிரியர்களில் ஒரு தொகுதியினருக்கு நியமனங்கள் வழங்குவதற்கான கடிதங்கள் வந்திருக்கின்ற போதும் ஏனையோருக்கு அந்தக் கடிதங்கள் வரவில்லை. இதனால் அனைவருக்கும் நியமனத்தை வழங்க வேண்டுமெனச் சபையில் விடுக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு அமைவாகவே தொண்டர் ஆசிரியர்களுக்கான நியமனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறானதொரு நிலையில் மத்திய கல்வி அமைச்சுக்குச் சென்ற தொண்டர் ஆசிரியர்கள் தமக்கான நியமனத்தை வழங்குமாறு கோரியிருந்தனர். அதன்போது வடக்கு மாகாண முதலமைச்சரும் கல்வி அமைச்சருமே நியமனத்தை வழங்கவேண்டாமெனத் தடுத்து நிறுத்தியுள்ளனர் என மத்திய கல்வி அமைச்சு தெரிவித்திருந்தது.

ஆனால் ஒரு பகுதியினருக்கே அந்த நியமனம் வந்துள்ளதாலும் அனைவருக்கும் நியமனம் வழங்கப்படவேண்டுமென்ற கோரிக்கை உள்ளதாலுமே அனைவருக்கும் அதனைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றோம். ஆகவே சபையின் தீர்மானத்துக்கமைய மத்திய கல்வி அமைச்சுடன் பேசி அடுத்த கட்ட நிலைமைகள் தொடர்பில் தெரிவிக்கின்றேன். - என்றார். (ஐ -7)

# பாடசாலை ஆரம்ப நேரம்; மாகாண சபையில் சர்ச்சை

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், பெப்.28

வடக்கு மாகாணப் பாடசாலைகள் ஆரம்பிக்கும் நேரம் மற்றும் மாணவர்களின் ஆடைகள் என்பனவற்றில் மாற்றங்களைக் கொண்டு வருவது தொடர்பில் நேற்றைய மாகாண சபை அமர்வில் ஆராயப்பட்டது.

சபை அமர்வு அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் நேற்று இடம்பெற்றபோது மாகாணப் பாடசாலைகளை காலை 8 மணிக்கு ஆரம்பிப்பது என்று ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்தாமை தொடர்பில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

இதன்போது எழுந்த கல்வி அமைச்சர் சர்வேஸ்வரன், வடக்கு மாகாணப் பாடசாலைகள் முன்னர் காலை 8 மணிக்கே ஆரம்பிக்கப்பட்டிருந்தன. அதில் மாற்றங்கள் கொண்டு வரப்பட்டுத் தற்போது அவை காலை 7.30 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு வருகின்றன. அதில் மீளவும் மாற்றங்களைக் கொண்டு வரவேண்டுமெனக் கடந்த அமர்வுகளின் போது குறிப்பிடப்பட்டிருந்தாலும் அதனை நடைமுறைப்படுத்துவதில் சில சிக்கல்களும் ஏற்பட்டுள்ளன எனச் சுட்டிக்காட்டினார்.

பாடசாலைகள் காலை 7.30 மணிக்கு ஆரம்பிப்பதால் மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர் என அமைச்சர் அனந்தி சசிதரன் சுட்டிக்காட்டினார்.

இதே கருத்தை முன்வைத்த அவைத் தலைவர் சிவஞானமும் பாடசாலைகளைக் காலை 8 மணிக்கே மீளவும் ஆரம்பிப்பது தொடர்பாகப் பரிசீலிக்கவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

இதன்போது குறுக்கிட்ட முன்னாள் கல்வி அமைச்சர் த.குருகுலராசா, பாடசாலைகளைக் காலை 7.30 மணிக்கு ஆரம்பிப்பதில் முன்னர் இடையூறுகள், எதிர்ப்புகள் இருந்தபோதும் அதனைப் பின்னர் பலரும் வரவேற்றிருந்தனர் எனவும் சுட்டிக்காட்டினார். மீளவும் பாடசாலைகளைப் பழைய நேரத்துக்கு மாற்றுதவன் மூலம் சீரான கல்வியை மாணவர்களுக்கு வழங்க முடியுமா என்றும் அவர் கேள்வியெழுப்பினார்.

பாடசாலை நேரங்களில் மாற்றங்கள் வேண்டுமெனக் கடந்த அமர்வுகளின்போது சபையில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டும் அதனை நடைமுறைப்படுத்தவில்லை அல்லது அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் குறித்துச் சபைக்குத் தெரியப்படுத்தவில்லை என்றும், எனவே தற்போதைய நேரத்தில் மாற்றங்களை ஏற்படுத்துவது தொடர்பாக அமைச்சர் மீளாய்வு செய்ய வேண்டுமென்றும் சிவஞானம் கூறினார்.

கல்வி அமைச்சின் ஆலோசனைக் கூட்டத்தில் இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடி முடிவெடுத்து அடுத்த அமர்வில் தெரியப்படுத்தப்படுமென அமைச்சர் சர்வேஸ்வரன் தெரிவித்தார்.

இதேவேளை, மாகாணப் பாடசாலை மாணவர்களின் ஆடைகளில் மாற்றங்களை ஏற்படுத்திப் புதிய நடைமுறைகள் ஏற்படுத்துவது பற்றியும் இதன்போது பரிசீலிக்கப்பட்டது. அது தொடர்பாகவும் கலந்துரையாடி இறுதி முடிவை அடுத்த அமர்வில் அறிவிப்பதாக அமைச்சர் சர்வேஸ்வரன் கூறினார். (ஐ-7)

# தவராசா-அஸ்மின் நேற்று சபையில் வார்த்தை மோதல்





(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், பெப்.28

வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் தவராசாவும் ஆளுங்கட்சி உறுப்பினர் அயுப் அஸ்மினும் தொண்டர் ஆசிரியர் நியமனம் குறித்து முட்டி மோதிக் கொண்ட சம்பவம் நேற்றைய மாகாண சபை அமர்வின்போது இடம்பெற்றது.

நேற்று நடந்த மாகாண சபை அமர்வில் வடக்கு தொண்டர் ஆசிரியர்ல்களின் பிரச்சினை தொடர்பாக விவாதிக்கப்பட்டது. இதன்போது உறுப்பினர்கள் பலரும் பல்வேறு கருத்துக்களை வெளிப்படுத்தியிருந்தனர்.

இதில், தொண்டர் ஆசிரியர் நியமனங்களை முன்னரைப் போன்று கொடுக்க முடியாது என்றும், முன்னர் வீடுகளிலும் தியேட்டர்களிலும் வைத்தே அந்த நியமனங்கள் கொடுக்கப்பட்டிருந்தன எனவும் உறுப்பினர் அயுப் அஸ்மின் சபையில் சுட்டிக்காட்டினார்.

இதன்போது எழுந்த எதிர்க்கட்சித் தலைவர் தவராசா, தொண்டர் ஆசியர் நியமனம் குறித்து அனைவரும் பேசுவதைத் தான் கேட்டுக் கொண்டு மௌனமாக இருந்துள்ளார் என்றும், ஆனாலும் தன்னுடைய மௌனத்தை உறுப்பினர் அஸ்மின் கலைத்து விட்டார் எனவும் கூறினார்.

அமைச்சராக இருந்தவர் தன்னுடைய அலுவலகத்தை அமைச்சின் அலுவலகமாகப் பயன்படுத்துவதற்கு அமைச்சரவையில் அனுமதி பெறப்பட்டிருந்ததாகவும் அவர் குறிப்பிட்டார். அந்தக் காலத்தில் பலருக்கு நியமனங்களைப் பெற்றுக் கொடுத்ததாகவும் தவராசா குறிப்பிட்டபோது, அந்த நியமனங்கள் அனைத்தும் கட்சிக்காரர்களுக்கே வழங்கப்பட்டன என்று அஸ்மின் பதிலடி கொடுத்தார்.

இதனால் இருவருக்குமிடையே வார்த்தைப் போர் மூண்டது. உண்மையை உணர்ந்து கொள்ளாது குற்றஞ்சாட்டுவது கௌரவமான விடயமல்ல எனத் தவராசா தெரிவித்தார். அவ்வாறாயின் தியேட்டரின் பலகையைக் கழற்றிவிட்டிருக்கவேண்டுமென்றும், தாம் அறிந்ததையும் பார்த்ததையுமே தெரிவிப்பதாகவும் அஸ்மின் கூறினார்.

இதனையடுத்து இருவரையும் சமாதானப்படுத்தும் வகையில் குறுக்கிட்ட அவைத் தலைவர் சிவஞானம், பேச்சு திசை திருப்பப்பட்டு வேறு எங்கோ செல்கிறது என்று கூறி ஒலிவாங்கியை இடைநிறுத்திக் கொண்டார். இதன் பின்னர் நிலைமை சுமூகமாகியது. (ஐ-7)

## நாளை

01.03.2018

வியாழக்கிழமை

நட்சத்திரம் : மகம் பி.இ. 12.14 வரை

திதி : சதுர்த்தசி மு.ப. 8.51 வரை

சுபநேரம் : 7.58 - 9.28 வரை

இராகுகாலம் : 1.58 - 3.28 வரை

# இலங்கை தொடர்பாக ஜெனீவாவில் அடுத்தடுத்து 14 உபகுழுக் கூட்டங்கள்



ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் 37 ஆவது கூட்டத்தொடர் ஜெனிவாவில் ஆரம்பமாகியுள்ள நிலையில், இலங்கை மனித உரிமை விவகாரம் தொடர்பில் 14 உப குழுக் கூட்டங்கள் ஜெனிவா மனித உரிமை பேரவை வளாகத்தில் நடைபெறவுள்ளன.

இந்தக் கூட்டங்களில் இலங்கைப் பிரதிநிதிகள் பாதிக்கப்பட்டோரின் பிரதிநிதிகள் எனப் பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர்.

அந்தவகையில் எதிர்வரும் 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தென்றல் அமைப்பு இலங்கை தொடர்பில் 11 ஆவது இலக்க அறையில் ஓர் உபகுழுக் கூட்டத்தை ஏற்பாடு செய்துள்ளது. அதேபோன்று ஏ.பி.சி. தமிழ் ஒலி என்ற அமைப்பு 21 ஆவது இலக்க அறையில் இலங்கை விவகாரம் தொடர்பில் விசேட உபகுழுக் கூட்டத்தை நடத்தவுள்ளது.

அதேபோன்று 5 ஆம் திகதி அச்சுறுத்தப்பட்ட மக்களின் அமைப்பு ஓர் உபகுழுக் கூட்டத்தினை நடத்தவுள்ளது. ஜெனிவா மனித உரிமை பேரவை வளாகத்தில் 22 ஆம் இலக்க அறையில் இந்த உபகுழுக் கூட்டம் நடைபெறவுள்ளது.

மேலும், 7ஆம் திகதி பிரான்ஸின் ஒரு மனித உரிமை அமைப்பு 8 ஆம் இலக்க அறையில் இலங்கை தொடர்பில் ஓர் உபக்குழுக் கூட்டத்தை நடத்த உள்ளது. 8 ஆம் திகதி மற்றுமொரு சர்வதேச அமைப்பால் இலங்கையில் காணாமல் போனோர் விவகாரம் தொடர்பில் ஓர் உபகுழுக் கூட்டம் நடத்தப்படவுள்ளது.

27ஆம் இலக்க அறையில் இந்த உபகுழுக்கூட்டம் நடக்கவிருக்கிறது. 9 ஆம் திகதி லீபொன்ட் என்ற அமைப்பால் இலங்கை தொடர்பில் மற்றுமோர் உப குழுக்கூட்டம் நடத்தப்பட இருக்கிறது. 8 ஆம் இலக்க அறையில் இந்த உப குழுக் கூட்டம் நடத்தப்படவுள்ளது.

12 ஆம் திகதி பாரதி கலாசார அமைப்பால் இலங்கை மனித உரிமை விவகாரம் தொடர்பில் ஓர் உபகுழுக் கூட்டம் நடத்தப்படவுள்ளது. மனித உரிமை பேரவை வளாகத்தின் 23 ஆம் இலக்க அறையில் இந்த உப குழுக் கூட்டம் நடத்தப்படவுள்ளது.

அதேபோன்று, 13 ஆம்திகதி தமிழ் உலகம் என்ற அமைப்பால் இலங்கை தொடர்பில் ஓர் உப குழுக்கூட்டம் நடத்தப்படவுள்ளது. 7 ஆம் இலக்க அறையில் நடத்தப்படவுள்ள இந்த உப குழுக்கூட்டத்தில் பல்வேறு தரப்பினர் கலந்துகொண்டு உரையாற்றவுள்ளனர்.

மேலும், 14 ஆம்திகதி புத்துருவாக்க சமூக திட்ட முன்னணி என்ற அமைப்பால் மற்றுமோர் இலங்கை தொடர்பான விசேட உபகுழுக் கூட்டம் 21 ஆம் இலக்க அறையில் நடத்தப்பட உள்ளது. 15 ஆம்திகதி பிரான்ஸ் நாட்டின் ஒரு சர்வதேச மனித உரிமை அமைப்பால் இலங்கை விவகாரம் தொடர்பில் விசேட உபகுழுக்கூட்டம் நடத்தப்பட உள்ளது.

குறிப்பாக, இலங்கையில் தன்னிச்சையாக தடுத்துவைத்தல் விவகாரம் தொடர்பிலேயே இந்த உபகுழுக்கூட்டம் நடத்தப்படவுள்ளது. இதில் பல்வேறு தரப்பினர் கலந்துகொண்டு இலங்கை விவகாரம் தொடர்பில் உரையாற்றவுள்ளனர். 21 ஆம் இலக்க அறையில் இந்த உப குழுக்கூட்டம் நடத்தப்படவுள்ளது.

அத்துடன், எதிர்வரும் 16 ஆம் திகதி இலங்கை மனித உரிமை விவகாரம் தொடர்பில் பசுமைத் தாயகம் அமைப்பால் ஓர் உபகுழுக்கூட்டம் நடத்தப்படவுள்ளது. அந்தக் கூட்டமும் 21 ஆம் இலக்க அறையிலேயே நடத்தப்படவுள்ளது.

மேலும், மற்றுமொரு சர்வதேச அமைப்பால் எதிர்வரும் 19 ஆம் திகதி ஜெனிவா மனித உரிமை பேரவை வளாகத்தில் 24ஆம் இலக்க அறையில் ஓர் உப குழுக்கூட்டம் நடத்தப்பட உள்ளது. இந்தக் கூட்டம் இலங்கை விவகாரம் தொடர்பில் ஐ.நாவின் மீளாய்வு என்ற தலைப்பில் நடைபெறவுள்ளது.

இது இவ்வாறிருக்க பசுமைத் தாயகம் அமைப்பால் மற்றுமோர் இலங்கை தொடர்பான உபக்குழுக்கூட்டம் 20 ஆம் திகதி 25 ஆம் இலக்க அறையில் நடைபெறவுள்ளது.

இலங்கையின் நிலைமாறு கால நீதி தொடர்பாக இந்த உப குழுக்கூட்டம் நடத்தப்படவுள்ளது. அதே தினத்தன்று சர்வதேச பௌத்த நிவாரண அமைப்பால் இலங்கை தொடர்பான ஒரு விசேட உபகுழுக்கூட்டம் நடத்தப்படவுள்ளது.


27ஆம் இலக்க அறையில் இந்த உபகுழுக்கூட்டம் நடத்தப்படவுள்ளது. அந்த வகையில் இந்த அனைத்து உபக்குழுக் கூட்டங்களிலும் இலங்கை தொடர்பான விடயங்கள் ஆராயப்படவுள்ளன. விசேடமாக இலங்கை மனித உரிமை நிலைமைகள் மற்றும் ஜெனீவா பிரேரணையை அமுல்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் இந்த உப குழுக்கூட்டங்களில் ஆராயப்படவுள்ளமை விசேட அம்சமாகும்.

# இளம் தொழில் முயற்சியாளர்களுக்கு பிணையாளரின்றி கடன் வழங்கலாமா?

கொழும்பு, பெப். 28

தேசிய தொழில் பயிற்சித் தகைமையை பூர்த்திசெய்த இளம் தொழில் முயற்சியாளர்களுக்கு பிணையாளர் இன்றி கடன் வழங்க முடியுமா என்பது பற்றி கவனம் செலுத்துமாறு மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி தெரிவித்துள்ளார்.

இலங்கை வர்த்தக வங்கிகளின் பிரதம நிறைவேற்று அதிகாரிகளுடன் இடம்பெற்ற சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.




மத்திய வங்கி அவதானம்!

பிணையாளர்கள் இல்லாமையினால் வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பிக்கவோ அவற்றை முன்னெடுத்துச் செல்வதற்கான நிதி வசதிகளை பெற்றுக்கொள்ளவோ முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இளம் முயற்சியாளர்களுக்குத் தேவையான இயந்திரங்களையும் உபகரணங்களையும் வழங்குவதற்கான வழிமுறைகள் பற்றி ஆராயுமாறு மத்திய வங்கி ஆளுநர் மேலும் கேட்டுள்ளார்.

# 'லிப்ட்' வசதி ஒழுங்கு இல்லை; விமான நிலையத்தில் சிரமம்



கொழும்பு, பெப். 28

கட்டுநாயக்க விமான நிலையத்தில் 'லிப்ட்' வசதிகள் சரியான முறையில் செயற்படாமையினால் பயணிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

விமான நிலையத்திலிருந்து வெளியேறும் பகுதிக்கு அருகில், மேல் மாடிக்கு செல்லும் லிப்ட் கடந்த சில நாள்களாக இயங்கவில்லை.

விமானங்களுக்குச் செல்லும் பல நுழைவுகள் மேல் மாடியிலேயே அமைந்துள்ளன.

'லிப்ட்' இயங்காமையினால் அந்தப் பகுதிகளுக்கு படிக்கட்டுகளிலேயே பயணிகள் செல்ல நேரிட்டுள்ளது.

எனினும் இயலாமை மற்றும் விசேட தேவையுடையோர் விமானங்களுக்கு செல்லும் போது பெரும் சிக்கலுக்கு முகங்கொடுத்துள்ளனர். இதனால் அவர்களை தூக்கிக்கொண்டு படிக்கட்டுகளில் செல்லவேண்டிய நிலை ஏனையவர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை முதல் இவ்வாறு லிப்ட் இயங்காமல் உள்ளது என விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(க)



தவக்கால சிந்தனை

# நமக்காக மரித்த இயேசு

தவக்காலத்தில் ஏசுவின் பாடு மரணத்தை தினமும் தியானிக்கிற வேளையில் இயசுகிறிஸ்து இந்த உலகத்திற்கு மனிதனாக வந்து ரத்தத்தை சிந்தி மரிப்பதற்கான உரிய காரணங்களைப் பார்ப்போம்.

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே இந்தத் தவக்காலத்தில் இயேசுவின் பாடு மரணத்தை தினமும் தியானிக்கிற வேளையில் இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு மனிதனாக வந்து ரத்தத்தை சிந்தி மரிப்பதற்கான உரிய காரணங்களைப் பார்ப்போம்.

யோவான் 10:11 நானே நல்ல மேய்ப்பன், நல்லமேய்ப்பன் ஆடுகளுக்காகத்தன் ஜீவனைக்கொடுக்கிறார். ஏசாயா 53:6 இல் கூறப்பட்டபடி நாமெல்லாரும் ஆடுகளைப் போல வழிதப்பி திரிந்து அவனவன் தன்தன் வழியிலே போனோம். கர்த்தரே நம் எல்லோருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழச்செய்தார். நாம் பாதுகாக்கப்பட அவர் மரித்தார்.

ஏசாயா 53:12 அநேகருடைய பாவத்தையும் தாமே சுமந்து ஏற்றுக்கொண்டு ரத்தம் சிந்தினார். எபிரேயர் 9:22ம் வசனத்தின்படி ரத்தம் சிந்துதல் இல்லாமல் மன்னிப்பு உண்டாகாது. நமக்கு பாவமன்னிப்பு உண்டாக அவர் நம்முடைய பாவத்தை ஏற்றுக்கொண்டு மரித்தார்.

யோவான் 11:52 தீர்க்கதரிசன வார்த்தை நிறைவேறப்படவும் சிதறியிருக்கிற தேவனுடைய பிள்ளைகள் ஒன்று சேரவும் மரித்தார். ஜனங்கள் எல்லோரும் கெட்டுப்போகாதபடிக்கு ஜனங்களுக்காக மரிப்பது நமக்கு நலமாயிருக்குமென்று தீர்க்க தரிசனமாய் கூறினார்கள். பல தீர்க்கதரிசனங்களாய் சொல்லப்பட்டது நிறைவேறும்படியாய் மரித்தார்.

எபிரேயர் 2:14 மரணத்திற்கு அதிகாரியான பிசாசை தமது மரணத்தினால் அழிக்கும்படிக்கு சிலுவையில் மரித்தார்.லூக்கா 23:12 பகையாக இருந்த இரண்டுபேர் ஒன்று சேர்ந்து சமாதானமாய் நாட்டை ஆள அவர் மரித்தார்.

ஏசாயா 53:5ம் வசனத்தின்படி நமக்கு சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர் மேல் வந்தது. இன்றைக்கு இதை வாசிக்கும் உங்களுக்கும் சமாதானத்தையும், மன்னிப்பையும், அன்பையும், ஆசீர்வாதத்தையும், பாதுகாப்பையும், பாவத்திலிருந்து, பிசாசின் பிடியிலிருந்து விடுதலையும் தர வல்லமையுள்ளவர்.

பாஸ்டர். ஏ. ஏசையன்.

# அம்பாறையில் நடந்த அசம்பாவிதம் குறித்து பாரபட்சமின்றி நடவடிக்கை எடுக்கவேண்டும்!



அமைச்சர் ரிஷாத் கோரிக்கை

அம்பாறையில் இடம்பெற்ற அசம்பாவிதம் தொடர்பில் பாரபட்சமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும் என அமைச்சர் ரிஷாத் பதியுதீன் பொலிஸாரை வலியுறுத்தியுள்ளார்.

அம்பாறை மாவட்டத்திலுள்ள முஸ்லிம் கடையொன்றுக்குச் சென்ற ஒரு சில பெரும்பான்மை இனத்தவர்களால் கடை உரிமையாளர் மீதும் கடை மீதும் தாக்குதல் நடத்தப்பட்டதுடன் அருகில் உள்ள பள்ளி மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்த அசம்பாவிதம் தொடர்பில் அறிந்து கொண்ட அமைச்சர் ரிஷாத் பதியுதீன் உடனடியாக அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் பிரதான பொலிஸ் பொறுப்பதிகாரிகளைத் தொடர்பு கொண்டு இந்தச் சம்பவங்களை உடனடியாகத் தடுத்து நிறுத்துமாறும் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு விஷேட பாதுகாப்பும் வழங்குமாறும் சம்பவத்தின் சூத்திரதாரிகள் மீது பாரபட்சமின்றி நடவடிக்கை எடுக்குமாறும் வலியுறுத்தினார்.

அமைச்சரின் தொலைபேசி அழைப்பை அடுத்து அந்தப் பகுதியில் பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுள்ளமையுடன், நிலைமை பொலிஸாரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

இதேவேளை, அம்பாறை மாவட்டத்தில் ஏற்பட்டிருக்கும் பதற்றமான சூழ்நிலை மற்றும் அங்கு ஏற்பட்டுள்ள அசம்பாவிதங்கள் குறித்து, கிழக்கு மாகாணத்திற்கான பொலிஸ் மா அதிபரையும் தொடர்பு கொண்டு அமைச்சர் ரிஷாத் நிலைமைகளை விளக்கியுள்ளார்.

அத்துடன், முஸ்லிம்கள் பெரும்பான்மையாகவுள்ள அம்பாறை மாவட்டத்தில்,இனங்களுக்கிடையில முறுகல் நிலையைத் தோற்றுவிப்பதற்காக ஒரு சில இனவாத சக்திகள் மேற்கொள்ளும் இவ்வாறான முயற்சிகளின் போது நாம் சமயோசிதமாக சிந்தித்து செயற்படவேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## அம்பாறை அசம்பாவிதத்துக்கு முஸ்லிம் கவுன்ஸில் கண்டனம்

அம்பாறைநகர் அசம்பாவிதத்தை ஸ்ரீ லங்கா முஸ்லிம் கவுன்ஸில் மிக வன்மையாகக் கண்டிக்கிறது. நிலைமையை சுமுகமாக்கத் தேவையான நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட தரப்பினர் விரைவாக முன்னெடுக்க வேண்டும் என அமைப்பின் தலைவர் என்.எம். அமீன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்று அதிகாலை அம்பாறை நகரில் இடம்பெற்ற அசம்பாவிதம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அம்பாறையில் நேற்று அதிகாலை இடம்பெற்ற சம்பவம் திட்டமிட்ட அடிப்படை யில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவே கருதவேண்டியுள்ளது. நாட்டிலுள்ள இனங்களுக்கிடையிலான நல்லுறவை சீர்குலைக்கும் ஓர் அம்சமாகவே இதனைப் பார்க்க வேண்டியுள்ளது.

முஸ்லிம்களை ஆத்திரமூட்டச் செய்யும் இதுபோன்ற நடவடிக்கைகளின் போது முஸ்லிம்கள் மிகவும் விவேகத் துடனும், பொறுமையுடனும் நடந்துகொள்ள வேண்டும் என விநயமாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

அந்தப் பிரதேசத்தின் பாதுகாப்பைப் பலப்படுத்த தேவையான சகல நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அரசியல் தலைமைகள் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் பேச்சுகளை முன்னெ டுத்துள்ளன. மக்களை அமைதியாகவும் நிதானத்துடனும் நடந்து கொள்ளுமாறும், நாட்டில் இதற்கு முன்னர் ஏற்பட்ட சம்பவங்களை அனுபவங்களாக கொள்ளுமாறும் நாம் முஸ்லிம்களை மிகவும் விநயமாகக் கேட்டுக் கொள்கின்றோம் எனவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் கவுன்ஸில் தலைவர் என்.எம். அமீன் தெரிவித்துள்ளார்.

## வீதியில் நிறுத்தப்பட்டிருந்த பஸ் விஷமிகளால் தீக்கிரை!

தம்பலகாமம் பகுதியில் சம்பவம்

தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தம்பலகாமம் கிண்ணியா பிரதான வீதியின் பட்டிமேடு சந்தியில் பழுதடைந்த நிலையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பஸ் ஒன்று நேற்று அதிகாலை 2.15 மணியளவில் இனந்தெரியாத நபர்களால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது என தம்பலகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த பஸ் வீதியின் அருகே நிறுத்திவைக்கப்பட்டிருந்த வேலையிலேயே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும் தீக்கிரையாக்கப்பட்ட பஸ் முள்ளிப் பொத்தானை 97 ஆம் கட்டையை சேர்ந்த சமிந்த என்பவருக்குச் சொந்தமானது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை தம்பலகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## கொக்கிளாய் அ.த.க.பாடசாலையின் புதிய வகுப்பறைத் தொகுதி திறப்பு





முல்லைத்தீவு, பெப். 28

முல்லைத்தீவு மாவட்டத்தின் முல்லைத்தீவு கல்வி வலயத்தில் அமைந்துள்ள கொக்கிளாய் அ.த.க.பாடசாலையின் புதிய வகுப்பறைத்தொகுதி மற்றும் கணினி அறைத்திறப்பு விழா நேற்று நடைபெற்றது.

நேற்று நண்பகல் 12:10 மணியளவில், பாடசாலையின் முதல்வர் திருமதி. வி.பத்மநாதனின் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வு விருந்தினர் வரவேற்புடன் தொடங்கியது.

அதனைத் தொடர்ந்து புதிய வகுப்பறைத் தொகுதி மற்றும் கணினி அறை என்பன திறந்து வைக்கப்பட்டன.

இந்தக் கட்டடங்களை நிகழ் வின் முதன்மை விருந்தினராக கலந்துகொண்ட வடமாகாண கல்வி அமைச்சர் கந்தையா சர்வேஸ்வரன் திறந்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து மாணவர்க ளின் கலைநிகழ்வுகள், விருந்தினர் உரை மற்றும் பாடசாலையின் அதிபர்ஆசிரியர்களின் உரைகள் என்பன இடம் பெற்றன.

மேலும், இந்த நிகழ்வின் விருந்தினர்களாக வடமாகாண கல்வி அமைச்சர் கந்தையா சர்வேஸ்வரன், வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும் கல்வி அமைச்சு செயலாளர் இராசா இரவீந்திரன், கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் சிவபாலன் குணபாலன், முல்லைத்தீவு பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் சிறீஸ்கந்தராசா ஆகியோர் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

அத்துடன், இந்த நிகழ்வில் பாடசாலையின் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் நலன் விரும்பிகள் என பலரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.



# குளங்களை அபிவிருத்தி செய்யுமாறு அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை



கொழும்பு, பெப். 28

உலர் வலயங்களிலுள்ள இரண்டாயிரத்து 400 குளங்களைஅபிவிருத்திசெய்யும்நடவடிக்கைகளை துரிதமாக ஆரம்பிக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இதற்குத் தேவையான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. வறட்சியான காலநிலைக்கு மத்தியில் விவசாயிகளுக்கு சிக்கல்கள் இன்றி வாழ்வாதாரத்தை முன்னெடுத்துச் செல்வதற்காக குளங்களை மறுசீரமைக்குமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

பொலநறுவை மாவட்ட இணைப்புக்குழுக் கூட்டத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கருத்து வெளியிட்டார். மலரும் பொலநறுவை மாவட்ட அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் இதுவரை அமுல்படுத்தப்பட்ட செயற்றிட்டங்களின் முன்னேற்றங்கள், இந்த வருட அபிவிருத்தித் திட்டங்கள் என்பன பற்றி விரிவாக ஆராயப்பட்டன.

சிறுநீரக வைத்தியசாலை, பொருளாதார மத்திய நிலையங்கள், மும்மொழி பாடசாலைகள் என்பனவற்றை அமைப்பது பற்றி கூடுதல் கவனம் செலுத்தப்பட்டது.

கல்வி, சுகாதாரம், நெடுஞ்சாலைகள், நீர்ப்பாசனம் போன்ற துறைகளின் முன்னேற்றம் தொடர்பாகவும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

நீர்த்தேக்கங்கள், குளங்கள் என்பனவற்றின் நீர்மட்டம் பற்றி விவசாயிகளுக்கு விளக்கம் அளித்து பயிர்ச் செய்கைகளை திட்டமிடலுடன் முன்னெடுப்பதற்கான செயற்றிட்டங்களும் அவசியமாகும்.

இந்த நிகழ்வில் வெலிகந்த, திம்புலாகல பிரதேசங்களைச் சேர்ந்த 636 பயனாளிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக 2கோடியே 90 லட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்களும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



## ஜனாதிபதி தலைமையில் நிர்மாண விருது விழா

கொழும்பு, பெப். 28

தேசிய நிர்மாண கைத் தொழிலின் முன்னேற்றத்திற்கான சிறந்த பங்களிப்புகளை பாராட்டும் வகையில் வருடாந்தம் ஏற்பாடு செய்யப்படும் 'தேசிய நிர்மாண விருது விழா 2017' ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இடம் பெற்றது.

நேற்றுமுன்தினம் பிற்பகல் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இநத விழா இடம்பெற்றது.

நிர்மாணத்துறையில் சிறந்து விளங்கிய 8 பேருக்கு விசேட விருதுகளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வழங்கினார்.

தேசிய ஒப்பந்தக்காரர்களால் வெளிநாட்டு கருத்திட்ட நிர்மாணப்பணிகளை ஊக்குவித்து, பாராட்டுவதற்காக இம்முறை சேர்த்துக்கொள்ளப்பட்ட 3 புதிய விருதுகளையும் ஜனாதிபதி வழங்கினார். நிர்மாணத்துறை மூலப் பொருள்கள் மற்றும் உற்பத் திக்கான சுற்றாடல் வழிகாட்டல் சஞ்சிகை வீடமைப்பு, நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாசவினால் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில், பிரதி அமைச்சர் இந்திக பண்டாரநாயக்க, வீடமைப்பு, நிர்மாணத்துறை அமைச்சின் செயலாளர் ஆர்.எம். அபேரத்ன, நிர்மா ணத்துறை கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் எம்.ஆர். ஜயவர்தன, நிர்மாணத்துறை கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பா ளர் நாயகம் கட்டிடக் கலைஞர் எச்.கே. பாலச்சந்திரன் மற்றும் அதிகாரிகள் உள்ளிட்ட சிலர் கலந்துகொண்டனர்.

## அரைக் கம்பத்தில் பறக்கிறது ஐ.நா கொடி; கொழும்பில் மக்கோலியின் இறுதி நிகழ்வு!

கொழும்பு, பெப்.28

உடல்நலக் குறைவினால் திடீரென மரணமான இலங்கைக்கான, ஐ.நாவின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி உனா மக்கோலியின் இறுதி நிகழ்வு எதிர்வரும் வெள்ளிக்கிழமை கொழும்பில் நடைபெறவுள்ளது.

மருத்துவ விடுப்பில் இருந்து சிகிச்சை பெற்று வந்த உனா மக்கோலி, கடந்த வெள்ளிக்கிழமை இரவு காலமானார்.

அவரது மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து கொழும்பில் உள்ள ஐ.நா பணியகத்தில் ஐ.நா கொடி அரைக்கம்பத்தில் பறக்க விடப்பட்டுள்ளது.அத்துடன், இலங்கையில் செயற்படும் ஐ.நா அமைப்புக்களின் அதிகாரிகள், பணியாளர் கள் நேற்று முன்தினம் நடந்த நிகழ்வில், உனா மக்கோலியின் மறைவுக்கு இரண்டு நிமிட மௌன வணக்கம் செலுத்தினர்.



## விமானங்களின் பயண தாமதம் குறித்து ஸ்ரீலங்கன் விமான நிறுவனம் கவலை

கொழும்பு, பெப். 28

கொழும்பு சர்வதேச விமான நிலையத்தில் தற்போது நிலவும் விமானங்களின் பயணத் தாமதம் குறித்தும் நெருக்கடி நிலை தொடர்பிலும் ஸ்ரீலங்கன் விமான நிறுவனம் கவலை தெரிவித்துள்ளது.

பறவையொன்று விமானத்தில் மோதியதனால் விமானத்திற்கு ஏற்பட்ட பாதிப்பு உள்ளிட்ட சம்பவங்களினால் இந்தத் தாமதம் எற்பட்டுள்ளது என்று ஸ்ரீலங்கன் விமானநிறுவனம்தெரிவித்துள்ளது.

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு செல்வதற்கு முன்னதாக நிறுவன இணையத்தளத்தினுடாக அல்லது 24 மணித்தியாலம் செயற்படும் இந்த நிறுவனத்தின் மத்திய நிலையத்திற்கான 011-97331979 என்ற தொலைபேசியினூடாக தொடர்பு கொண்டு அல்லது தமது பயணம் தொடர்பாக விமான பிரதிநிதியிடம் விமானம் தொடர்பான தகவல் கேட்டறியுமாறு ஸ்ரீலங்கன் விமான நிறுவனம் பயணிகளிடம் கேட்டுக் கொண்டுள்ளது.

இதே போன்று உங்களது பேசிமைல்ஸ் (Facsimiles) என்ற தெளிவான விவரங்களையும் மின் அஞ்சல் முகவரி மற்றும் தொலைபேசி இலக் கங்களை உள்ளடக்குவதன்மூலம்விமானதாமதம்குறித்து முன்கூட்டியே அறிந்து கொள்ள முடியும். என்றும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

## பெங்களூருக்கு மஹிந்த ராஜபக்ஷ பயணமானார்



கொழும்பு, பெப். 28

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று அதிகாலை இந் தியாவின் பெங்களூர் நகரத்திற்கு பயணமாகியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதியுடன் லொஹான் ரத்வத்த, செயலாளர் உதித லொக்குபண்டார உள்ளிட்ட 6 பேர் பயணித்துள்ளனர்.

## நவீன உலகை வெற்றி கொள்ளும் சந்ததியை உருவாக்குவது அரசின் எதிர்பார்ப்பு





கொழும்பு, பெப். 28

பழைமைவாத சிந்தனையை தோற்கடித்து நவீன உலகை வெற்றிக் கொள்ளக்கூடிய இளம் சந்ததியினரை உருவாக்குவது சமகால நல்லாட்சி அரசின் எதிர்பார்ப்பாகும் என்று அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

மாத்தறை சென்.தோமஸ் உயர் பெண்கள் கல்லூரியின் விடுதியை திறந்து வைக்கும் நிகழ்விலும் புதிய நான்கு மாடி வகுப்பறைக் கட்டடத்திற்கு அடிக்கல் நடும் நிகழ்விலும் கலந்து கொண்டு அவர் இதனைத் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த நிழ்வில் அமைச்சர் மேலும் உரையாற்றுகையில்-

நாட்டின் முன்னேற்றம் என்பது இளம் சந்ததியினர் கல்வியின் ஊடாக முன் னேறுவதாகும். இதற்காக அரசு தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயற்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

## 'வடக்கின் வர்ணங்கள்' சித்திரக் கண்காட்சி

வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வடக்கு மாகாணப் பாடசாலைகளில் கல்வி கற்கும் சித்திரப் பாட ஆசிரியர்களின் 'வடக்கின் வர்ணங்கள்' சித்திரக் கண்காட்சி நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் தலைமையில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிமுதல் மாலை 4.30 மணி வரையும் மறுநாள் சனிக்கிழமை காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 3 மணிவரையும் கண்காட்சி நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் கலாநிதி கந்தையா சர்வேஸ்வரனும் சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரனும் துறைசார் விருந்தினராக ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் கோ.கைலாசநாதனும் கலந்துகொள்வர். (இ)

## தினசரி ராசி பலன்
(28.02.2018)

*2018 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் மாசித்திங்கள் 16 ஆம் நாள் புதன்கிழமை திரயோதசித்திதி பகல் 11.46 மணி வரை பின்னர் சதுர்த்தசி. நட்சத்திரம். ஆயிலியம் பி.இ.1.44 மணி வரை பின்னர் மகம். சித்தயோகம் முழுவதும்.*

**ராகுகாலம்** - *பகல் 12.23 மணி முதல் 1.52 மணி வரை*

**சுபநேரம்** - *மாலை 4.54 மணி முதல் 6.26 மணி வரை*

**திவசம் செய்ய வேண்டிய திதி**- *மாசி மாத வளர்பிறை சதுர்த்தசி.*

**பிறந்த நட்சத்திர வழிபாடு:** *ஆயிலியம்*

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி**

**மேஷம்** – சஞ்சலமான நாள். நற்பலன்கள் குறைவாகக் காணப்படும். பணவருவாய் குறையும். தேகசுகம், குடும்ப சுகம் பாதிப்படையும். உத்தியோகத்தர்களின் கோரிக்கை நிராகரிக்கப்படும்.

**ரிஷபம்** – மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு மத்திமமாக இருக்கும். குடும்பத்தினருக்கு தொழிலுக்கேற்ப ஊதியம் கிடைப்பது கடினம். தேகசுகம் பாதிப்படையும்.

**மிதுனம்** – ஆக்கபூர்வமான நாள். வருமானம் வளமாக இருக்கும். குடும்ப உறவு சிறப்பாக இருக்கும். வியாபாரம் விறுவிறுப்பாக நடக்கும். சுயதொழில் முன்னேற்றம் அடையும்.

**கடகம்** – அனுகூலமான நாள். வருமானம் வளமாக இருக்கும். குடும்ப உறவில் நெருக்கம், பாசம் அதிகரிக்கும். பிரிந்திருந்த உறவுகள் மீண்டும் இணையும் வாய்ப்பு உண்டாகும்.

**சிம்மம்** – கவலையான நாள். எதிர்பார்த்த பணம் வரத் தாமதமாகும். குடும்பத்தில் வீண் சச்சரவு உண்டாகும். நினைத்த காரியம் நிறைவேற்றுவதில் தடைகள் ஏற்படும்.

**கன்னி** – மகிழ்ச்சியான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். சிறந்தவர்களின் நட்பு கிட்டும். நினைத்தவை கிடைக்கும். கைத்தொழில் செழிப்படையும்.

**துலாம்** – சமபலன்கள் காணப்படுகின்றன. பணவரவு சுமாராக இருக்கும். உடல்நலத்தில் கவனம் தேவை. எண்ணிய காரியம் தடைப்படும். பயணத்தால் பல குழப்பங்கள் தோன்றும்.

**விருச்சிகம்** – உயர்வான நாள். வருமானம் உயரும். குடும்பத்தில் ஒற்றுமை மேலோங்கும். வியாபாரத்தில் முன்னேற்றமும், வருமானமும் அதிகரிக்கும். சகோதர வழியால் முன்னேற்றம் உண்டாகும்.

**தனுசு** – யோசனையான நாள். பணத்தட்டுப்பாடு உண்டாகும். தேவையற்ற செலவுகளால் கடன்பட நேரிடும். வியாபாரத்தில் நட்டம் உண்டாகும். மாணவர்களுக்கு கல்வி ஊக்கம் குறையும்.

**மகரம்** – விருத்தியான நாள். பொருளாதாரம் மனநிறைவைத் தரும். குடும்பத்தில் நல்லுறவு நிலவும். செய்தொழில் விருத்தியடையும். சகோதர உறவு வலுவடையும். சொந்த வீடு வாங்கும் எண்ணம் நிறைவேறும்.

**கும்பம்** – அதிஷ்டமான நாள். தனலாபம் பெருகும். குடும்பத்தில் நல்லிணக்கம் காணப்படும். சிலருக்கு அரசாங்க வேலை வாய்ப்புக்கள் கிடைக்கும். பெண்கள் அரச உதவியால் தொழில் வாய்ப்புப் பெறுவார்கள்.

**மீனம்** – மேன்மையான நாள். பொருளாதாரம் ஏற்றமடையும். குடும்ப உறவில் அன்பு, பாசம் அதிகரிக்கும். பிள்ளைகளால் பெற்றோருக்கு மகிழ்ச்சியும், பெருமையும் உண்டாகும்.

**சந்திராட்டமநாள்: மூலம், பூராடம், உத்தராடம் 1ஆம் பாதம் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் சுபகருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**

# முடியுமானால் நல்லாட்சி அரசை 2020 இல் வீட்டுக்கு அனுப்புங்கள்



## துமிந்த திஸாநாயக்க சவால்

கொழும்பு, பெப்.28

அரசை நிர்வகிக்க விரும்புபவர்கள் வேண்டுமானால் 2020ஆம் ஆண்டு தேர்தலில் நல்லாட்சி அரசை வீட்டுக்கு அனுப்பித் தமது ஆட்சியை நிறுவிக் கொள்ளட்டும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸா நாயக்க சவால் விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு மேலும் கருத்து வெளியிட்ட அவர்,

2015ஆம் ஆண்டு ஆட்சியமைத்த அரசை, 2018 ஆம் ஆண்டில் உள்ளூராட்சித் தேர்தல் முடிவொன்றின் அடிப்படையில் வீட்டுக்குப் போகச் சொல்வார்களாயின் அது ஜனநாயகமல்ல.

இவ்வாறானதொரு நடவடிக்கையின் மூலம் மக்களைக் குழப்புவதற்கான முயற்சி, பாரதூரமானது. தற்போது மாகாண சபைத் தேர்தலுக்கு நாடு தயாராகவுள்ளது. அந்தத் தேர்தலில் வேறேதும் கட்சி வெற்றி பெற்று, அரசையும். உள்ளூராட்சிச் சபைகளையும் கோரினால் என்ன நடக்கும்?

எனவே, நாம் அரசியல் கட்சிகளுக்குத் தெரிவித்துக் கொள்வது என்னவென்றால், அனைவரும் ஆட்சிக்கு வரவேண்டும் என்ற அவா உள்ளது. ஆனால், அதற்காக மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்த வேண்டாம். அந்த ஆசையை உரிய தேர்தலில் வெளிக்காட்டுங்கள்.

அதுவரை, உள்ளூராட்சிச் சபைகளில் வெற்றி பெற்றவர்கள், மக்களுக்கு வாக்குறுதியளித்தது போன்று கிராம அபிவிருத்தியில் பங்களிப்புச் செலுத்துங்கள் என்றார். (ஐ)

## மேல் மாகாணத்திலுள்ள அரச வைத்தியசாலைகளுக்கு இந்திய உதவியுடன் சத்திர சிகிச்சை உபகரணங்கள்

கொழும்பு, பெப். 28

மேல் மாகாணத்திலுள்ள அரச வைத்தியசாலைகளில் சத்திரசிகிச்சைக்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் துணி வகைகளை வழங்குவது தொடர்பில் இந்திய நிறுவனம் ஒன்றுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வின் போது அமைச்சர் ராஜித சேனாரத்ன தலைமையில் இருதரப்பினருக்கும் இடையில் ஒப்பந்தம் கைச்சாத்தானது.

இந்த ஒப்பந்தத்தின் ஊடாக 75 லட்சம் டொலர் பெறுமதியான உபகரணங்களை வழங்குவதற்கு இந்தியாவின் சுப்ரம் ஹொஸ் பிட்டல் சொலுசன் முன்வந்துள்ளது.

வைத்திய சிகிச்சையின் பின்னரான கழிவுகளை முறையாக அகற்றுவது தொடர்பில் ஆஸ்திரேலிய நிறுவனம் ஒன்றுடன் விரைவில் ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்படும் என்று அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார். (கு)

## ஆலய மஹோற்சவம்

நீர்வேலி தெற்கு ஞான வைரவர் ஆலயத்தின் அலங்கார உற்சவத்தில் இறுதி நாளான நாளை முதலாம் திகதி வியாழக்கிழமை இரவு சுவாமி பூஞ்சப்பரத்தில் வீதி வலம் வருதல் இடம்பெறும்.

அன்றைய தினம் முற்பகல் 10 மணிக்கு விசேட அபிஷேகம் மாசி மக தீர்த்த உற்சவம் பூசை வழிபாடுகள் இடம்பெற்று நண்பகல் மகேஸ்வரப் பூசை நடைபெறும்.

இரவு 8 மணியளவில் சுவாமி வெளி வீதி வலம் வருவார். (இ)

## தரம் 5 மாணவர்களுக்கான கருத்தரங்கு நாளை

தரம் ஐந்து மாணவர்களுக்கான வினா விடைத் தொகுப்பும் கருத்தரங்கும் யாழ்ப்பாணத்திலும் சாவகச்சேரியிலும் இடம்பெறவுள்ளன.

சாவகச்சேரி நகரசபை மணடபத்தில் நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பி.ப. 1.30 மணிவரையும் மறுநாள் வெள்ளிக்கிழமை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் காலை 8.30 மணிமுதல் 1.30 மணிவரையும் நடைபெறும். மாணவர்களைக் கலந்துகொண்டு பயன்பெறுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (இ

## ஏழிசை மாலை

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் இசை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களால் மாதாந்தம் நடத்தப்படும் ஏழிசை மாலை நிகழ்வின் 22 ஆவது நிகழ்வு -

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் ந.சர்வேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் பிரதி அதிபர் ச.லலீசனும் சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி கலாசார மத்திய நிலைய கலாசார உத்தியோகத்தர் சி.முகுந்தனும் கலந்து கொள்வர். (இ)

## மங்கையர்க்கரசியின் மெய்வன்மைப்போட்டி

யாழ்ப்பாணம், பெப். 28

நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் மகேசன் கஜேந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் பொ.ஐங்கரநேசனும், சிறப்பு விருந்தினராக பழைய மாணவியும் ஓய்வுநிலை ஆசிரியருமான திருமதி சகுந்தலா பத்மநாதனும், கௌரவ விருந்தினராக பழைய மாணவன் (கனடா) நடராசா சுரேந்திரனும் கலந்துகொள்வர். (இ)

## மின் தடை

உயர் அழுத்த மற்றும்தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை -

யாழ் பிரதேசத்தில் - வேம்பிராய், மந்துவில், சின்னச்சந்தையடி, சிறுப்பிட்டி, நீர்வேலி, A9 வீதியில் (புங்கங்குளத்திலிருந்து கச்சேரி நல்லூர் வீதி சந்தி வரை), பாரதிலேன், புங்கன்குளம் வீதி ரயில் கடவை வரை, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, பேரின்பநாயகம் வீதி, காட்டுக்கந்தோர் வீதி ஆகிய பிரதேசங்களிலும் -

மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

தமிழர் நாடறிந்த இலக்கியச் செம்மல் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ். கம்பன் என்றால் ஜெயராஜ் என்று எண்ணுமளவுக்கு இலக்கியக் கம்பனாய் உருவெடுத்தவர் அவர். அவருடைய இலக்கிய அனுபவத் தொகுப்பு இங்கு தினசரி தொடராகப் பிரசுரமாகின்றது. ‘உன்னைச் சரணடைந்தேன்’ என்ற அவரது தொகுப்பில் ‘யாழில் கம்பன்’ பற்றிய தொடர் பதிவு இது.



# ஆறுமுகம் ஆன பொருள்


வித்துவான் எனது ஆசிரியர். எந்த வகுப்பிலும் அவரிடம் நான் படிக்கவில்லை. ஆனாலும் அவர் எனது ஆசிரியர். அது எப்படி? கேள்வி பிறக்கும். ஆசிரியன் எனும் சொல்லுக்கு ‘கற்கப்படுபவன்’ எனப் பொருள் உரைக்கிறார் நச்சினார்க்கினியர். எத்துணை ஆழமான வியாக்கியானம். ஆசிரியர் சொல்லும் பாடத்தை அல்ல, ஆசிரியனையே மாணவன் கற்கிறான். புத்தி, நம் இயக்கத்தின் ‘‘மூலம்’’ கல்விக் கருவியால், மாணவனின் புத்தியில் பதிவாகும் ஆசிரியன், மாணவனின் அனைத்து இயக்கங்களிலும்தான் பிரதிபலிப்பான். தோற்றத்தால், பெற்றோரின் அடையாளம் இனங்காணப்படுதல்போல, புத்தியால், ஆசிரியனின் அடையாளம் இனங்காணப்படும். அது நோக்கியே கல்வியிலும், சந்ததி சொல்லும் மரபு உருவாகிற்று. வகுப்பில் கற்பிக்காவிட்டாலும், வாழ்க்கையில் கற்பித்து, என் புத்தியில் பதிவானவர் வித்துவான். இன்று என் புத்தியில், நித்தமும் அவர் சாயல் கண்டு சிலிர்க்கிறேன். என் புத்தியையும் பக்தியையும் புடம்போட்டு, கல்வியால் கயமைபெறாது எனைக் காத்த, வித்தைக்கு வித்துவான் வித்து.

* * *

இத்துணை செந்தமிழ் நடையில் ஒரு கட்டுரையா? உங்கள் சலிப்பை உணர்கிறேன். உரையாடல் தமிழிலும், செந்தமிழ் நடையைக் கடைப்பிடித்த, வித்துவானுக்கு வேறு எங்ஙனம் மரியாதை செய்யலாம்? அவர் எண்ணம் இத்தமிழ் நடையையும் கூடவே அழைத்து வந்துவிடுகிறது. அன்பு செய்த மனிதரைப்பற்றி அறிவு நடையில் பேசலாமா? அறிவுத்தமிழில் பேசி அவரால் அன்பு செய்ய முடிந்ததா? கேள்விகள் நியாயமானவை. வார்த்தையின் வலிமை, பேசும் மொழியில் அல்ல. நினையும் இதயத்தில். அவ் இதயம் கனிந்து இருந்ததால், அவரால், இவ்வறிவுத் தமிழாலும் அன்பு செய்ய முடிந்தது. ஓர் ஆட்டுக்காய் அழுத, அவர் எங்கே? நான் எங்கே? செந்தமிழில் அன்பு சொல்லும் திறமை எனக்கில்லை. கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழியாய், வித்துவானின் செந்தமிழ் நடையில் இக் கட்டுரை வரைய விருப்பிருந்தாலும், வீண்முயற்சி செய்யும் விருப்பம் தவிர்க்கிறேன். வானுயர்ந்த மானுடத்தின் வடிவம் என வாழ்ந்திருந்த வித்துவானை உங்கள் கண் முன் கொணர, என் சொந்தத் தமிழ் தான் துணைநிற்கும். பக்தியாய் முனைகிறேன். படியுங்கள்.

* * *

பிறப்பு - புங்குடுதீவு. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் வித்துவான் பட்டம். தமிழகப் பல்கலைக் கழகத்தில் பின்னாளில் துணைவேந்தராய் இருந்த, வ.சுபமாணிக்கம் இவருடன் படித்தவர். பரீட்சை முடிவில் இவருக்கு ‘(f) பெஸ்ட் கிளாஸ் (f) பெஸ்ட் ராங்’, சுபமாணிக்கத்தின் சித்தி இவருக்குப் பிந்தியது. தமிழகத்தில் அவர் துணைவேந்தராய் வந்தார். ஈழத்தில் இவர் இறுதிவரை பாலருக்குப் படிப்பித்தார். ‘யாரொடு நோகோம்? யார்க்கு எடுத்துரைப்போம்?’ வாழ்க! கற்றோரைப் பயன் செய்யும் நம் ஈழத்து அறிவுலகு. முப்பது ஆண்டுகளுக்கு மேல், ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில்



# உன்னைச் சரணடைந்தேன்

ஆசிரியர் தொழில். கடைசி ஓர் ஐந்தாறு ஆண்டுகள், இந்துக் கல்லூரியில் எங்களோடு. வெள்ளை வேட்டி, வெள்ளை நஷனல், கழுத்தைச் சுற்றிய ‘ம(f)ப்ளர்’. புத்தக ‘ஸ்ராண்டாய்’ எப்போதும் பயன்படும் ஒரு கையிடுக்கு. வெள்ளத்துள் நடப்பதுபோல், மற்றொரு கையால் எப்போதும் வேட்டியைச் சிறிது தூக்கி, அசைந்து நடக்கும் நடையழகு. அன்பு முதிர்ச்சியின் அடையாளமாய், நடையிலும், சிரிப்பிலும் வெளிப்படும் பெண்மை, பாட்டோடும் பைந்தமிழோடும் ஒட்டிய வாய், பக்தியோடு ஒட்டிய கண். நீண்ட நெடிய உருவம். அதனால் விளைந்த சிறு கூனல். முடிந்தவரை, அவர் வடிவை உங்கள் கண்



முன் கொணர முனைந்திருக்கிறேன். இது புறவடிவு. அகவடிவு?

## கம்பவாரிதி ஜெயராஜின் இலக்கிய அனுபவப் பகிர்வு 109

தொடரும் பந்தியில் தொடரும்.

* * *

நான் உயர்தர வகுப்பு முதலாம் ஆண்டில் படித்தபோது, எங்கள் சந்திப்பு ஒரு சண்டையில் தொடங்கியது. முப்பது ஆண்டுகள் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் கற்பித்துவிட்டு, அப்போதுதான் இந்துக் கல்லூரிக்கு அவர் வந்திருந்தார். முப்பது ஆண்டுகள் கற்பித்த விசுவாசம், ஸ்கந்தவரோதயாக் கல்லூரியே அவர் மனதில் பதிந்திருந்தது. இந்துக் கல்லூரியின் ஆற்றல்கள், அவர் மனதிற்குப் பெரிதாய் இதந்தரவில்லை. பேச்சாளனாய் நான் இந்துக் கல்லூரியில் பதிவாகியிருந்த நேரம் அது. புதிதாய்ப் பல்லு முளைத்த பாலகன், எந்நேரமும் இறப்பர் கடிப்பது போல், பேச்சுப் பித்துப் பிடித்திருந்த காலம். நான் சிவராமலிங்க மாஸ்டரின் கைப்பிள்ளை. அவர்கள் இருவரும் ஒரே ஊரால் உறவு பட்டவர்கள். ஒரு நாள் அவர்கள் ஒன்றாயிருந்தபோது, மாஸ்டரைச் சந்திக்கச் சென்றிருந்தேன். ‘‘இவன் பெரிய பேச்சாளன் கி.வா.ஜ. மாதிரிப் பேசுவான்.’’ மாஸ்டர் பெருமையாய் என்னை அவருக்கு அறிமுகப்படுத்த, இகழ்ச்சி கொப்புளிக்க என்னைப் பார்த்தார். ‘‘அப்படியா?’’ கேட்டு நிறுத்தி, என் சடைத் தலையைப் பார்க்கிறார். ‘‘ஆளப்பாத்தா அப்படித் தெரியவில்லையே’’ என்றவர், பின் மாஸ்டரைப் பார்த்து, ‘‘என்னெட்ட ஸ்கந்தாவில ஒருவன் இருக்கிறான். அவன் காரைக்காலம்மையாரைப் பேசினால் கண்ணீர் வடிக்கலாம்.’’ என்றார். அவனைப் பாராட்டுகிறாரா? என்னை இகழ்கிறாரா? என்று தெரியாத பேச்சு. ஏனோ, முதற் சந்திப்பிலேயே எனக்கு அவரைப் பிடிக்காமற் போனது.

* * *

இரண்டாம் சந்திப்பு மேலும் பகை வளர்த்தது. எங்கள் உயர்தர வகுப்பு மாணவர்களின் கலைவிழா. என்னை, பெரும் பேச்சாளனாய் பதிவுசெய்த நிகழ்ச்சி அது. மன்றத் தலைவர் வைகுந்தவாசன், என்னையும் நண்பன் ஸ்கந்தமூர்த்தியையும், வழக்காடுமன்றம் பேசக்கேட்டான். யாரோடு வழக்காடுவது கேள்வி பிறக்க, அப்போது புதிதாய்க் கல்லூரிக்கு வந்திருந்த இளைஞர்களான ஒரு சில ஆசிரியர்களை வாதுக்கழைத்தாலென்ன? நான் ‘ஐடியா’ கொடுத்தேன். புதுப்பல்லு சப்ப ஆசைப்பட்டது. மாணவர்களோடு வழக்காட ஆசிரியர்கள் வருவார்களா? - ஆராய்ந்தோம். சிவராமலிங்கம் மாஸ்டர் சொன்னால் வரக்கூடும் - முடிவெடுத்தோம். அசட்டுத்தனமான ஆசையோடு அவரைக் காணச்சென்றோம். நல்ல ‘மூடில்’ இருந்தார் வாத்தியார். அவருக்கருகில் வித்துவானும் ஆசிரியர் தேவனும். இருவரும் யாழ். முழுவதும் புகழ்பெற்ற தமிழ் ஆசிரியர்கள். சற்றுப் பயத்தோடு ஆசிரியரிடம் எங்கள் விருப்பம் தெரிவிக்க, நாம் முழுவதும் சொல்லமுன் அவர் உற்சாகமானார். ‘‘‘வெரிகுட்’ செய்தாற்போச்சு’’ என்றவர், ‘‘என்ன தேவன்? இவங்களோட வழக்காடுறியளே?’’ எங்கள் நோக்கம் அறியாது, எங்கள் அம்பின் குறியை, தேவனை நோக்கித் திருப்பினார். ‘‘‘நோ ப்ரப்ளம்’ செய்வம்.’’ ஆலோசனையின்றி, அடிக்குரலில் ஆங்கிலத்தனமாய் அங்கீகரித்தார் தேவன். நாம் பதறிக் குறுக்கிடுமுன், வாத்தியார் பார்வை வித்துவானிடம் திரும்பியது. ‘‘என்ன வித்துவான்? இவங்களோட வழக்காட நீங்கள் தயாரே?’’ மாணவரோடு சமப்பட விருப்பம் இல்லாததை, மரபிலூறிய வித்துவானின் முகம் சொல்லியது. ஆனாலும், தேவன் அங்கீகரித்ததைத் தான் நிராகரித்தால் தவறாகிவிடுமோ? என்று, ‘‘இந்தச் சின்னப் பயலளுடனா? எனக்கு ஆட்சேபனையில்லை மோதலாமே’’ விருப்பின்றி செந்தமிழ்ச் சம்மதம் தெரிவித்தார். நாம் திகைத்தோம். இளம் ஆசிரியர்களுடன் மோதலாம் என்றால், ஆசிரியர், தமிழ் மலைகளைப் பிடித்து, தலையில் கட்டிவிட்டார். அப்போதே ‘ரென்ஷன்’ ஆனோம். ஆனாலும் உள்ளே ஓர் அனல். ‘‘வித்துவான் எனக்கா பேசத் தெரியாது என்று சொன்னார்? வரட்டும் ஒருகை பார்க்கலாம்.’’ இளமையின் அறியாமை துடித்தது. மோதுவது என்று முடிவு செய்தேன்.

* * *

(தொடரும்...)

காலைக்கதிர் Kalaikkathir



# நரகமாக மாறியுள்ள சிரியா!

**ஒரு தலைமுறையை அழித்து நரகமாக்கி விட்ட கொடும் யுத்தம்**



சிரியா வரலாற்றில் அழியாச் சுவடுகளை தன்னுள் தாங்கிக்கொண்டு நிற்கிறது. மனித குலம் பார்த்திராத கொடூரங்கள் அங்கு அரங்கேறி வருகின்றன. கொத்துக் கொத்தாகக் கொல்லப்படும் உயிர்கள். உலகின் அழகிய நகரங்களைக் கொண்ட சிரியா, மெல்ல மெல்ல நரகமாக மாறி வருகிறது.

பாதுகாக்க வேண்டிய அரசே பொது மக்களை பழிதீர்த்துக் கொண்டிருக்கிறது. அங்கே மனிதநேயம் முற்றிலும் மரணித்துப் போயிருக்கிறது. என்ன தான் நடக்கிறது சிரியாவில்? இந்தக் கொலைகள் எல்லாம் ஏன் நடக்கின்றன? இவையெல்லாம் நமக்குத் தெரிய வேண்டுமென்றால் அதன் வரலாற்றை அறிய வேண்டும்.

மத்திய கிழக்கு, வடக்கு ஆபிரிக்க நாடுகளில் முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக ஆதிக்கம் செலுத்தி வந்த பல ஆட்சியாளர்களுக்கு எதிராக 2010ஆம் ஆண்டு மக்கள் கிளர்ந்து எழுந்தார்கள். வடக்கு ஆபிரிக்க நாடான துனிசியாவில் தொடங்கிய இந்தப் புரட்சி, எகிப்துக்கும் பரவியது. இரு நாடுகளிலும் உடனடியாகவே ஆட்சியாளர்கள் அகற்றப்பட்டார்கள். ஆனால், லிபியாவில் சர்வாதிகாரியான கடாஃபி, மேற்கத்திய நாடுகளின் உதவியுடன் கொல்லப்பட்டார். அதன்பிறகு அரபு எழுச்சி, மற்ற நாடுகளுக்கும் பரவியது. அதில் ஒன்றுதான் இந்தச் சிரியா.

அங்கு பதவியில் இருந்த பார் அல் ஆசாத்திற்கு எதிராகப் புரட்சி தொடங்கியது. மக்களுக்கு எதிரான அரசு அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டது. இது கொந்தளிப்பை ஏற்படுத்தியது. அதற்கு இன்னொரு காரணம் மதப் பிரிவினை.



சிரியாவைப் பொறுத்தவரை அங்கு பெரும்பான்மையினர் இஸ்லாமியர்கள் என்றாலும் அவர்களுக்கு இடையே ஷியா, அலாவி, சன்னி உள்ளிட்ட பிரிவுகள் இருந்தன.

ஆனால் பெரும்பான்மை சன்னிக்களை புறக்கணித்து விட்டு, சிறுபான்மையினரான அலாவிகளே ஆட்சி அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொண்டிருக்கிறார்கள். தற்போதைய அதிபர் ஆசாத்தும் இந்தப் பிரிவைச் சேர்ந்தவர் தான். வேலை வாய்ப்புகளில் அலாவி பிரிவினருக்கே அதிக முன்னுரிமை அளிக்கப்படுகின்றதுஎனவும், மற்றவர்கள் புறக்கணிக்கப்படுகின்றனர் என்றும் குற்றச்சாட்டுத் தொடர்ந்தது. இதையடுத்து, பெரும்பான்மை சன்னி பிரிவினர் தொடங்கிய புரட்சி, பின்னர் ஆயுதக் கிளர்ச்சியாக உருவெடுத்தது.

லிபியாவில் கடாஃபிக்கு ஏற்பட்ட நிலையை உணர்ந்த சீனாவும் ரஷ்யாவும் தங்களது வர்த்தகக் கூட்டாளியான பார் அல் ஆசாத்தை ஆதரித்தனர். இந்த நேரத்தில் ஈராக்கில் இருந்து வந்த ஐ.எஸ். அமைப்பு, தனி நாடு கோரும் குர்துக்கள், ஆசாத்தைப் பிடிக்காத சவுதி தலைமையிலான வளைகுடா நாடுகள், அமெரிக்கா, ரஷ்யா, சீனா, துருக்கி, ஈரான் என பல தரப்பும் சிரியாவுக்குள் நுழைந்தன.

நான்கு முனைத் தாக்குதலாக நடக்கும் யுத்தத்தில் அரசுப் படைகளுக்கு ஆதரவாக ரஷ்யா, ஹிஸ்புல்லா இயக்கம், ஈரான் போன்றவை களம் இறங்கின. கிளர்ச்சியாளர்களுக்கு ஆதரவாக துருக்கி சண்டையிடுகிறது. அமெரிக்காவோ, குர்துக்களுக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் மத்தியில் நிற்கிறது. இவர்கள் அனைவரையும் ஒழித்து விடத் துடிக்கிறது ஐ.எஸ். பயங்கரவாத இயக்கம்.

**உச்சத்தைத் தொட்ட சிரியா யுத்தம்**

2011ஆம் ஆண்டு தொடங்கிய சிரியா யுத்தம், 2016 ஆம் ஆண்டில் புதிய உச்சத்தைத் தொட்டது.



பழம்பெருமை கொண்ட நகரமான அலெப்போ 2016 ஆம் ஆண்டு மிகப் பெரிய போர்க்களமாக மாறியது. 2012 ஆம் ஆண்டில் சிரிய அரசுக்கு எதிரான கிளர்ச்சியாளர்கள் இந்த நகரைக் கைப்பற்றியபோது, சுமார் 21லட்சம் பேர் இந்த நகரில் வாழ்ந்தார்கள். நான்கு ஆண்டுகளில் இந்த நகரம் சின்னா பின்னமாகியிருக்கிறது. 2016 ஆம் ஆண்டில் இந்த நகரின் மக்கள்தொகை வெறும் மூன்று லட்சமாகக் குறைந்தது.

ரஷ்யப் படைகளின் ஆதரவுடன் கிளர்ச்சியாளர்கள் அலெப்போ நகரை விட்டு விரட்டப்பட்டனர். இரு முக்கிய பகுதிகளை சிரிய ராணுவம் கைப்பற் றியது. ஜுலை மாதத்தில் கிளர்ச்சியாளர்களுக்கும், கிழக்கு அலெப்போ நகரில் சிக்கியிருந்த அப்பாவிப் பொதுமக்களுக்கும் அத்தியாவசிப் பொருள்கள் கொண்டு செல்லப் பயன்பட்ட சாலையை சிரிய ராணுவம் அடைத்தது. இதைத் தொடர்ந்து தாக்குதல் தீவிரமடைந்தது.

ரஷ்ய விமானங்களும், சிரியாவின் ராணுவமும் வீசிய குண்டுகள் ஏராளமான கிளர்ச்சியாளர்களுடன் சேர்த்து அப்பாவிப் பொதுமக்களையும் கொன்றன. குழந்தைகள், பெண்கள், முதியவர்கள் என யாரையும் இந்த யுத்தம் விட்டுவைக்கவில்லை.

கிளர்ச்சியாளர்கள் தரப்பிலும் பொது மக்கள் வதைக்கப்பட்டனர். சித்திரவதை செய்வதற்கும் தனிமையில் அடைத்து வைப்பதற்கும் பல சிறைகளை கிளர்ச்சியாளர்கள் அமைத்திருந்தமை கண்டறியப்பட்டுள்ளது.

**உலகத்தின் மனச்சாட்சியை உலுக்கிய புகைப்படம்**

அலெப்போ நகரில் கிளர்ச்சியாளர்களுக்கு ஆதரவாக ரஷ்ய விமானப்படை நடத்திய தாக்குதலில் அந்நகரில் வசித்து வந்த பலர் உயிரிழந்தனர். படுகாயங்களுடன் பலர் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். அதில் 5 வயது சிறுவன் ஒம்ரான் படுகாயமடைந்து முகத்தில் ரத்தக் காயங்களுடன் அம்புலன்சில் அமர்ந்திருக்கும் படம் உலகத்தின் மனச்சாட்சியை உலுக்கியது.




இதனிடையே சிரியாவில் 30 நாள்கள் போர் நிறுத்தத்திற்கு ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் கடந்த சனிக்கிழமை ஒப்புதல் வழங்கியது. இந்த ஒப்புதல் காரணமாக, சிரியாவிற்கு நிவாரணப் பொருள்களும், உணவுப் பொருள்களும் எளிமையாக சென்றடைய வழிவகுக்கும். ஆனால் போர் நிறுத்தத் தீர்மானம் ஐ.நாவில் நிறைவேறிய நிலையில் அதன்பின்பும் கிழக்கு 'கூட்டா'வில் ரஷ்ய ஆதரவுப் படையுடன் சிரியா ஆதரவுப் படைகள் வான்வெளித்தாக்குதல் நடத்தியுள்ளன.

இப்போது போர் நிறுத்தத்திற்கு ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் ஒப்புதல் அளித்த போதிலும், அது எந்த அளவிற்கு பலன் கொடுக்கும் என்பது கேள்வியாகவே உள்ளது. மேலும் போர் நிறுத்த ஒப்பந்தம் எப்போது இருந்து அமுலுக்கு வரும் என்றும் தெரியவில்லை.

(11 ஆம் பக்கம் பார்க்க......)





# யுத்த நிறுத்தம் நடைமுறைக்கு வருமா?

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

தங்களுடைய சொந்த மண்ணில் வாழமுடியாமலும், அகதிகளாக வெளியேற முடியாமலும் பொதுமக்கள் தவித்து வருகின்றனர். சிரியாவில் இருந்து படகுகளின் மூலம் பிற நாடுகளுக்கு அகதிகளாகச் செல்ல முற்பட்டு கடலில் மாண்ட மனித உயிர்கள் பல. சிரிய யுத்தத்தில் கொல்லப்பட்டவர்களில் ஏராளமானோர் அப்பாவி பொதுமக்கள். இந்தச் சிரிய யுத்தத்தில் ஒன்றுமே அறியாத ஒரு தலைமுறையையே கொல்லப்பட்டுள்ளது.

✦ ✦ ✦

சிரியாவில் கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டில் உள்ள கிழக்கு கூட்டாவில், உடனடியாக போரை நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கையை ஐ.நா. நீடித்துள்ளது. விமானத் தாக்குதல்களில் உயிரிழப்புகள் அதிகரித்து வருகின்றன எனச் செய்திகள் வரும் நிலையில், ஐ.நா. இந்தக் கோரிக்கையை நீடித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு கவுன்ஸில் கடந்த சனிக்கிழமை சிரியாவில் தற்காலிக போர்நிறுத்த அறிவிப்பை வெளியிட்டது.

ஆனால், சிரிய அரசின் கூட்டாளியான ரஷ்யா, எவ்வாறு இதனை அமுலுக்குக் கொண்டு வருவது என் ஒப்புக் கொண்ட பின்னரே இந்த அறிவிப்பை செயல்படுத்த முடியும் என்று தெரிவித்தது.

இந்நிலையில், போர் அதிகரித்த எட்டு நாள்களில், சிரிய அரசின் விமான தாக்குதலால் சுமார் 541 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்று தொண்டு நிறுவனம் ஒன்று கூறுகிறது.

சிரியாவின் தலைநகர் டமஸ்கஸுக்கு அருகே உள்ள கிழக்கு கூட்டா பிராந்தியம்தான் கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டிலுள்ள கடைசி மிக முக்கிய பிராந்தியமாகும்.

**கிழக்கு கூட்டாவில் என்ன நடக்கிறது?**



3 லட்சத்து 93 ஆயிரம் பேர் சிக்கியுள்ள ஓரிடத்தில், பீரங்கிக் குண்டுகள் வீசப்பட்டன.

டூமாவில் ஒரு கட்டடத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் பொதுமக்கள் 9 பேர் உயிரிழந்தனர் என்று சிரிய சிவில் பாதுகாப்புப் பிரிவு ஒன்று தெரிவித்துள்ளது. உயிரிழந்த அனைவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் எனப் பாதுகாப்புக் குழு குறிப்பிட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று, அரசு நடத்திய விமானத் தாக்குதல்களில் சுமார் 20 பேர் கொல்லப்பட்டனர் என மருத்துவ பராமரிப்பு மற்றும் நிவாரண அமைப்புகளின் ஒன்றியம் தெரிவித்தது.

**ஐ.நா. என்ன கூறுகிறது?**

ஜெனீவாவில் நடைபெற்ற ஐ.நா மனித உரிமை பாதுகாப்பு கவுன்ஸில்



கூட்டத்தில் பேசிய ஐ.நா. செயலாளர் ஆன்டோனியோ குட்டரெஸ், பாதுகாப்பு கவுன்ஸிலின் தீர்மானங்களை திறம்பட செயற்படுத்தினால் மட்டுமே அவை அர்த்த முள்ளவையாக இருக்கும் என்றும், அதனால் தான் இந்தத் தீர்மானங்களை உடனடியாக அமுல்படுத்த வேண்டும் என்று தாம் எதிர்பார்க்கிறோம் எனக் கூறினார்.

மேலும், கிழக்கு கூட்டாவால் இதற்கு மேல் காத்திருக்க முடியாது. பூமியில் இருக்கும் நரகத்தை மாற்ற வேண்டிய நேரம் வந்துவிட்டது என்றார்.

எவ்வித தாமதமுமின்றி 30 நாள்கள் தற்காலிக போர்நிறுத்த அறிவிப்பை உடனடியாக அமுல்படுத்தி அதனை உறுதி செய்ய வேண்டும் என ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸில் தீர்மானம் வலியுறுத்தியது.

**கிழக்கு கூட்டாவின் மோசமான நிலை**

மருத்துவர்கள் மின்சாரம், மாத்திரைகள், ஒக்சிஜன், மயக்க மருந்து, வலி நிவாரணிகள், அன்டிபயாடிக்ஸ் போன்ற எதுவுமே இல்லாமல் பணியாற்றி வருகின்றனர் என்று ஜாட் என்ற மருத்துவர் பி.பி. ஸியிடம் தெரிவித்தார்.

மேலும், அவர்கள் உண்மையிலேயே மிகவும் பயங்கரமான, கடினமான சூழலில் பணிபுரிந்து வருகின்றனர்; முதல் உலகப் போரை இது நினைவுபடுத்துகிறது என்றார் அவர்.

சிரியாவின் அரசு படைகள் மற்றும் அதன் கூட்டாளிகள் நடத்திய தாக்குதல்களில் 2011ஆம் ஆண்டில் இருந்து 12 ஆயிரத்து 763 பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்று சிரியாவில் மனித உரிமைகளுக்கான குழு தெரிவித்துள்ளது.

**குளோரின் தாக்குதல் நடைபெற்றதா?**

அல்-ஷிஃபுனியா என்ற நகரத்தில் நடந்த விமான தாக்குதலுக்கு பிறகு, அங்கு குளோரின் வாடை வீசியது என ஓட்டுநர்கள் கூறினர்.

குளோரின் வாயு தாக்குதலுக்கு உள்ளாகி இருக்கும் அறிகுறிகள், சில நோயாளிகளிடம் தென்பட்டன என எதிர்தரப்பு நடத்தும் சுகாதார அமைச்சகத்தின் பணியாளர்கள் தெரிவித்தனர்.

பாதிக்கப்பட்ட 18 பேருக்கு ஒக்சிஜன் செலுத்தப்பட்டது எனவும், ஆண் குழந்தை ஒன்று உயிரிழந்தது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், 4 மாதக் குழந்தை ஒன்று வென்டிலேட்டரில் வைக்கப்பட்டுள்ளது எனக் கூறப்பட்டுள்ளது.

ஆனால், அந்தச் சிறுவனின் மரணத்திற்கு காரணம் அவன் சுவாசித்த குளோரினா அல்லது குண்டுவெடிப்பா என்ற தெளிவு ஏற்படவில்லை.

ரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தவில்லை என சிரிய அரசாங்கம் கூறி வருகிறது.

எனினும், 2017ஆம் ஆண்டு ஏப்ரல் 4ஆம் திகதியன்று வட-மேற்கு நகரமான கான் கேஹூன் நகரத்தில் நிகழ்ந்த கொடிய இரசாயனத் தாக்குதலுக்கு சிரிய அரசாங்கம்தான் காரணம் என கடந்த ஒக்ரோபரில் ஐ.நா. முடிவுக்கு வந்தது குறிப்பிடத்தக்கது. (இ



காலைக்கதிர் Kalaikkathir



# அரசின் நெருக்கடிகளைக் கருத்திற்கொண்டு அரசியல் மறுசீரமைப்பு செய்ய வேண்டும்!

அரசின் நெருக்கடிகளை கருத்தில் கொண்டு அரசியல் மறுசீரமைப்பு வேலைத்திட்டம் ஒன்றினை உடனடியாக முன்னெடுக்க வேண்டும்.

கடந்த 2015 ஆம் ஆண்டு அரசியல் கூட்டணி மீண்டும் கைகோக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது என்று அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

புதிய அரசமைப்புக் குறித்து கலந்துரையாட இது பொருத்தமான நேரமில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜாதிக ஹெல உறுமயவின் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முன்தினம் கட்சித் தலைமையகத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நிறைவடைந்து இரண்டு வாரங்களுக்கு மேலான காலம் கடந்துள்ள நிலையில் இப்போதுள்ள நிலைமைகள் குறித்து கல்விமான்கள், அரசியல் நிபுணர்கள் அனைவருடனும் நாம் கலந்துரையாடியுள்ளோம். இதன்மூலம் அரசின் அடுத்த கட்ட செயற்பாடுகள் குறித்து எம்மால் அடையாளம் காண முடிந்துள்ளது.



மிக அழுத்தமாக வலியுறுத்துகிறார் சம்பிக்க

இப்போது நடைபெற்றுள்ள தேர்தல் முடிவுகளின் மூலமாக நாட்டில் பல மாற்றுக் கருத்துக்கள் எழுந்துள்ளன.

அதேபோல் அடுத்து வரவுள்ள மாகாணசபை மற்றும் ஜனாதிபதி தேர்தலின்போது மீண்டும் தேசிய அரசாங்கமாக அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என மக்கள் இந்தத் தேர்தலில் தெரிவித்துள்ளனர்.

கடந்த 2015 ஆம் ஆண்டு அரசியல் கூட்டணி மீண்டும் ஒன்றிணைய வேண்டும் என்பதை மக்கள் இந்த தேர்தலின் மூலமாக வெளிப்படுத்தியுள்ளனர்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் கிடைக்கும் வாக்குகளை பறிக்கும் சூழ்ச்சிகள் இடம்பெற்றுள்ளன. ஆகவே இப்போது நாம் ஆயத்தமாகி பெரும் அரசியல் வேலைத் திட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

பொருளாதார, சமூக மாற்றங்களை ஏற்படுத்தும் அரசியல் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். நடுத்தர மக்களை இலக்கு வைத்து நாம் எமது வேலைத் திட்டங்களை முன்னெடுக்க வேண்டும். தண்ணீர் பிரச்சினை உள்ளது, காணிப் பிரச்சினைகள் உள்ளன.

இவற்றினை நாம் இனங்கண்டு செயற்பட வேண்டும். கல்வித் துறையில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். சைட்டம் சிக்கல்கள் போன்ற வற்றுக்கு முழுமையாக தீர்வுகாண வேண்டும். நடுத்தர, அடிமட்ட மக்களின் பொருளாதார செயற்பாடுகளை பலப்படுத்தாது நிலையான பொருளாதார தன்மை ஒன்று உருவாக்கப்படுவதில் எந்தப் பயனும் இல்லை.

தேர்தல் முறைமை குறித்து கருத்திற் கொள்ள வேண்டும். அடுத்து நடைபெறும் தேர்தலுக்கு முன்னர் தேர்தல் முறைமையில் உள்ள குழப்பங்களை மாற்றியமைக்க வேண்டும். அரசமைப்பு மறுசீரமைப்பு குறித்து நாம் இப்போது கலந்துரையாட முடியாது. அரசமைப்பு குறித்து கலந்துரையாடும் நேரம் இது வல்ல.

அனைத்து தரப்பும் ஏற்றுக் கொள்ளும் அரசமைப்புத் திருத்தம் அவசியம். எனினும் அதனை இப்போதுள்ள நிலையில் எம்மால் முன்னெடுக்க முடியாது.

ஆகவே இப்போதுள்ள நிலைமையில் அரசமைப்பு மறுசீரமைப்பு அவசியமற்ற ஒன்றாகும்.

அரசு பலமான மறுசீரமைப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். இதில் குறுகிய மற்றும் நீண்டகால வேலைத் திட்டங்களை நாம் முன்னெடுக்க வேண்டும்.

அதேபோல், சூழலியல் பிரச்சினைகளை உடனடியாக நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை நாம் முன்னெடுக்க வேண்டும். பிரதான இரண்டு கட்சிகளின் இளம் அரசியல் வாதிகள் மத்தியில் இந்த விடயங்களை ஒப்படைக்க வேண்டும்.

அரசு என்ற வகையில் எமக்கு சரியான வேலைத்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட வேண்டும். அதற்கான ஜனாதிபதி – பிரதமர் தலைமையீட்டில் புதிய வேலைத் திட்டங்கள் அவசியம்.

புதிய அரசியல் வேலைத் திட்டம் ஒன்றினை முன்னெடுக்க தாமதமாகும் நிலையில் நாம் தலையிட்டு மாற்றங்களை முன்னெடுக்க முன்வருவோம். எவ்வாறு இருப்பினும் சரியான நகர்வுகளையே மக்கள் எதிர்பார்த்துள்ளனர். ஆகவே அதற்கான வேலைத்திட்டங்கள் அவசியமாகின்றன எனவும் அவர் குறிப்பிட்டார்.

---

## டீசல் தட்டுப்பாடு தொடர்பில்

# எரிபொருள் கூட்டுத்தாபனம் விளக்கம்

கொழும்பு, பெப். 28

நாடு முழுவதும் டீசலுக்குத் தட்டுபாடு நிலவுவதாகப் போலிப் பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன என இலங்கை எரிபொருள் கூட்டுதாபனம் தெரிவித்துள்ளது.

இணையங்கள் உள்ளிட்ட சமூக வலைத்தளங்கள் ஊடாக குறித்த பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும், சாதாரண மக்களை குழப்பமடையச் செய்யவும், நாட்டை சீர்குலைக்கும் நோக்குடன், இந்தப் போலிப் பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் எரிபொருள் கூட்டுத்தாபன அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

கொலன்னாவை மற்றும் முத்துராஜவல எரிபொருள் களஞ்சியசாலைகளில் போதுமானளவு எரிபொருள் கையிருப்பில் இருப்பதாகவும், எனவே போலிப் பிரசாரங்களால் மக்கள் கலவரமடையத் தேவையில்லை என்றும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

எனவே, இவ்வாறான போலிப் பிரசாரங்கள் முன்னெடுக்கும் நபர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

# வீதியை விட்டு விலகி பஸ் விபத்து; 37 பேர் வைத்தியசாலையில்!

கொழும்பு, பெப். 28

வலப்பனை நில்தண்டாஹின்ன விலிருந்து பயணிகளை ஏற்றிக் கொண்டு தெறிபாஹா நோக்கி பயணித்த தனியார் பஸ் ஒன்று நில்தண்டாஹின்ன தெறிபாஹா பிரதான வீதியில் அபன்எல்ல பகுதியில் நேற்றுக் காலை 9 மணியளவில் வீதியை விட்டு விலகி வீடு ஒன்றின் மீது குடைசாய்ந்து விபத்துக்குள்ளாகியதில் 37 பேர் படுகாயமடைந்த நிலையில் வலப்பனை மற்றும் நில்தண்டாஹின்ன ஆகிய வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பஸ் சாரதியின் கவனவீனம் காரணமாகவே இந்த விபத்து நேர்ந்தது என விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளது.

இந்த விபத்தில் காயமடைந்த 37 பேரில் 13 பேர் நுவரெலியா வைத்தியசாலைக்கு, மாற்றப்பட்டுள்ளனர் என்றும் ஏனையோர் வலப்பனை மற்றும் நில்தண்டாஹின்ன ஆகிய வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் வைத்தியசாலை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த விபத்துத் தொடர்பில் தெறிபாஹா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



---

# முழு ஆட்சி மாற்றத்தையே மக்கள் எதிர்பார்க்கின்றனர்

### அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவிப்பு

கொழும்பு, பெப். 28

முழு ஆட்சி மாற்றத்தையே நாட்டு மக்கள் எதிர்பார்த்தனர். மக்களை ஏமாற்றி போலிக் கபட நாடகமாடும் அமைச்சரவையின் மாற்றத்தையல்ல. பொதுமக்களை நகைப்புக்குள்ளாக்கும் நிர்வாகத்தை தேசிய அரசு மேற்கொள்வது ஜனநாயக கொள்கைகளுக்கு எதிரானது என நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

மக்கள் எதிர்பார்த்த மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு பதிலாக ஆளும் தரப்பினரது விருப்பங்களை நிறைவேற்றும் முகமாகவே புதிய அமைச்சுக்களின் மாற்றங்கள் இடம்பெற்றுள்ளன. குறித்த விடயத்தின் காரணமாக எதிர்வரும் 18 மாத காலத்தினுள் எவ்வித மாற்றமும் நாட்டிலும் நிர்வாகத்திலும் ஏற்படமாட்டாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

நல்லாட்சி அரசின் திடீர் அமைச்சுக்களின் மாற்றம் தொடர்பில் தெளிவுபடுத்துகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மக்களின் விருப்பத்திற்கு எதிராக நாட்டின் நிர்வாகத்தை மேற்கொள்ள முடியாது என்ற யதார்த்த விடயத்தை அரசாங்கம் புரிந்து கொள்ள மறுக்கின்றது. தொடர்ந்தும் மக்களின் வெறுப்புக்களை மாத்திரம் உருவாக்கிக்கொண்டு வருகின்றது.

நாட்டு மக்கள் முழு ஆட்சி மாற்றத்தை மாத்திரம் எதிர்பார்த்தனரே தவிர மக்களை ஏமாற்றும் பிரதியமைச்சுக்களின் மாற்றத்தையல்ல. தமது அமைச்சுக்களில் ஊழல் மற்றும் முறையற்ற நிர்வாகத்தை மேற்கொண்டவர்களை பிறிதொரு அமைச்சுக்கு மாற்றுவதால் எவ்வித மாற்றமும் ஏற்படப்போவது கிடையாது.

மாறாக ஊழல், மோசடிகள் அதிகரிக்கும். நாட்டில் நீதித்துறை மாத்திரமே இதுவரை காலமும் சுயாதீனமாக காணப்பட்டது. ஆனால், எதிர்காலத்தில் நீதித்துறையின் மீதும் மக்களின் மதிப்பு குறைய நேரிடும்.

ஸ்திரமற்ற நிர்வாகத்தினை மேற்கொள்ளும் பிரதமரை பதவியிலிருந்து நீக்கும் விடயத்தை ஜனாதிபதி மேற்கொள்ளாமல் சட்டம் ஒழுங்கு அமைச்சு பதவியை வழங்கியுள்ளமை வேடிக்கையாகக் காணப்படுகின்றது. ஜனாதிபதி ஐக்கிய தேசியக் கட்சியை தொடர்ந்தும் பாதுகாப்பதை பல அரசியல் விவகாரங்களில் பகிரங்கமாக நிரூபித்து வருகின்றார்.


சட்டம் ஒழுங்கு அமைச்சுப் பதவியை திடீரென மாற்றுவதற்கு எவ்வித அழுத்தங்களும் சட்டத்துறையினின் மீது ஏற்படவில்லை. நாட்டு மக்கள் அனைவரும் சட்டத்துறையை மதித்தே வந்தனர். பிரதமருக்கு குறித்த பதவியை வழங்கியமை எதிர்காலத்தில் பெரிய அரசியல் சூழ்ச்சிக்கான ஆரம்ப கட்டமாகவே காணப்படுகின்றது.

2015ஆம் ஆண்டு மத்திய வங்கியில் இடம்பெற்ற பிணைமுறி விவகாரத்தின் முக்கிய குற்றவாளி பிரதமர் என்ற விடயத்தை நாட்டு மக்கள் நன்கறிவர். நாட்டு மக்களுக்குத் தெரிந்த விடயம் நாட்டின் தலைவருக்குத் தெரியவில்லையா? பிணை முறி விவகாரம் தொடர்பில் பயனற்ற பேச்சுகளே இதுவரைகாலமும் இடம் பெற்று வருகின்றன.

ஜனாதிபதி மக்களின் தீர்மானத்தை மதித்து செயற்பட வேண்டும். மக்களை ஏமாற்றும் நிர்வாகத்தினை மேற்கொள்வதால் எவ்வித பெரிய மாற்றமும் ஏற்படமாட்டாது.

நாடாளுமன்றத் தேர்தலில் முழு நாட்டு மக்களும் தமது வெறுப்புக்களையும் ஒட்டுமொத்தமாக பிரயோகிப்பர். அதனால் உள்ளூராட்சி மன்ற தேர்தலை போன்று கால தாமதப்படுத்தாமல் நாடாளுமன்ற தேர்தலை விரைவாக நடத்த நடவடிக்கைகளை மேற்கொள்வதை விடுத்து, மக்களை ஏமாற்றும் போலி நாடகங்களை அரங்கேற்றுகின்றமையால் பயனில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

12. தரப்பட்ட உருவில் உள்ள சதுரங்களின் எண்ணிக்கை யாது?



1) 6   2) 7   3) 10

13. சரியான கோவையைத் தெரிவுசெய்க.

1) 6 x 5 + 5 = 25
2) 12 + 8 - 10 = 30
3) 4 x 3 + 4 = 16

14. பிழையான கோவையைத் தெரிவுசெய்க.


1) 333 + 33 + 3 = 369   2) 444 + 44 + 4 = 482   3) 555 + 55 + 5 = 615

15. மைதானத்தில் ஆசிரியரை மையமாகக் கொண்டு பிரதான திசைகள் நான்கிலும் சம எண்ணிக்கையில் மாணவர்கள் நின்றனர். அங்கு நின்ற மாணவர்களின் கால்களின் எண்ணிக்கை முப்பத்து இரண்டு ஆகும். ஒரு திசையில் நிற்கும் மாணவர்கள் எத்தனை பேர்?

1) 16   2) 4   3) 8

16. 200 லீற்றர் கொள்ளளவுடைய தொட்டி ஒன்றிற்கு நிமிடத்திற்கு 40 லீற்றர் நீர் ஊற்றப்படும் அதேவேளை அத்தொட்டியிலிருந்து 20 லீற்றர் நீர் பூந்தோட்டத்திற்கு இறைக்கப்படுகின்றது. அத்தொட்டி முழுமையாக நிரம்புவதற்கு எத்தனை நிமிடங்கள் தேவைப்படும்?

1) 9 நிமிடங்கள்   2) 12 நிமிடங்கள்   3) 16 நிமிடங்கள்

17. 

அருகில் உள்ள சமபக்க முக்கோணியில் நிழற்றப்பட்டுள்ள பகுதியின் சுற்றளவைப் போன்று முழு உருவின் சுற்றளவு எத்தனை மடங்கு ஆகும்?

1) நான்கு மடங்கு   2) ஐந்து மடங்கு   3) இரண்டு மடங்கு

**18 ஆம், 19 ஆம் வினாக்களில் சரியான கருத்தைத் தரும் வாக்கியத்தைத் தெரிவுசெய்க.**

18. 1) மீன்கள் நீரில் நீந்தியது
2) முயல் துள்ளித் துள்ளி ஓடின
3) மாணவர்கள் மைதானத்தில் விளையாடினார்கள்

19. 1) கண்டங்களில் பெரியது அவுஸ்திரேலியா ஆகும.
2) லீப் வருடத்தில் 366 நாட்கள் உண்டு.
3) இலங்கை பசுபிக் சமுத்திரத்தில் அமைந்துள்ளது.

20) 2016 ஜனவரி மாதம் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை ஆகும். இவ் வருடத்திலுள்ள சனிக்கிழமைகளின் மொத்த எண்ணிக்கை.

1) 52   2) 54   3) 53

21. இரு பகுதிகளும் சமனாக உள்ளதைத் தெரிவுசெய்க.

1) 3BA9C848 - 3BAC94 க 8
2) DB345 த 9ம - DB354 த 96
3) கச 359AC2 - கச 359AC2





45. இலங்கையிலுள்ள ஆதிவாசிகளின் நடனம் எது?

1. பரதநாட்டியம்   2. கிரிகொரங்க   3. கண்டிய நடனம்   4. கும்மி


46. பூக்களை சேதமாக்கும் பிராணி எது?

1. வெட்டுக்கிளி   2. செண்பகம்   3. நத்தை   4. அட்டை

47. அரச இலச்சினை பொறிக்கப்பட்டுள்ள ஆவணம் அல்லாதது எது?

1. நாணயம்   2. கடவுச்சீட்டு   3. தேசிய அடையாள அட்டை   4.தனியார் நூல்கள்

48. பின்வருவனவற்றில் ஒளிரக்கூடிய மின்சுற்று எது?



(1)   (2)   (3)   (4)

49. வித்துக்கள் மூலம் ஆக்கப்படும் ஆக்கம்

1. ஓரிகாமி   2. அல்பனா   3. கொலாச்   4. ஸ்ரென்சில்

50. இருமல், ஆஸ்த்துமா போன்ற நோய்களைக் குணப்படுத்தும் தாவரம் எது?

1. பாகற்காய்   2. கண்டங்கத்தரி   3. பூசணி   4. புடோல்

51. தேசிய அடையாள அட்டையை வழங்கும் திணைக்களம் எது?

1. குடிவரவு குடியகல்வு திணைக்களம்   2. பிரதேச செயலகம்
3. மாவட்ட செயலகம்   4. தேசிய ஆட்பதிவுத் திணைக்களம்

52. நீர்க்குடத்தில் மோதிரத்தை இட்டு மணமகனும் மணமகளும் தேடி எடுக்கும் சடங்கு செய்பவர்கள்?

1. தமிழர்   2. சிங்களவர்   3. முஸ்லிம்   4. பறங்கியர்

53. மிளகுடன் சேர்த்து கலப்படம் செய்யப்படும் வித்து?

1. கடுகு   2. குரக்கன்   3. பப்பாசிவித்து   4. பூசணி வித்து

54. இலங்கைக்கு கிழக்கே அமைந்துள்ள நாடுகள்

1. இந்தியா, மாலைதீவு   2. மலேசியா, தாய்லாந்து
3. ஈரான், சிங்கப்பூர்   4. தாய்வான், சீனா

55. பொருளாதார நன்மைக்காக வளர்க்கப்படும் பிராணி எது?

1. சிங்கம்   2. காகம்   3. தேனீ   4. நாய்

வினாத்தாள் 16 பகுதி II இன் தொடர்ச்சி...

56. வயல்களில் தீங்கு விளைவிக்கும் பூச்சிகளை பிடித்துண்ணும் பறவை எது?

1. புறா  2. ஆந்தை  3. காகம்  4. குயில்

57. நிறைவேற்று அதிகாரம் கொண்ட முதலாவது ஜனாதிபதி யார்?

1. D.S சேனநாயக்கா  2. J.R ஜெயவர்த்தனா  3. வணஎஸ்மஹிந்த  4. வில்லியம் கோபல்லாவா

58. பால்மா தொழிற்சாலை அமைந்துள்ள இடம் எது?

1. பொலநறுவை  2. அம்பேவல  3. வெலிசற  4. பியந்தல



# கல்விக் கதிர் வெளியீடு

## புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்

வினாத்தாள் **17**


தரம்-5

பகுதி - I  நேரம்- 45 நிமிடம்

✧ **1ஆம், 2ஆம் வினாக்களுக்கு முதலில் தரப்பட்டுள்ள படத்துடன் மிக நெருக்கமான சொற்கூட்டத்தைத் தெரிவுசெய்க.**

01. 


1) பார்த்தல், இயற்கை, வீடு
2) கேட்டல், பார்த்தல், செயற்கை
3) வீடு, கேட்டல், இயற்கை

02. 


1) காற்று, செயற்கை, விண்
2) மழை, விண், செயற்கை
3) இயற்கை, காற்று, விண்

✧ **3ம், 4ம் வினாக்களில் தரப்பட்டுள்ள சொற்களுக்கு மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

03. மின்சாரம் - ஒளி - வெப்பம்

1.   2.   3. 

04. முலையூட்டி - மாமிச உண்ணி - மிருகம்

1.   2.   3. 

✧ **கீழே தரப்பட்ட பாடலடிகளைக் கொண்டு 5 ஆம், 6 ஆம் வினாக்களுக்குரிய விடையைத் தெரிந்து கோடிடுக.**

நதியில் நீச்சல் அடித்திடுமே
நாக்கால் பூச்சி பிடித்திடுமே
அதிகம் பேசி ஆடிடுமே
அழிவை அதுவே தேடிடுமே.





05. பாடலில் கூறப்பட்ட பிராணி எது?

1. தவளை  2. பல்லி  3. ஓணான்

06. பாடலில் கூறப்பட்ட பிராணி இரையை எவ்வாறு பிடிக்கின்றது?

1. காலால்  2. சொண்டால்  3. நாக்கால்

07. ஒழுங்கின்றித் தரப்பட்டுள்ள செயற்பாட்டினை ஒழுங்குபடுத்தும்போது சரியாக அமையும் விடைத்தொகுதியைத் தெரிவுசெய்க.


A - தானியத்தை விதைத்தல்  B - அறுவடை செய்தல்
C - நிலத்தைப் பண்படுத்துதல்  D - பயிர்களைப் பராமரித்தல்


1. CABD  2. CADB  3. CDAB


08. மரதன் ஓட்டப் போட்டியில் குமரன் முதல் தடவை தோல்வியடைந்தான். அவன் விடாது பயிற்சியில் ஈடுபட்டு பின்னர் நடைபெற்ற மரதன் ஓட்டப்போட்டியில் வெற்றி பெற்றான். இச்சம்பவத்துடன் தொடர்புடைய பழமொழியைத் தெரிவுசெய்க.

1) ஆழமறியாமல் காலை விடாதே.
2) இளங்கன்று பயமறியாது.
3) முயற்சி திருவினையாக்கும்.


09. தரப்பட்டுள்ள எண்கோலங்களை அவதானித்து 9 ஆம், 10 ஆம் வினாக்களில் வெற்றிடத்திற்குப் பொருத்தமான எண்ணைத் தெரிவுசெய்க.


1. 



2. 


3. 


1) 5  2) 15  3) 8


10. 


1) 70  2) 48  3) 49

11. இவ் உருவில் உள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?



1) 8  2) 6  3) 5

# சிரியாவில் போர் நிறுத்தம் தினமும் ஐந்து மணிநேரம்!

## மக்கள் பாதுகாப்பாக வெளியேற மனிதாபிமானப் பாதையாம்!



சிரியாவின் கிழக்கு கூட்டாவின் கிளர்ச்சியாளர்களின் பிடியில் இருக்கும் பகுதியில் தினமும் ஐந்து மணிநேரம், தாக்குதலை நிறுத்தி வைக்க ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் ஆணையிட்டுள்ளார்.

இது நேற்று செவ்வாய்க்கிழமை முதல் தொடங்கும். மேலும், பொதுமக்கள் வெளியேறுவதற்கான மனிதாபிமான பாதைகள் உருவாக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டமாஸ்கஸிற்கு அருகில் கிளர்ச்சியாளர்களின் பிடியில் இருக்கும் பகுதியில் 393,000 பொதுமக்கள் சிக்கியுள்ளனர். அந்தபகுதி, ரஷ்யாவின் ஆதரவோடு அரசு படைகளால் தீவிர தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளது.

எட்டு நாள்களில் 560 பேருக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளனர் எனக் கண்காணிப்புக் குழு ஒன்று தெரிவித்துள்ளது.

ரஷ்யாவின் பாதுகாப்புத்துறை அமைச்சர் செர்கேய் ஷொயகு இந்த மனிதாபிமான போர் நிறுத்தம் குறித்த அறிவிப்பை வெளியிட்டார். மேலும் இந்த போர் நிறுத்தம், உள்ளூர் நேரப்படி காலை 9 மணி முதல் 2 மணி வரை தினமும் தொடரும் என அவர் தெரிவித்தார்.

மக்கள் தப்பிச் செல்வதற்கான பாதைகளை அமைக்க சிரிய செம்பிறைச் சங்கம் உதவும் எனவும் மக்களுக்கு இது குறித்த தகவல்கள் துண்டுச் சீட்டுகள் மூலமாகவும், குறுஞ்செய்தி மற்றும் வீடியோக்கள் மூலமாகவும் செய்தியாக அனுப்பப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

முன்னதாக எவ்வித தாமதமுமின்றி 30 நாள்கள் தற்காலிக போர்நிறுத்த அறிவிப்பை உடனடியாக அமுல்படுத்தி, அதனை உறுதி செய்ய வேண்டும் என ஐ.நாவின் பாதுகாப்பு கவுன்ஸில் தீர்மானம் நிறைவேற்றியிருந்தது.

ஆனால், சண்டையிட்டு வரும் அனைத்து தரப்பினரும் ஐ.நாவின் போர் நிறுத்த தீர்மானத்தை எவ்வாறு அமுல்படுத்துவது என்பதை ஒப்புக்கொண்டதால்தான் தீர்மானம் நடைமுறைப்படுத்தப்படும் என ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சர் செர்கேய் லவ்ரோஃப் தெரிவித்துள்ளார்.

# வியாழன் துணைக் கிரகத்தில் உயிரினங்கள் வாழ முடியுமாம்!

## ஆஸியில் வெளியானது புதிய தகவல்

வியாழன் கிரகத்தின் துணைக் கிரகம் யூரோப்பா. இது முழுவதும் ஐஸ்கட்டியால் ஆனது. இங்கு உயிரினங்கள் வாழ முடியும் என்ற விவரம் சமீபத்தில் வெளியாகி உள்ளது.

பிரேஸில் நாட்டின் சாவ் பாவ்லோ பல்கலைக்கழகத்தின் நிபுணர்கள் சமீபத்தில் இதுகுறித்து ஆய்வு மேற்கொண்டனர். யூரோப்பா துணைக் கண்டம் பற்றி சேகரிக்கப்பட்ட தகவல்கள் பூமியுடன் ஒத்துப்போகின்றமையைக் கண்டறிந்தனர்.

தென்னாபிரிக்காவின் ஜோகன்ஸ்பேர்க் அருகே போங்யங் தங்க சுரங்கத்தின் 2.8 கிலோமீற்றர் ஆழத்தில் மிகப்பெரிய மாற்றங்கள் இருக்கின்றமை கண்டுபிடிக்கப்பட்டன. சூரிய ஒளி படாத அங்கு தண்ணீரில் பக்ரீரியாக்கள் உயிர் வாழ்வதும் கதிரியக்கங்கள் ஏற்படுகின்றமையும் தெரியவந்தன.

அதேபோன்ற நிலை யூரோப்பா துணைக் கிரகத்தின் நிலப்பரப்பிலும் உள்ளது. அங்குள்ள நிலமேற்பரப்பில் ஐஸ்படுகையின் 10 கிலோமீற்றர் ஆழத்தில் கடல் போன்ற தண்ணீர் மறைந்துள்ளது. அதில் உயிரினங்கள் வாழும் சூழ்நிலை இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

# சவுதி தளபதி பதவி நீக்கம்

சவுதி அரேபியாவின் இராணுவ தளபதி அப்துல் ரஹ்மான் பின் சலே அல் பன்யான் அப்பதவியில் இருந்து மன்னரால் நீக்கப்பட்டுள்ளார்.

சவுதி அரேபியாவின் செய்தி ஏஜென்சியான, எஸ்.பி.ஏ. இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது.

இவருக்குப் பதிலாக புதிய இராணுவ தளபதியாக ஃபய்யாத் அல் ருவாலி நியமிக்கப்பட்டுள்ளார். இதேபோல இராணுவத்தின், தரைப்படை மற்றும் விமானப் படை தலைவர்களையும் மன்னர் மாற்றியுள்ளார். அதேநேரம், இதற்கான காரணங்கள் தெரிவிக்கப்படவில்லை.



ஈரான் ஆதரவு அல் ஹூதி புரட்சிப் படையினருடனான சண்டை தொடங்கி 3 வருடங்கள் ஆகியுள்ள நிலையில் இந்த மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. 2015 முதல் அல் ஹூதி படையினருக்கு எதிரான போரில் ஏமன் அரசுக்கு சவுதி படைகள் ஆதரவாக உள்ளன.

சவுதியின் முடி இளவரசர் – அதாவது மன்னரின் அடுத்த வாரிசான முகமது பின் சல்மான்தான், சவுதியின் பாதுகாப்புத் துறை அமைச்சர் என்பது குறிப்பிடத்தக்கது.

முடி இளவரசர் முகமது பின் சல்மான் கடந்த சில மாதங்களாகவே சவுதியின் பொருளாதாரம், சமூக அளவில் பல மாற்றங்களைச் செய்து வருகிறார். அதன் ஒரு பகுதியாக இந்த மாற்றங்களும் இருக்கலாம் எனக் கூறப்படுகிறது.

இளம் தலைமுறையினரை முக்கிய பதவிகளில் அமர்த்துவதில் சவுதி அரசு சமீபகாலமாக மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது.

(உ)




Pearson | BTEC | University of Wolverhampton | University at Albany | University of Canberra | RICS | CIOB

HND — BUSINESS MANAGEMENT MARKETING | HRM — Leading to BA (Hons) from the UK Universities

HND — QUANTITY SURVEYING — Leading to BSc (Hons) from the UK Universities

HND — COMPUTING — Leading to BSc (Hons) from the UK Universities

HND — BIOMEDICAL SCIENCE BIOTECHNOLOGY — Leading to BSc (Hons) from the UK Universities

HND — CIVIL ENGINEERING — Leading to BEng / BSc (Hons) from the UK Universities

LLB — LAW — Leading to LLB (Hons) from the UK Universities

UGC Recognized TVEC Approved

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

பதிவுகள் இப்பொழுது ஆரம்பம்
Sanchu 0777 102 131
Ragavan 0777 692 318
BCAS Jaffna Campus, #. 16, Point Pedro Road, Jaffna

Platinum Partner No.1 BTEC Centre in Sri Lanka 2016
Best Employer Brand Award 2017
Asia's Training Excellence Award 2017

Mount Campus
54, Galle Road, Mt. Lavinia.
T : 011 272 8082

Kandy Campus
344, Peradeniya Road, Kandy.
T : 081 222 4731

Kalmunai Campus
392/1, Main Street, Kalmunai.
T : 067 222 6899

Corporate Office
32, Dharmarama Road,
Colombo 6. T : 0112597217

021 221 9910 | 011 259 7217
info@bcas.lk | www.bcas.lk



## நடிகை

# ஸ்ரீதேவி மரணம்; நடந்தவை என்ன?

பிரபல நடிகை ஸ்ரீதேவி, தமது கணவர் போனி கபூரின் மைத்துனர் மோகித் மார்வா இல்லத் திருமணத்துக்காக கடந்த 22ஆம் திகதி துபாய் சென்றிருந்தார். திருமணம் முடிந்து 24ஆம் திகதி அங்குள்ள 'ஜுமெய்ரா எமிரேட்ஸ் டவர்ஸ்' என்ற நட்சத்திர ஹோட்டலில் கணவருடன் தங்கினார்.

இந்த நிலையில் அன்றிரவு அவர் குளியல் அறைக்கு சென்றபோது நெஞ்சு வலி ஏற்பட்டு ஸ்ரீதேவி மயங்கி சரிந்தார் எனப், பின்னர் மருத்துவமனைக்குக் கொண்டு சென்றபோது, மாரடைப்பு ஏற்பட்டு அவர் ஏற்கனவே மரணம் அடைந்து விட்டார் எனவும் டாக்டர்கள் தெரிவித்தனர் எனக் கூறப்பட்டது.

இதைத் தொடர்ந்து ஸ்ரீதேவியின் உடல் பிரேத பரிசோதனை, துபாய் பொலிஸ் தலைமை அலுவலகத்தில் உள்ள பிரேத பரிசோதனைக் கூடத்தில் ஞாயிறன்று நடத்தப்பட்டது. ஆனால் தடய அறிவியல் அறிக்கை வருவதற்கு தாமதம் ஆனதால் அன்றைய தினம் அவரது உடல் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவில்லை. இந்தநிலையில் ஸ்ரீதேவி ஹோட்டலில் தங்கி இருந்தபோது நடந்தது என்ன என்பது பற்றி புதிய தகவல்கள் இப்போது வெளியாகியுள்ளன.

4 நாள்களுக்கு முன் துபாயில் நடைபெற்ற உறவினர் திருமண விழாவில் கலந்து கொண்டு போனி கபூர், இளையமகள் குஷி கபூர் மற்றும் பெரும்பாலான உறவினர்கள் மும்பை திரும்பிவிட்டனர். மூத்த மகள் ஜான்வி படப்பிடிப்பு காரணமாக மும்பையிலேயே தங்கிவிட்டார். ஸ்ரீதேவியுடன் அவருடைய தங்கை ஸ்ரீலதா தங்கி இருந்தார். சில நாள்களை துபாயில் கழிக்கலாம் என்ற எண்ணத் தில் அவர் அந்த நட்சத்திர ஹோட்டலில் தங்கி இருந்தார் எனக் கூறப்படுகிறது. இந்தநிலையில் மனைவியை ஆச்சரியப்படுத்தும் விதமாக போனி கபூர் 24 ஆம் திகதி மீண்டும் துபாய்க்கு வந்தார்.

மாலை 5.30 மணி அளவில் அதே நட்சத்திர ஹோட்டலில் மனைவி ஸ்ரீதேவியுடன் தங்கினார். பின்னர் இரவு உணவுக்கு அவர் ஏற்பாடு செய்தார். அப்போது இருவரும் 15 நிமிடம் பேசிக் கொண்டிருந்தனர். பிறகு இரவு உணவு நிகழ்ச்சிக்குச் செல்லத் தயார் ஆனார்கள். இதற்காக ஸ்ரீ தேவி குளியல் அறைக்கு சென்றார். 15 நிமிடங்கள் ஆகியும் அவர் வெளியே வராதமையால் கணவர் போனி கபூர் குரல் கொடுத்துள்ளார். அதற்கு எந்தவித பதிலும் வராததால் அதிர்ச்சியடைந்த அவர் கதவை முட்டித் தள்ளி திறந்து பார்த்தார். அப்போது ஸ்ரீதேவி, குளிக்கும் தொட்டியில் தண்ணீர் நிரம்பி வழிந்த நிலை யில் எவ்வித அசைவும் இன்றி உள்ளே மயங்கி கிடந்துள்ளார்.

இதனால் அதிர்ச்சி அடைந்த போனி கபூர், அவரை தூக்க முயன்றார். ஆனால் முடியவில்லை. உடனடியாக தனது நண்பர் ஒருவரை உதவிக்கு அழைத்திருக்கிறார். பின்னர் குளியல் அறை தொட்டியில் இருந்து ஸ்ரீதேவியை அப்புறப்படுத்தினர். அதைத் தொடர்ந்து இரவு 9 மணிக்கு பொலிஸாருக்கு போனிகபூர் தகவல் அளித்துள்ளார்.

இதனால் முதலுதவிச் சிகிச்சைக்காக அம்புலன்ஸில் மருத்துவக்குழுவுடன் பொலிஸார் அந்த ஹோட்டலுக்கு விரைந்தனர். அங்கு மருத்துவ குழுவினர், ஸ்ரீதேவியை பரிசோதித்தபோது அவர் ஏற்கனவே இறந்து விட்டமை தெரிய வந்தது. இதனை மருத்துவக் குழுவினர் உறுதி செய்து அறிவித்துள்ளனர். இரவு 11மணி அளவில் ஸ்ரீதேவி இறந்தமை பற்றி அதிகாரபூர்வமாக தகவல் வெளியிடப்பட்டது.

இதை துபாயில் உள்ள இந்திய தூதரகமும் உறுதி செய்தது. இதன்பிறகே ஸ்ரீதேவியின் உடல் பொலிஸ் தலைமை அலுவலகத்தில் உள்ள பிரேத பரிசோதனை மற்றும் தடய அறிவியல் மையத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது. இந்த நிலையில் இந்தியத் தூதரக அதிகாரிகளும், ஸ்ரீதேவியின் குடும்பத்தினரும் திங்கள் மதியம் பிரேத பரிசோதனை நடத்தப்பட்ட அறைக்கு வரவழைக்கப்பட்டனர். அங்கு ஸ்ரீதேவி இறந்தமை பற்றிய சான்றிதழ், துபாய் நகரின் தடுப்பு மருந்து இயக்குநர் சார்பில் முத்திரையிட்டு வழங்கப்பட்டது. அதில் மரணத்துக்கு காரணம் ஸ்ரீதேவி தற்செயலாக நீரில் மூழ்கியமை எனக் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. மேலும் அவருடைய இரத்தத்தில் மதுபானம் கலந்திருப்பதாகவும் அதில் கூறப்பட்டு உள்ளது. இதைத்தொடர்ந்து அவருடைய உடல் நறுமணமூட்டி பாதுகாத்து வைக்கும் பிரிவுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

துபாய் நகர நிர்வாக நடைமுறைப்படி ஸ்ரீதேவியின் உடலை இந்தியாவுக்கு திருப்பி அனுப்புவதற்கு முன்பாக அவருடைய பாஸ்போர்ட் ரத்து, மரணச் சான்றிதழ் உள்ளிட்ட பல்வேறு ஆவணங்களை அரசிடம் சமர்ப்பிக்க வேண்டியமை கட்டாயம் ஆகும். இதற்கான பணிகளில் அங்குள்ள சமூக சேவைப் பணியாளர்களும், போனிகபூர் குடும்பத்தினரும் ஈடுபட்டனர்.

அனைத்து ஆவணங்களும் சமர்ப்பிக்கப்பட்டு அவை உறுதி செய்யப்பட்ட பிறகே ஸ்ரீதேவியின் உடல் போனி கபூரிடம் ஒப்படைக்கப்படும் என்று கூறப்பட்டது.

இதற்கிடையே ஸ்ரீதேவி மரணம் குறித்து அவர் தங்கியிருந்த நட்சத்திர ஹோட்டல் நிர்வாகம் கருத்து எதையும் தெரிவிக்க மறுத்துவிட்டது. அந்த ஹோட்டலின் ஊழியர் ஒருவர் கூறுகையில், இந்திய நடிகையின் மரணம் பற்றி பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர் என்றார்.

### போனிகபூரிடம் விசாரணை

நடிகை ஸ்ரீதேவியின் மரணம் தொடர்பாக துபாய் பொலிஸார் நேற்று அவருடைய கணவர் போனி கபூரிடம் தீவிர விசாரணை நடத்தி அவருடைய வாக்குமூலத்தைப் பதிவு செய்தனர். ஸ்ரீதேவி குளியல் அறைக்குள் சென்ற நேரத்தில் வெளியில் போனிகபூர் மட்டுமே இருந்தார் எனக் கூறப்பட்டதால் அவரிடம் விசாரணை நடத்தப்பட்டது.

மேலும் ஸ்ரீதேவி இறப்பதற்கு முன்பாக 24 மணி நேரம் முதல் 48 மணி நேரம் வரை அவரிடம் யார் யாரெல்லாம் செல்போனில் தொடர்பு கொண்டு பேசியுள்ளனர் என்பதையும், குறிப்பாக அவரிடம் அடிக்கடி யார் பேசினார்கள் என்பதையும் கண்காணித்து அதன் அடிப்படையிலும் துபாய் பொலிஸார் தீவிர விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

### விடை தெரியாத 3 கேள்விகள்

நடிகை ஸ்ரீதேவி மாரடைப்பு காரணமாக இறந்தார் என முதலில் கூறப்பட்டது. தற்போது அவர் தற்செயலாக நீரில் மூழ்கி இறந்தார் எனப் பிரேத பரிசோதனை அறிக்கை கூறுகிறது.

அவருடைய மரணம் தொடர்பாக 3 மிகப் பெரிய கேள்விகள் எழுந்துள்ளன.

★ போனிகபூர் குளியல் அறையை முட்டித்தள்ளிக் கொண்டு சென்றபோது மாலை 6.25 மணி என்று தகவல்கள் கூறுகின்றன. ஆனால் இந்தச் சம்பவம் குறித்து துபாயைச் சேர்ந்த நண்பரின் அறிவுரைக்கு பிறகு இரவு 9 மணிக்குத்தான் பொலிஸுக்கு அவர் தகவல் தெரிவித்து உள்ளார். ஏன் இந்தத் தாமதம்?...

போனிகபூர் இதுபோன்ற சூழ்நிலையில் நட்சத்திர ஹோட்டலின் அவசர மருத்துவ உதவியை ஏன் நாடவில்லை?...

★ ஸ்ரீதேவிக்கு திடீர் மாரடைப்பால் மரணம் நிகழ்ந்தது என்பதை யார், எதற்காக கூறினார்கள்?



# கமல்ஹாசனுடன் மீண்டும் சேர்வதற்கு வாய்ப்பே இல்லை

நடிகர் கமல்ஹாசனுடன் 13 ஆண்டுகளாக திருமணமே செய்து கொள்ளாமல் வாழ்ந்து வந்தவர் நடிகை கௌதமி. 2016 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் கமலை விட்டுப் பிரிந்தார். அப்போது கமல் மீது அவர் எந்த வித புகாரும் சொல்லவில்லை. ஒத்து வரவில்லை பிரிந்து வந்து விட்டேன் என்று மட்டுமே சொன்னார். அதன் பிறகு சினிமா, சின்னத்திரையில் தொடர்ந்து பங்களித்து வரும் அவர், புற்றுநோய் விழிப்புணர்வு பிரசாரங்களிலும் ஈடுபட்டு வருகிறார்.

இந்த நிலையில், தற்போதும் கமலுடன் கௌதமிக்கு தொடர்பு இருக்கின்றது எனவும், அவரது புதிய கட்சியில் கௌதமியும் அங்கம்வகிப்பார் எனவும் ஊடகங்களில் செய்தி பரவி வருகின்றது. ஆனால் அந்தச் செய்தியை மறுத்து தனது டுவிட்டரில் செய்தி வெளியிட்டிருக் கிறார் கௌதமி.

அந்தச் செய்தியில், கமல்ஹாசனை விட்டுப் பிரிந்த பிறகு நான் அவரைச் சந்தித்ததில்லை. இப்போது அவர் புதிய கட்சி தொடங்கிய பிறகு நான் அவரைச் சந்தித்தேன் எனவும், அவரது கட்சியில் நான் இணையப்போகிறேன் எனவும் வெளியான செய்திகள் உண்மையில்லை என்று தெரிவித்து அந்த வதந்திக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ள கௌதமி, தான் மீண்டும் கமலுடன் சேர வாய்ப்பே இல்லை என்றும் கூறியுள்ளார்.

என் மகளுக்கும், எனக்கும் பாதுகாப்பான ஒரு வாழ்க்கை மற்றும் நிரந்தர வருமானத்திற்கு தேவையான பணிகளைச் செய்து வருகிறேன். அதோடு நான் கமல்ஹாசனின் ராஜ்கமல் பிலிம்ஸ் தயாரித்த படங்களில் ஆடை வடிவமைப்பாளராகவும் பணியாற்றியிருக்கிறேன். அந்த வகையில், தசாவதாரம், விஸ்வரூபம் படங்களுக்கு நான் பணியாற்றியமைக்கான சம்பளப்பாக்கியை இன்னும் தரவில்லை.



கௌதமி தெரிவிப்பு

அது குறித்து தகவல்கள் அனுப்பியபோதும் எந்தப் பதிலும் இல்லை. இதுபோன்ற வேலைகள் மூலம்தான் எனக்கு வருமானம் வருகிறது. ஆனால் எனக்கு வரவேண்டிய பணம் வராததால் பொருளாதார ரீதியாகப் பாதிக்கப்படுகிறேன். அதோடு நான் கமலைப் பிரிந்ததற்கு ஸ்ருதிஹாசனோ, அக்சராவோ காரணமல்லர். நான் எப்போதுமே வாழ்க்கையில் சுயமரியாதையுடன் வாழவேண்டும் என்ற நினைப்பவள். அந்தச் சுயமரியாதையானது சிதைந்து போகும்பட்சத்தில் அந்த வாழ்க்கையே வேதனையாகி விடும். அதன் காரணமாகவே நான் கமலைவிட்டுப்பிரிந்துவந்தேன்.- இவ்வாறு கௌதமி கூறியுள்ளார்.




# ஐ.பி.எல்லில் பஞ்சாப் அணிக்கு தலைமை தாங்குகின்றார் அஸ்வின்

11 ஆவது ஐ.பி.எல். 20 ஓவர் கிரிக்கெட் போட்டி இந்தியாவில் பல்வேறு நகரங்களில் ஏப்ரல் முதலாம் திகதி முதல் மே 27 ஆம் திகதி வரை நடக்கிறது.

இதில் பங்கேற்கும் 8 அணிகளில் ஒன்றான கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியின் கப்டனாக இந்திய கிரிக்கெட் அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளர்களில் ஒருவரான தமிழகத்தை சேர்ந்த ஆர்.அஸ்வின் நேற்றுமுன்தினம் நியமிக்கப்பட்டுள்ளார். இதனை பஞ்சாப் அணியின் ஆலோசகரும், இந்திய அணியின் முன்னாள் அதிரடி ஆட்டக்காரருமான ஷேவாக், ஐ.பி.எல். அணிகளின் அதிகாரபூர்வ பேஸ்புக் பக்கத்தில் வீடியோ மூலம் அறிவித்துள்ளார்.

### எதிர்பார்ப்பு நிறைவேறியது

அஸ்வின் 2009 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை சென்னை சூப்பர் கிங்ஸ் அணியில் முக்கிய வீரராக இடம் பிடித்து ஆடினார். கடந்த 2 ஆண்டுகள் சென்னை அணிக்கு தடை விதிக்கப்பட்டதால் ரைசிங் புனே சூப்பர் ஜேயன்ட்ஸ் அணியில் இடம் பெற்றார். 'ஹேர்னியா' பிரச்சினை காரணமாக கடந்த ஆண்டில் அவர் ஓர் ஆட்டத்தில் கூட விளையாடவில்லை. தடை முடிந்து ஐ.பி.எல். போட்டிக்கு திரும்பிய சென்னை அணி அஸ்வினை தக்கவைக்க தவறியதுடன், ஏலத்திலும் எடுக்க வில்லை. அவருக்கு பதிலாக பஞ் சாபை சேர்ந்த சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன்சிங்கை சென்னை அணி ஏலத்தில் எடுத்தது.

இந்த நிலையில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி ஆர்.அஸ்வினை இந்தியப் பணத்தில் ரூ.7.60 கோடிக்கு ஏலத்தில் எடுத்தது. பஞ்சாப் அணியின் தலைவராக இருந்த மக்ஸ்வெல், டெல்லி டேர்டெவில்ஸ் அணிக்குச் சென்றுவிட்டமையால் பஞ்சாப் அணி யின் தலைவர் பொறுப்பை அஸ்வின் ஏற்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்பட்டது. அதனை உறுதி செய்யும் வகையில் நேற்றுமுன்தினம் அறிவிப்பு வெளியாகி இருக்கிறது.

### நெருக்கடி இல்லை

அணித் தலைவர் தேர்வு குறித்து ஷேவாக் கூறுகையில், *“அஸ்வின் மிகவும் புத்திசாலி. அவர் 20 ஓவர் போட்டியை மற்ற எல்லோரையும் விட நன்கு புரிந்து கொள்ளக்கூடியவர். இந்த ஆண்டு நாங்கள் வித்தியாசமான முயற்சிகளை மேற்கொள்ள முடிவு செய்துள்ளோம். அணித் தலைவர் பதவிக்கு அஸ்வின் பொருத்தமான தேர்வு எனக் கருதுகிறேன்”* என்றார்.

கடந்த ஆண்டு ஜுலை மாதம் முதல் 20 ஓவர் மற்றும் ஒருநாள் போட்டிக்கான இந்திய அணியில் இருந்து ஓரங்கட்டப்பட்டிருக்கும் அஸ்வின் தற்போது களத்தில் அணித் தலைவர் என்ற பொறுப்புடன் விராட் கோஹ்லி, டோனி ஆகியோரை எதிர்கொள்ள இருக்கிறார்.

அணித் தலைவராக நியமனம் செய்யப்பட்ட பிறகு பஞ்சாப் அணி யின் இணையத் தளத்தில் அஸ்வின் கருத்து தெரிவிக்கையில், “பஞ்சாப் அணியின் தலைவனாக தேர்வுசெய்யப்பட்டிருக்கின்றமையை பெருமையாக கருதுகிறேன். திறமை வாய்ந்த வீரர்களை உள்ளடக்கிய அணியை வழிநடத்த கொடுத்துள்ள பொறுப்பை உணர்ந்து சிறப்பாக செயல்படுவேன். அணி வீரர்களிடம் இருந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த முடியும் என்று நம்புகிறேன். இந்தத் தருணம் எனக்குப் பெருமையாக இருக்கிறது. அணித் தலைவர் பதவியை அளித்ததால் எனக்குக் கூடுதல் நெருக்கடி எதுவும் இல்லை. ஏற்கனவே நான் 21வயதிலேயே முதல் தர போட்டியில் மாநில அணியை வழிநடத்தி இருக்கிறேன். இதற்கு முன்பு பல முறை அணிக்கு தலைமை தாங்கி இருக்கிறேன். அணித் தலைவருக்குரிய சவாலை அனுபவித்துச் செயல்படுவேன்' என்றார்.

### 10 ஆவது அணித் தலைவர்

31 வயதான அஸ்வின் பஞ்சாப் அணியின் 10 ஆவது அணித் தலைவர் ஆவார். இதற்கு முன்பு ஆஸ்திரேலியாவின் மக்ஸ்வெல் (2017), இந்திய வீரர் முரளி விஜய் (2016), தென்னாபிரிக்காவின் டேவிட் மில்லர் (2016), ஆஸ்திரேலியாவின் ஜார்ஜ் பெய்லி (2014, 2015), டேவிட் ஹஸ்சி (2012, 2013), கில்கிறிஸ்ட் (2011, 2012), இலங்கையின் ஜெயவர்த்தன (2010), சங்கக்கார (2009), இந்திய வீரர் யுவராஜ்சிங் (2008) ஆகியோர் பஞ்சாப் அணியின் தலைவர் பொறுப்பை வகித்துள்ளனர்.

இந்தப் பருவ காலத்துக்கான கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி வீரர்கள் வருமாறு:–

ஆர்.அஸ்வின் (கப்டன்), அக்ஷர் பட்டேல், கருண்நாயர், லோகேஷ் ராகுல், டேவிட் மில்லர், ஆரோன் பிஞ்ச், யுவராஜ்சிங், மார்கஸ் ஸ்டோனிஸ், மயங்க் அகர்வால், அங்கித் சிங் ராஜ்பூத், மனோஜ் திவாரி, மொகித் ஷர்மா, முஜீப் ஜர்டான், பரிந்தர் ஸ்ரன், ஆன்ட்ரூ டை, அக்ஷதீப் நாத், பென் வார்ஷிஸ், மயங்க் தாகர், பிரதீப் சாகு, கிறிஸ் கெய்ல், மன் சூர் தார்.

# டிராவிட்டின் கோரிக்கை ஏற்பு

ஜுனியர் உலகக் கிண்ணத்தை வென்ற இந்தியக் கிரிக்கெட் அணியின் நிர்வாகத்தினருக்கு சமமான அளவில் பரிசுத்தொகை வழங்க இந்திய கிரிக்கெட் சபை ஒப்புக்கொண்டுள்ளது.

நியூஸிலாந்தில் கடந்த 3 ஆம் திகதி நடந்த 19 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான (ஜுனியர்) 12 ஆவது உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டத்தில் இந்திய அணி 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் முன்னாள் சம்பியனான ஆஸ்திரேலியாவை வீழ்த்தி 4 ஆவது முறையாக சம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.

கிண்ணத்தை வென்று அசத்திய பிரித்வி ஷா தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணியின் வீரர்கள் அனைவ ருக்கும் தலா ரூ.30 லட்சமும், இந்திய அணியின் தலைமை பயிற்சியாளரும், முன்னாள் அணித் தலைவருமான டிராவிட்டுக்கு ரூ.50 லட்சமும், உதவி பயிற்சியாளர்கள் உள்ளிட்ட அணியின் நிர்வாகத்தினருக்கு தலா ரூ.20 லட்சமும் பரிசுத் தொகையாக வழங்கப்படும் என்று இந்திய கிரிக்கெட் சபையின் நிர்வாக குழு அறிவித்திருந்தது.

இந்திய கிரிக்கெட் சபை தனக்கு மட்டும் அதிக பரிசுத்தொகை அறிவித்து விட்டு சக உதவி பயிற்சியாளர்களுக்கு பரிசுத் தொகை குறைவாக அறிவித்து இருப்பதற்கு டிராவிட் உடனடியாக அதிருப்தி தெரிவித்தார். அத்துடன் உலகக் கிண்ணத்தை வென்ற இந்திய அணிக்கு எல்லா உறுப்பினர்களும் தங்களது சிறப்பான பங்களிப்பை சம அளவில் அளித்தனர். எனவே, அணியின் அனைத்து நிர்வாகிகளுக்கும் ஒரே மாதிரியான பரிசுத்தொகையை வழங்க வேண்டும் என்று இந்திய கிரிக்கெட் சபைக்கு டிராவிட் வேண்டுகோள் விடுத்தார்.

டிராவிட்டின் கோரிக்கையை இந்திய கிரிக்கெட் சபை ஏற்றுக்கொண்டுள்ளது. இதன்படி தலைமை பயிற்சியாளர் டிராவிட் மற்றும் உதவி பயிற்சியாளர் உள்ளிட்ட அணி நிர்வாகத்தினர் அனைவருக்கும் ஒரே மாதிரியான பரிசுத் தொகை வழங்கப்படுகிறது.

அதாவது, அணியின் நிர்வாகத்தினர் அனைவருக்கும் தலா ரூ.25 லட்சம் பரிசுத் தொகையாக வழங்கப்பட இருக்கிறது. எல்லோருக்கும் ஒரே மாதிரியான பரிசுத் தொகை வழங்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்த டிராவிட்டின் சுயநலமற்ற செயல்பாடு அவர் மீதான மரியாதையை மேலும் அதிகரித்துள்ளது.






# குத்துச் சண்டையில் வெற்றி பெற்றவர் திடீரென மயங்கிச் சாய்ந்து மரணம்

## இங்கிலாந்தில் அதிர்ச்சிச் சம்பவம்

இங்கிலாந்தில் வெற்றி பெற்ற குத்துச் சண்டை வீரர் திடீரென மயங்கி விழுந்து உயிரிழந்தமையால் ரசிகர்கள் அதிர்ச்சி அடைந்தனர்.

இங்கிலாந்தில் உள்ள டான்காஸ்டரில் கடந்த சனிக்கிழமை குத்துச்சண்டை போட்டி நடைபெற்றது. இதில் நியூகேஸ்டிலைச் சேர்ந்த ஸ்காட் வெஸ்ட்கார்த், டெக் ஸ்பெல்மேனை எதிர்கொண்டார். இதில் 31 வயதான ஸ்காட் வெஸ்ட்கார்த் வெற்றி பெற்றார். வெற்றி பெற்ற சந்தோசத்தில் போட்டிக்குப் பின் நிருபர்களுக்கு பேட்டியளித்துக் கொண்டிருந்தார். அப்போது திடீரென தலையில் வலி ஏற்பட்டு மயங்கி விழுந்தார்.

உடனடியாக அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். ஆனால் ஸ்காட் வெஸ்ட்கார்த் பரிதாபமாக உயிரிழந்தார். மூளையில் ரத்தக் கசிவு ஏற்பட்டதால் மரணம் ஏற்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. பேட்டியளித்துக் கொண்டிருக்கும்போது திடீரென அவர் சரிந்து உயிரிழந்தமையால் ரசிகர்கள் அதிர்ச்சியில் உறைந்தனர்.

## சர்வதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர்களின் தாயகமான இணைந்த வடக்கு – கிழக்கில் சுயநிர்ணய உரிமையுடன் அவர்கள் வாழ்வதற்கான அரசியல் தீர்வை எட்டுவதற்கு ஒரு இணக்க நடுவராகச் செயற்படும்படி சர்வதேச சமூகத்தை வடக்கு மாகாண சபை கோருகிறது எனவும் அந்தத் தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் 117 ஆவது அமர்வு மாகாண சபை சபா மண்டபத்தில் சபைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் தலைமையில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. இதன்போது வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கத்தினால் முன்வைக்கப்பட்ட பிரேரணையே சபையில் ஏகமனதாக நிறைவேறியது. இந்தத் தீர்மானம் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு உடனடியாக அனுப்பி வைக்கப்பட்டது.

தீர்மானத்தில் அடங்கியுள்ள விபரம் வருமாறு:

2013ஆம் ஆண்டு செப்ரெம்பரில் இடம்பெற்ற ஐ.நா. மனித உரிமைகள் சபையின் அமர்வில் இலங்கை அரசின் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல், மனித உரிமைகள் முதலியனவற்றை ஊக்கப்படுத்துதல் என்ற தலைப்பிலான தீர்மானம் (இலக்கம் 30/1) நிறைவேற்றப்பட்டது. இதற்கு இலங்கை அரசும் இணை அனுசரணை வழங்கியது.

மனித உரிமைகள் மற்றும் சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களை மீறுதல் மற்றும் துஷ்பிரயோகங்கள் போன்றவை தொடர்பான குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்ய வெளிநாட்டு நீதிபதிகள், சட்டவாளர்கள், வழக்குத் தொடுநர்கள், விசாரணையாளர்கள் அடங்கலாகப் பக்கச்சார்பற்ற சட்டநெறிப் பொறிமுறை ஒன்றை ஏற்படுத்துவதற்கான கடப்பாட்டு நிலைக்குள் அது தன்னை உட்படுத்திக் கொண்டதையும் நினைவு கூர்ந்தது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 30/1 தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையும் இலங்கை அரசு எடுக்கத் தவறியுள்ளது. இலங்கையின் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அரசின் முதுநிலை உறுப்பினர்கள், இந்தத் தீர்மானத்தில் உள்ளவற்றை தாம் முழுமையாக நிறைவேற்றப்போவதில்லை எனத் தெளிவாகவும் ஆணித்தரமாகவும் வெளிப்படுத்தியுள்ளனர் என்பதை அழுத்தமாகத் தெரியப்படுத்துகின்றோம்.

ஒரு சமத்துவமான அரசியல் தீர்வைக் கண்டு கொள்வதற்கான எந்தவொரு மனப்பூர்வமான நடவடிக்கையை மேற்கொள்ளாதிருந்தும் தவறியிருப்பது மட்டுமல்லாமல் சிங்களஅரசினுடைய ஒடுக்குமுறை மனப்போக்கை எடுத்துக்காட்டும் விதத்திலே இனம், மதம் ஆகியவற்றின் சம அந்தஸ்தை மறுதலிக்கும் செயற்பாடுகள் வலியுறுத்துவதையும் கவனத்தில் கொண்டும் இலங்கையின் வடக்கு மாகாண சபையானது பின்வருமாறு தீர்மானம் எடுக்கிறது.

1. இலங்கையானது தானே ஏற்றுக்கொண்ட கடப்பாடுகளை நடைமுறைப்படுத்த ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 30/1 தீர்மானத்தை நடைமுறைப்படுத்த இயலாமல் அல்லது விரும்பாமல் இருப்பதையும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் 2015 ஆம் ஆண்டு ஜனவரி 25ஆம் திகதிய முடிவுரை கூறுவதான இலங்கையின் பொறுப்புக் கூறுதல் மற்றும் நல்லிணக்கம் முதலியவற்றின் முன்னேற்றத்தை ஊக்குவிக்கும் திருப்புமுனை வகிபாத்திரத்தை மேற்கொள்ளும்படி மனித உரிமைகள் சபையை அதன் ஆணையாளர் தூண்டுகிறார். அத்தோடு துணை நிற்கக் கூடியதான உலகலாளவிய விசாரணை அதிகாரத்தைப் பிரயோகித்தல் உள்ளிட்ட வேறு வழிகளையும் ஆராயும் படியும் உறுப்பு நாடுகளை அழைக்கிறது என்பதையும் கருத்தில் எடுத்துள்ள இந்தச் சபையானது, இந்தப் பிரச்சினையைத் தீர்க்க ஐ.நாவின் தலைமையிலான ஒரு சர்வதேசச் சட்டநெறிப் பொறிமுறையை ஏற்படுத்த ஐ.நா. மனித உரிமைகள் சபையின் உறுப்பு நாடுகளிடம் கோருகின்றது.

2. உண்மை, நீதி மற்றும் சமத்துவமான அரசியல் தீர்வு இல்லாமல் இலங்கையிலே நல்லிணக்கம் அல்லது நிரந்தர அமைதிக்குச் சாத்தியமில்லை என இந்தச் சபை நம்புகின்றது.

3. 2015 செப்ரெம்பரில் முன்வைக்கப்பட்ட இலங்கை மீதான ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் விசாரணை அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டதுபோல், றோம் நியதிச் சட்டத்தை அங்கீகரிக்க இலங்கையை வற்புறுத்தும்படி ஐ.நாவையும் சர்வதேச சமூகத்தையும் இந்தச் சபை கோருகிறது.

4. தமிழ் மக்கள் இலங்கையில் இணைந்த வடக்கு – கிழக்கு பிரதேசங்களில் தமது மரபுவழித்தாயகத்தைக் கொண்டிருக்கும் ஒரு மக்கள் இனம் என்பதையும் அவர்கள் சுய நிர்ணய உரிமை கொண்டவர்கள் என்பதையும் கண்டுணர்ந்திருக்கும் இந்தச் சபையானது, அரசியல் தீர்வுக்கான ஒரு இணக்க நடுவராகச் செயற்படும்படி சர்வதேச சமூகத்தை, குறிப்பாக அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் மற்றும் இந்தியாவைக் கேட்டுக்கொள்கிறது.

– என்றுள்ளது. (ஐ -7)

## இந்தியாவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களின் தளபதி அட்மிரல் ரவீந்திர விஜே குணரத்ன தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள அவர், 'தி ஹிந்து' ஆங்கில நாளிதழுக்கு அளித்துள்ள செவ்வியிலேயே இதனைக் கூறியுள்ளார்.

இந்தியாவின் பாதுகாப்புக்குக் கவலைகளை ஏற்படுத்தக் கூடிய எத்தகைய நடவடிக்கைகளும் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தில் மேற்கொள்ளப்படாது என்று என்னால் உத்தரவாதம் அளிக்க முடியும்.

அம்பாந்தோட்டையின் பாதுகாப்புத் தொடர்பாக எந்த இராணுவக் கூட்டணிக்குள்ளேயும் இலங்கை நுழையாது என்றும் இலங்கைத் தலைவர்கள் இந்தியாவுக்கு உறுதியளித்துள்ளனர்.

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தின் பாதுகாப்பை இலங்கை ஆயுதப்படைகளும், கடற்படையுமே உறுதி செய்யும் என்றும் அவர் கூறியுள்ளார். (ஐ)

## சமஷ்டியே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு வலியுறுத்தினார்.

அவரது உரைக்கு வடக்கு முதலமைச்சர் தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.

முதலமைச்சர் விக்கினேஸ்வரன் வரவேற்று தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியிருந்தார்.

நியாஸ் தனது உரையில் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

வடக்கு மாகாண மக்களின் உரிமை, கல்வி, வாழ்வாதாரம், அபிவிருத்தி, நிர்வாகம் எனப் பல வழிகளில் வடக்கு மாகாண சபை செயற்பட்டு வருகின்றது. வடக்கு மாகாண சபைதான் இலங்கையில் ஏனைய மாகாண சபைகள் உருவாகப் பிரதான காரணமாக இருந்தது. அத் தகைய முதன்மையான சபையில் பல்வேறுபட்ட சிக்கலான விடயங்களைக் கலந்துரையாடித் தீர்த்துக் கொள்ள வேண்டும்.

தேசிய மற்றும் சர்வதேசிய ரீதியான சிறப்பு வாய்ந்த சபையாக காணப்படுகின்ற வடக்கு மாகாண சபையில் அங்கம் வகிப்பதை பெருமையாகக் கருதுகிறேன். இங்குள்ள மக்களுக்குப் பல்வேறு பிரச்சினைகள் உள்ளன. அவற்றுக்கான தீர்வுகள் காணப்பட வேண்டியது மிக அவசியம். இன ரீதியான பிரச்சினைகள் ஏற்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. அவ்வாறு மக்களின் உரிமை மீறப்படாமல் அவற்றைத் தீர்த்துக் கொள்ள வேண்டும்.

இங்கு நீண்டகாலமாக நிலவி வருகின்ற இனப்பிரச்சினைக்குச் சமஷ்டி முறையிலான தீர்வே வழங்கப்பட வேண்டும். சந்தேகத்துக்கு இடமில்லாத வகையில் உரிமைகளைச் சரியான முறையில் பெறுவதன் அடிப்படையில் சமஷ்டி முறையிலான தீர்வு வேண்டும். சமஷ்டி முறையிலான தீர்வுக்கு அப்பாலும் உங்களுடன் இணைந்து சிந்திப்பதற்குத் தயாராகவே இருக்கிறேன். அத்தோடு இந்த மாகாண சபையில் ஒற்றுமையாக இணைந்து பயணிக்க விரும்புகிறேன். – என்றார்.

நியாஸ் தனது கன்னியுரையில் தெரிவித்துள்ள கருத்தை வரவேற்ற வடக்கு முதலமைச்சர், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சமஷ்டி முறையிலான ஆட்சிக்கு ஆதரவு எனக் கூறியமை மகிழ்ச்சியளிப்பதாக உள்ளது. – என்றார். (ஐ-7)

## மருத்துவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருட மாணவன் ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் – பலாலி வீதி, கந்தர்மடம் சந்திக்கு அருகில் வாடகைக்கு தங்கியிருந்த வீட்டில் இருந்தே அவரது சடலம் நேற்று முற்பகல் மீட்கப்பட்டது.

வவுனியா–உக்கிளாங்குளம் பகுதியைச் சேர்ந்த இம்மானுவேல் சாமுவேல் என்ற (வயது – 27) மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

தனதுகல்விச்செயற்பாட்டில் ஏற்பட்ட மன அழுத்தம் காரணமாகவே தற்கொலை செய்வதாகக் கடிதமொன்றை அவர் எழுதி வைத்திருந்தார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை யாழ்ப்பாணம்பொலிஸார்மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-7)

## இராணுவம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்குச் சரி யான தருணம் ஏற்பட்டுள்ளது. எனவே தமிழருக்கு நீதி கிடைக்கச் சகல தமிழ்த் தலைமைகளும் ஒன்றுபட்டுச் செயலாற்ற வேண்டும்.

– இவ்வாறு நேற்று வடக்கு மாகாண சபை அமர்வில் தனது கன்னி உரை மூலம் வலியுறுத்தினார் உறுப்பினர் ச. குகதாஸ்.

சபைக்கு நேற்று முதல் முறையாகவந்திருந்தகுகதாஸ், தனது கன்னி உரையை நிகழ்த்தினார். இறுதிப்போரின்போது வன்னியில் நடந்த அவலங்களை நேரடிச் சாட்சியாக அவர் சபையில் பதிவு செய்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

போர் ஆரம்பிக்கப்பட்டது முதல் வன்னியில் இராணுவம் விமான மற்றும் எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டிருந்தது. இதனால் பல ஆயிரக் கணக்கான மக்கள் கொல்லப் பட்டிருந்தனர். இந்நிலையில் சர்வதேச அழுத்தங்கள் ஏற்பட்டமையால் போர்ச் சூனிய வலயங்களாக இலங்கைப்படைகள் சில பகுதிகளை அறிவித்திருந்தன.

அதனை நம்பி மக்களும் வெள்ளைக் கொடிகளைப் பறக்கவிட்டபடி தங்கியிருந்தபோது நயவஞ்சகம்மிக்க வகையில் அங்கும் அரச படைகள் தாக்குதல்களைத் தொடர்ந்து நடத்தின. மக்களைப் பாதுகாப்பதாகக்கூறிப்படைகள் நாடகத்தை நடத்தி ஆயிரக் கணக்கில் மக்களைக் கொன்று குவித்திருந்தன. குறிப்பாக வைத்தியசாலைகள், பாடசாலைகள், யுத்த சூனிய வலயங்கள் என்று எதனையும் பாராது பரவலாகவே தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

உணவுக்குக் கடும் தட்டுப்பாடு ஏற்பட்டிருந்தபோது தாய்மார்கள் பால்மா வாங்குவதற்காக நீண்ட வரிசையில் நின்றிருந்த போது – சிறுவர்கள் முதல் பெரியோர் வரை உணவுக்காக வரிசையில் காத்திருந்தபோது மேற்கொள்ளப்பட்ட விமான மற்றும் எறிகணைத் தாக்குதல்களால் பல ஆயிரக்கணக்கானோர் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டும் பலர் காயமடைந்துமிருந்தனர்.

இவ்வாறானதொரு நிலையில் இந்தியாவில் தேர்தலொன்று நடக்கின்றது. அந்தத் தேர்தலூடாக மாற்றம் ஏற்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்பட்ட நிலையில் மீண்டும் ஏமாற்றமே ஏற்படுகின்றது. இதன் பின்னர் படைகளின் தாக்குதலால் தொடர்ச்சியாக மக்கள் கொல்லப்பட்டுக் கொண்டிருக்கையில் ஒரு பகுதி நிலப்பரப்பு படைகள் வசமாகின்றது.

இதனைத் தொடர்ந்து மக்கள் படையினரின் கட்டுப்பாட்டுக்குள் சென்றபோது அரச படைகள் நேரடியாகவே துப்பாக்கிகளால் மக்களைச் சுட்டுக் கொன்றன. இவ்வாறு பல வழிகளிலும் மக்கள் கொல்லப்பட்டபோதும் எஞ்சியவர்களே படையினரின்கட்டுப்பாட்டுக்குள் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு மக்கள் கொல்லப்பட்டிருக்கின்றபோது அரச படைகளும் அரசும் வன்னியில் ஆயிரம் புலிகளும் பத்தாயிரம் மக்களுமே உள்ளனர் என அறிவிப்பை விடுக்கின்றன. ஆனால் படைகள் கிளிநொச்சிக்கு வந்தபோது 5 இலட்சத்து 22ஆயிரம் பேர் இருந்தனர். இதன் பின்னர் முகாம்களுக்கு 3 இலட்சத்து 75ஆயிரம் பேர் முகாம்களில் தங்கியிருந்தனர். அவ்வாறாயின் ஒரு இலட்சத்து 20ஆயிரம் பேரும் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

இவ்வாறு மக்கள் கொல்லப்பட்டும் காயமடைந்தும் உறவுகளைத் தொலைத்தும், இழந்தும் முகாம்களில் மோசமாக அடைக்கப்பட்டு கொடுமைகள், சித்திரவதைகள் நிரம்பிய அவலங்களை நாங்கள் எதிர்நோக்கியிருந்தோம். இவ்வாறு எமக்கு இழைக்கப்பட்ட அநீதிகள், கொடுமைகளை நாம் ஒருபோதும் மறக்கப் போவதும் இல்லை. மன்னிக்கப் போவதுமில்லை. இங்கு நான் எனது சாட்சியங்களையே பதிவு செய்துள்ளேன்.

இத்தகையதொரு சூழ்நிலையில் தான் இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் சபையில் தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டபோதும், கொண்டு வர நடவடிக்கைகள் எடுக்கின்றபோதும் அரசு அதிலிருந்து தப்பிக்கவே முயல்கின்றது.

ஆகவே, தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்கச் சகல தமிழ்த் தலைமைகளும் ஒன்றுபட்டுச் செயலாற்றவேண்டும். இன்று மனித உரிமைகள் ஆணையகமும் சர்வதேசமும் எமக்குச் சார்பான நிலைப்பாட்டில் இருக்கின்றபோது அதனூடாக நாம் எமக்கானதீர்வைப் பெற்றுக்கொள்ள வேண்டும். – என்றார். (ஐ -7)

## தமிழ்க்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தது சிறிலங்கா சுதந்திர கட்சி.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் தொடர்ந்தும் மஹிந்த தரப்பினர் அங்கம் வகிப்பது பொருத்தமில்லாததாகும். அவர்களைத் தொடர்ந்தும் கட்சியுடன் வைத்திருப்பதா? என்பது குறித்து கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் அழுத்தமாகக் கேள்வி எழுப்புவோம் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளரும் அமைச்சருமான துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சியின் செய்தியாளர் சந்திப்பு நேற்றுக் கட்சித் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன்போதே துமிந்த திஸாநாயக்க மேற்கண்டவாறு கூறினார்.

அவர்மேலும்தெரிவித்தவை வருமாறு:–

சிறிலங்கா சுதந்திரக் கட்சி கூட்டு அரசில் நீடிக்கும். இதில் எழுத்துமூல அறிக்கைகளை நாம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டிய தேவை இல்லை.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன இனியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து செயற்படுவது தொடர்பாக எதிர்பார்க்க முடியாது. அவர்கள் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவாகவே பயணிப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

மஹிந்த உள்ளிட்ட சிலர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதவிகளில் உள்ளனர். எனினும், தொடர்ந்தும் இணைந்து செயற்படுவதா அல்லது நிராகரிப்பதா என்பது குறித்து ஆராய வேண்டியுள்ளது. – என்றார். (ஐ)

# தெய்வச் சிலைகள் உடைப்புக்கு எதிர்ப்பு

## பொலிஸ் தடையையும் மீறி மன்னாரில் நேற்றுப் போராட்டம்



மன்னார், பெப். 28

மன்னார் மாவட்டத்தில் அண்மைக் காலமாக இந்து மக்களின் வணக்கச் சிலைகள் உடைக்கப்பட்டு வருவதைக் கண்டித்து மன்னாரில் இந்து மகா சபையின் ஏற்பாட்டில் கவனவீர்ப்புப் பேரணி ஒன்று நேற்று இடம்பெற்றது.

இந்த கவனவீர்ப்புப் பேரணிக்கு இறுதி நேரத்தில் மன்னார் பொலிஸார் தடை விதித்தமையால் சற்று அமைதி யின்மை ஏற்பட்டது.

நேற்றைய தினம் பொலிஸாரின் தடையையும் மீறி கவனவீர்ப்புப் பேரணி இடம்பெற்றது.

மன்னார் மாவட்டத்தில் அண்மைக் காலமாகத் தொடர்ச்சியாக இந்து மக்களின் வணக்கச் சிலைகள் உடைக்கப்பட்டு வந்தமையோடு , சிலைகளும் திருடிச் செல்லப்பட்டுள்ளன.

இதனால், தலைமன்னார் பிரதான வீதியில் உள்ள லிங்கேஸ்வரர் ஆலயத்திற்கு முன் விசேட மத வழிபாடுகளைத் தொடர்ந்து மன்னார் மாவட்ட செயலகம் வரை அமைதியான முறையில் கவனவீர்ப்புப் பேரணி நடத்தத் தீர்மானிக்கப்பட்டதோடு, உரிய தரப்பினிடம் அனுமதியும் பெற்றுக் கொள்ளப் பட்டது.



இந்த நிலையில் நேற்றுக் காலை லிங்கேஸ்வரர் ஆலயத்திற்கு முன் விசேட மத வழிபாடு நடைபெற்றது. இதன்போது அந்தப் பகுதியில் பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

மத வழிபாடு முடிவடைந்த நிலையில் சம்பவ இடத்திற்கு வந்த மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட குழுவினர் கவனவீர்ப்புப் பேரணிக்கு அனுமதி அளிக்க மறுத்துள்ளனர்.

இதனால், அங்கு கூடி நின்ற மக்களுக்கும், பொலிஸாருக்கும் இடையில் சற்று நேரம் முரண்பாடான நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் அந்தப் பகுதியில் சிறிது நேரம் அமைதியின்மை ஏற்பட்டி ருந்தது.

நூற்றுக்கணக்கான ஆண்கள், பெண்கள், வயோதிபர்கள் என பலர் அங்கு கூடியிருந்த நிலையில், பொலிஸாரின் தடையையும் மீறி அமைதியான முறையில் மன்னார் மாவட்ட செயலகம் நோக்கிப் பேரணியாகச் சென்றுள்ளனர்.

பின்னர் பேரணியில் கலந்து கொண்டவர்கள் மாவட்ட செயலகத்திற்கு முன் கூடி நிற்க, இந்து மகா சபையின் பிரதிநிதிகள் மாவட்டச் செயலகத்தினுள் சென்று தமது கோரிக்கை அடங்கிய மகஜரை மாவட்ட அரசாங்க அதிபரிடம் கையளித்ததோடு, இந்தச் சம்பவங்களுக்குத் துரித கதியில் தீர்வைப் பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க–112)



## சீனாவுக்கு செல்கிறார் பிரிகேடியர் பிரியந்த!

கொழும்பு, பெப். 28

பிரித்தானியாவுக்கான இலங்கை தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகராகப் பணியாற்றி வந்த பிரிகேடியர் பிரியந்த பெர்னாண்டோ சீனா செல்லவுள்ளார்.

சீனாவில் பயிற்சி பாடநெறி ஒன்றை மேற்கொள்வதற்காகவே இவர் சீனா செல்லவுள்ளார் எனக் குறிப்பிடப்படுகிறது.

இந்த பாடநெறி 5 மாதங்கள் வரை தொடர்ச்சியாக நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக பிரிகேடியர் பிரியந்த பெர்னாண்டோ எதிர்வரும் 2 ஆம் திகதி சீனாவுக்கு செல்லவுள்ளார் என்றும் தகவல்கள் தெரிவித்துள்ளன.

இலங்கையின் சுதந்திர தினத்தன்று பிரித்தானியாவில் உள்ள இலங்கை தூதரகத்திற்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட புலம்பெயர் தமிழர்களின் கழுத்தை அறுத்து விடுவேன் என பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோ சமிக்ஞை காட்டினார் எனக் குற்றச்சாட்டுக்கள் எழுந்திருந்தன.


இது தொடர்பான விசாரணைகளுக்காக இவர் அண்மையில் இலங்கைக்குத் திருப்பி அழைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## அம்புலன்ஸ் சாரதிகள் மூவர் உண்ணாவிரதம்!

கொழும்பு, பெப். 28

அனுராதபுரம் பொதுவைத்தியசாலையில் பணிபுரியும், அம்புலன்ஸ்களின் சாரதிகள் மூவர் இடமாற்றத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று வைத்தியசாலை முன்பாக உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## வவுனியா குருமன்காட்டில் இளைஞனின் சடலம் மீட்பு!



வவுனியா குருமன்காடு காளி கோவில் வீதி முதலாம் ஒழுங்கையில் உள்ள வீடு ஒன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் இளைஞர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

நேற்று மதியம் 12.30 மணியளவில் இந்தச் சடலம் மீட்கப்பட்டது.

தாயார் நேற்றுக் காலை 8 மணியளவில் வேலைக்கு சென்ற சமயத்தில் தனிமையில் வீட்டில் இருந்த இளைஞரே தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டிருந்தார். காலையில் சென்ற தாயார் மீண்டும் 12.30 மணியளவில் வீடு திரும்பிய சமயத்தில் தூக்கில் தொங்கிய நிலையில் மகன் காணப்பட்டுள்ளார். அயலவரின் உதவியுடன் சடலம் கிழே இறக்கப்பட்டதுடன் பொலிஸாருக்கும் தெரியப்படுத்தியுள்ளனர்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். 28 வயதுடைய கலைச்செல்வன் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இவர் சற்று மனநலம் பாதிக்கப்பட்டவர் எனவும் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தவர் எனவும் அயலவர்கள் தெரிவித்தனர். (க–100)





# காரைநகர் - வலந்தலை, மடத்துக்கரை திருவருள் மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்

# தேர்த்திருவிழா சிறப்பு மலர் - 28.02.2018

## ஆலய வரலாறு

தெட்சண கைலாசம் என்று பலராலும் போற்றப்படுகின்ற ஈழ வள நாட்டின் வடமேல் திசையில் சைவமும் தமிழும் திகழ்ந்து தான, தர்மமும் சிறப்புற்று விளங்குகின்றதுமான காரைநகர் நுழைவாசலில் என்றும் அருள் பாலித்துவரும் முத்துமாரி அம்மனுக்கு இன்று தேர்த்திருவிழா ஆகும்.

அம்பாள் மிகவும் பழமைவாய்ந்த சக்தியாகும். தம்மை நாடி வருகின்ற அடியார்களுக்கும் நம்பிக்கை உடையவர்களுக்கும் என்றும் அருள் பொழிவாள். வழிக்கரை அம்மன் மடத்துக்ரை தாயே சக்தியின் வடிவமே என்று மனம் குளிர எமது மூதாதையர்கள் வழிபாடு செய்தனர். தாயின் பெருமைகளை நாம் கூற முடியாது. மாபெரும் சக்தியாக கிழக்குப் பக்கம் நோக்கியபடியே கருணை மழை பொழியும் அருள் கடாட்சமானது காரைநகர் மக்கள் செய்த பாக்கியம். கலங்கரை விளக்குப் போன்று ஒளி வீசுகின்ற முத்துமாரி அம்மனுக்கு வருடந்தோறும் வைகாசி மாத புனர்பூச நட்சத்திரத்துக்கு பத்து நாள்கள் முன்னதாக விளக்கு வைத்து கொடியேற்றி பொங்கல் வேள்வி செய்து, வாழைக் குலைகள் கட்டி நேர்த்திக்கடன்களை நிறைவு செய்து, தங்கள் மனக்குறைகளை நீக்குவார்கள். இவ்வாறு பெருமையோடு விளங்குகின்ற இவ்வாலயமானது இற்றைக்கு 200 வருடங்கள் பழமை வாய்ந்தது. ஏறத்தாழ 1810ஆம் ஆண்டளவில் இவ்வாலயம் தோற்றம் பெற்று மண் குடிசையில் அம்மன் என்ற பெயர் வடிவமைக்கப் பெற்ற முகவடிவோடும் முத்து மாரி அம்மன் என்ற பெயர் வழக்கத்தோடும் மக்களால் பெரும் பக்தியோடு வணங்கப்பெற்று வந்தது.

அருட்கடல் ஆகி கருணாகரி நோய்த் துயரில் இருந்து மக்களை விடுவித்து மழை வளம் கொடுத்து பயிர் வளம் கொழித்து மகிழ்வோடு இருக்கும் வரம் அளித்தாள். ஊர் காவல் வேண்டி காவல் தெய்வங்களான சூலவடிவை வைத்து காவல் சேவகர்களாக வணங்கி வரும் வழிபாடு தொண்டு தொட்டு இருந்து வருகின்றது.

இவ்வாலயம் பன்நெடுங் காலமாக சிறிய ஆலயமாகவே இருந்து வந்தது. அத்துடன் இரண்டு நேர பூசை வழிபாடுகள் நடைபெற்றன. இவற்றினை எவ்விதமான உபகாரங்களும் இன்றி பிரம்மஸ்ரீ சோ.குகனேசசர்மாவின் முன்னோர்களினால் பரம்பரை பரம்பரையாக மேற்கொள்ளப்பட்டு வந்தது.

1991ஆம் ஆண்டின் இடப்பெயர்வின் பின், மீள மக்கள் 1996ஆம் ஆண்டு குடியேறியபோது மீண்டும் ஒரு நேரப் பூசை வழிபாடுகளுடன் ஆலயத்தை பராமரிக்கின்ற பணியினையும் பிரம்மஸ்ரீ சோ.குகனேசசர்மா அவர்கள் மேற்கொண்டு வந்தார். அதன் பின்பு 2015ஆம் ஆண்டு அம்பாளின் திருவருளுடன் முன்பு அலங்கார உற்சவமாக நடைபெற்று வந்த வருடாந்த உற்சவம் மகோற்சவமாக ஆரம்பிக்கப்பட்டு இவ்வருடமும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. அத்துடன் இரண்டு நேர பூசை வழிபாடுகளுடன் மாதாந்த பௌர்ணமி உற்சவம், நவராத்திரி வழிபாடு, திருவெம்பாவை பூசை வழிபாடுகள், பங்குனித் திங்கள் உற்சவம், ஆடிச் செவ்வாய் பூசை வழிபாடுகள் அடியார்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

மேலும் 2014ஆம் ஆண்டு நடைபெற்ற கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து, அம்பாள் ஆலயம் புதுப்பொலிவு பெற்று வருடா வருடம் ஒவ்வொரு வளர்ச்சிப் படியையும் அடைந்து வருகின்றது. அதாவது 2015ஆம் ஆண்டு முதலாவது மகோற்சவம் ஆரம்பிக்கப்பட்டு 2016ஆம் ஆண்டு புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டம் நடைபெற்றது. அத்துடன் 2017ஆம் ஆண்டு தேர் தரிப்பிடம் அமைக்கப்பட்டது மட்டுமல்லாமல், 2018ஆம் ஆண்டு அழகிய மணி மண்டபத்துடன் கூடிய புதிய பஞ்சதள ராஜகோபுரம் அமைக்கப்பட்டு அம்பிகையின் ஆலயம் புதுப்பொலிவுடன் அழகாகவும் புனிதமாகவும் காட்சி தருகின்றது. இவ்வாலயத்தில் அடியார் களின் ஒத்துழைப்புடன் நித்திய பூசைகள், உற்சவங்கள் பிரம்மஸ்ரீ கு.சரவணபவானந்தசர்மா அவர்களின் நிர்வாகத்தில் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

இன்றைய தேர்த்திருவிழா நன்நாளில் அம்பிகை அடியார்கள் சகல சௌபாக்கியங்களையும் பெற்று பேரானந்தப் பெருவாழ்வு அடைவார்களாக!



## தேர் ஏறி உலாவரும் அன்னை ஸ்ரீ முத்துமாரி



அகிலபுவன மாதாவாகவும், எமது ஊரின் முகவாயிலில் அமர்ந்திருந்து கருணை மழை பொழிந்து அருளாட்சி புரியும் அன்னை ஸ்ரீ முத்துமாரி அம்பிகைக்கு இன்று தேர்த்திருவிழா சிறப்பாக நடைபெறுகின்றது. இறைவனின் பஞ்ச கிருத்தியங்களில் ஒன்றாகிய அழித்தல் தொழிலைக் குறிப்பது இரதோற்சவம்.

அந்த வகையில் எம்மிடம் இருக்கின்ற நான், எனது என்கின்ற ஆணவத்தை இல்லாமல் செய்து நாங்கள், எங்களுடையது என்கின்ற உயர்ந்த எண்ணத்தை உருவாக்கி, நாமும் நல்லபடி வாழ்ந்து, மற்றவர்களும் வாழ்வதற்கு உதவிபுரிந்து எல்லோரும் இன்றைய நாளில் அம்பிகையின் தேர்வடத்தைப் பிடித்து இழுத்து உங்களது பாவப்பிணிகளை போக்கி சீரும் சிறப்புடனும் சகல செல்வங்களும் பெற்று வாழ அம்பிகைத் தாய் திருவருள் புரிய வேண்டும் என்று அன்னையைப் பிரார்த்தனை செய்து உங்கள் எல்லோருக்கும் எங்கள் நல்லாசிகள் கூறி அமைகின்றோம்.

*''லோகசமஸ்த்தா சுகினோ பவந்து''*

*"அன்னையை சரண்புகுந்தால் அதிக வரம் பெறலாம்."*

**பிரம்மஸ்ரீ கு.சரவணபவானந்தசர்மா**
**ஆதீனகுரு, (நம்பிக்கைப் பொறுப்பாளர்)**
**மடத்துக்கரை ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலயம்**
**வலந்தலை, காரைநகர்.**

## வடம்பிடிக்க வாரீர்!



காரைநகர் நுழைவாசலில் எழுந்தருளி தன்னை நாடி வருபவர்களுக்கு அருள்மழை பொழிபவள். மாரி என்றால் மழை. பொழியும் தேவி என்றால் தேன் சொரியும். மாரி மழை எப்படி இந்த மண்ணிற்கு பொழிகிறதோ மாரிஅம்மன் மண்ணிலே வாழுகின்ற அனைவருக்கும் திருவருளைப் பொழிகின்ற அன்னை இன்று அழகிய தேரிலே பவனிவர இருக்கின்றாள். ஆகவே பக்த அடியார்கள் இவ் அருள்காட்சியைத் தரிசனம் செய்து அம்பிகையின் அருளைப் பெற வடம் பிடிக்க வாரீர். தேர்த்திருவிழா சிறப்பாக நடைபெற நல்ஆசிகள் அனைவரும் இன்புற்று இருக்க "அன்னையைப் பிரார்த்திப்போமாக".

"சத்தியோயாத சிவாச்சாரியார்"

**சிவஸ்ரீ கு.சண்முகராஜக்குருக்கள்.**

**இன்று தேர் ஏறி வரும் மடத்துக்கரை முத்துமாரி அம்மன் அருள் எல்லோருக்கும் கிடைத்திட பிரார்த்திக்கின்றோம்.**

**YOGA TRANSPORT**
No:166, Wolfendal Street, Colombo - 13. T.P.: 244 5344, 077 387 4263
No:02, Thiruvalluvar Lane, Arasady Road, Kandarmadam, Jaffna. T.P.: 021 222 9042, 077 756 0682

**S.V.MURUGESU**
154, Hospital Road, Jaffna.

**ஞானம் அழகு மாடம்**
இல.87, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 0295

**சிந்துஜா**
**போட்டோ அன் வீடியோ**
பண்டித்தாழ்வு, காரைநகர். தொ.பே. 077 854 3676

**கலைமாடக்கோன் சண்முகம் சிவஞானம் குடும்பத்தினர்**
**(இன்றைய தேர்த்திருவிழா உபயகாரர்)**

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.02.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.